பக்கங்கள் : 28
விலை: ரூபா 20.00
★★

# உதயன்

சுடர் 28 | கதிர் 109 | வள்ளுவர் ஆண்டு2044 | பங்குனி 2 வெள்ளி 15.03.2013 | UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

# இலங்கை அரசு தப்ப முடியாது



"பொறுப்புடன் செயற்படுங்கள்"

## அமெரிக்கா கடும் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 15

"மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் இலங்கை அரசு உண்மையான அக்கறையை வெளிப்படுத்துவதுடன், இது விடயத்தில் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும். ஜனநாயகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகம் உதவ முன்வரும்போது அதனை இலங்கை வேறு கண்ணோட்டத்தில் தப்பாகப் பார்க்கக்கூடாது."

- இவ்வாறு தெரிவித்தார் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமெரிக்கத் தூதுவர் எய்லீன் சம்பெர்லைன் டொனஹே.

மேலும், பொறுப்புக்கூறும் கடப்பாட்டிலிருந்து இலங்கை தப்ப முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவாவில், அமெரிக்காவின் ஒரங்கக் கூட்டமொன்று நடந்து முடிந்த பின்னர், 'உதயன்' செய்தியாளரிடம் கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர் டொனஹொ, அமெரிக்காவின்

பார்க்க பக்கம் 04

## மகளிர் தின வாரத்திலும் மனைவியர் மீது தாக்கு

தென்மராட்சி, மார்ச் 15

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டுத் தென்மராட்சி பிரதேசத்தில் மகளிர் அமைப்புக்களால் மகளிர் தின விழாக்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் கணவனால் தாக்கப்பட்ட பல பெண்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

கடந்த ஏழாம் திகதி தொடக்கம் நேற்று வரையான மகளிர் தின வாரத்தில் இருபதுக்கு மேற்பட்ட பெண்கள் இவ்வாறு கணவனால் தாக்கப்பட்ட நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விழாக்களில் பெண் உரிமைகள் தொடர்பாக முழக்கமிடுவோர் பெண்

பார்க்க பக்கம் 04



## சட்ட மாணவர்கள் சட்டையின்றி ஊர்வலம்

சென்னை, மார்ச்15

இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையை இந்திய அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஆதரிக்க வேண்டும் என்றும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் போர்க்குற்றவாளி என்று அறிவித்து சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி

பார்க்க பக்கம் 04

## இந்தியாவுக்கு எதிராக போராடவே மாட்டோம்

■ தமிழரசுக் கட்சி

யாழ்ப்பாணம், மார்ச்15

இந்தியாவுக்கு எதிராக நாங்கள் ஆர்ப்பாட்டம் எதுவும் செய்யப் போவதில்லை. யாழ்ப்பாணதில் உள்ள இந்தியத் துணைத்தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்யும் எண்ணமோ, திட்

பார்க்க பக்கம் 04

## விபத்தில் இரு இளைஞர் பரிதாபச் சாவு



### திருத்தப்படும் பாலத்துக்குள் மோட்டார் சைக்கிள் பாய்ந்ததால் விபரீதம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

செம்மணி வீதியில் திருத்த வேலைகளுக்காக உடைக்கப்பட்ட நிலையில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வரும் பாலத்தினுள் விழுந்த இருவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

நேற்று முன்தினமிரவு வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதியூடாக நாவற்குழி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பார்க்க பக்கம் 04

## இலங்கை வர ஆசைதான்; கொடும்பாவி எரிப்பார்களே

■ மனம் திறந்தார் தருஸ்மன்



ஜெனிவா, மார்ச் 15

'இலங்கைக்கு வருவதற்குவதற்கான ஆசை மனதுக்குள் இருக்கின்றது. ஆனாலும் நான் வந்தால் எனது கொடும்பாவியை எரிப்பார்களே...''

- இவ்வாறு 'உதயனி'

பார்க்க பக்கம் 04



8
இந்திய ஜனாதிபதிக்கு கொலை மிரட்டல்



11
சிரியச் சண்டையில் சிறுவர்கள்



15
தலையிடி தீராது



23
இங்கிலாந்து அபாரம்

## எதிரணிக் கூட்டமைப்பு பிளவுபடும் அபாயம்

யாழ்ப்பாண்ம், மார்ச்15

10 எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள பொது எதிரணிக் கூட்டமைப்பில் உள்ளக முரண்பாடுகள் தோன்றியுள்ளதால் அது பிளவுபடும் அபாயம் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

12 எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து பொது எதிரணிக் கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டன. இதற்கமைய கடந்த பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி 10 எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து பொது எதிரணிக்

பார்க்க பக்கம் 04

## அடாத்தாகப் படைமுகாம் அமைக்கிறது இராணுவம்

■ வலி.தென்மேற்கு பிரதேசத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 15

வலி.தென் மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில், பிரதேச சபையின் அனுமதியில்லாமல் படையினர் நிரந்தர முகாம் அமைத்து வருகின்றனர் என்றுபிரதேச சபைத் தலைவர் ஜெப்நேசன் தெரிவித்தார். இந்த அடாத்தான நடவடிக்கையில் படையினர் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

'' இந்தக் காணியை இராணுவத்தி

பார்க்க பக்கம் 04

## வலி.வடக்கில் தொடர்ந்தும் வீடுகள் இடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

வலி. வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் சில கட்டடங்கள் இடித்தழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அண்மையாக உள்ள மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்ட வீடுகளின் கூரைகளும் சீருடையினரால் இரவோடு இரவாகக் கழற்றப்பட்டு வருவதாகக் தெரிவிக்கப்படுகிறது.

வலி. வடக்கில் கடந்த ஜனவரி மாத இறுதிப் பகுதியில் உயர் பாது

பார்க்க பக்கம் 04

அரிய வாய்ப்பு
சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி
3 மாதத்தில் சட்டரீதியாகச் செல்ல சட்ட ஆலோசனை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் [PV 82703]
முன்மாதிரியான சாதனை விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(34407) (10,6,7)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிபிலை இரட்டைக் கொலை; ஐவருக்கு தூக்குத் தண்டனை

கொழும்பு,மார்ச் 15
கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து பேருக்கு மொனராகலை மேல் நீதிமன்ற நீதிபதி நேற்று வியாழக்கிழமை தூக்குத் தண்டனை விதித்துத் தீப்பளித்தார்.

கடந்த 1999ஆம் ஆண்டு பிபிலை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பேரைக் கொலை செய்தமைக்காகவே இவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மொனராகலை மேல் நீதிமன்ற நீதிபதி ஜிஹான் எச்.குலதுங்க இந்தத் தீர்ப்பை விதித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் ஆதரவாளர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்தமுனி சொய்சாவின் ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டபோதே இவர்கள் இருவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர். (த)

# இலங்கை-அமெ. இடையே கடும் இராஜதந்திரப் போர்

### ஜெனிவாவில் ஏட்டிக்குப் போட்டியாகக் கூட்டங்கள்

ஜெனிவா, மார்ச் 15
ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணை குறித்து கலந்துரையாடல்கள் சூடுபிடித்துள்ளன.

பிரேரணைக்கு ஆதரவு திரட்டுவதற்காக அமெரிக்காவும் அதனை எதிர்ப்பதற்காக இலங்கையும் ஜெனிவாவில் கடுமையான இராஜதந்திரப் போரில் ஈடுபட்டுள்ளன.

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் சபை வளாகத்தில் நேற்று முன்தினம் அமெரிக்காவும் இலங்கையும் ஏட்டிக்குப் போட்டியான கூட்டங்களை நடத்தியுள்ளன.

ஆசியக் குழுவின் சார்பில் ஜோர்தான் ஒழுங்கு செய்த கூட்டத்தில் அமைச்சர் மகிந்த சமரசிங்க, போருக்குப் பிந்திய விவகாரங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

> பிரேரணைக்கு ஆதரவு திரட்டுவதற்காக அமெரிக்காவும் அதனை எதிர்ப்பதற்காக இலங்கையும் ஜெனிவாவில் கடுமையான இராஜதந்திரப் போரில் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணையைத் தோற்கடிப்பது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

அதேவேளை, இன்னொரு அறையில், அமெரிக்கா ஒழுங்கு செய்த கூட்டத்தில், இலங்கைக்கு எதிரான பிரேரணை குறித்து ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜதந்திரி எலீன் சேம்பர்லைன் தலைமையிலான அமெரிக்க குழுவினர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பிரேரணை குறித்து உறுப்பு நாடுகளுக்கு விளக்கமளித்துள்ளனர் (த)

## மாற்றுவலுவுடைய முன்னாள் போராளிகள் 19 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவுகள்

### சமூக சேவைகள் அமைச்சால் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 15
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளில், மாற்று வலுவுடைய 19 பேருக்கு சமூக சேவைகள் அமைச்சினால் சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளன என்று அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சால் சமூக சேவைகள் அமைச்சுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 11 பேருக்கும், கரைத்துறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் 7 பேருக்கும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஒரு வருக்குமாக 19 பேருக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொருவருக்கும் தலா 25ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இவர்களுக்கான காசோலைகள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம், சமூக சேவைகள் அமைச்சால் இன்றையதினம் கையளிக்கப்படவுள்ளது.

இதன் பின்னர் பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னாள் போராளிகளுக்கு வ்ழங்கப்படும் என்று கூறப்பட்டது.

இதேபோன்று, முன்னாள் போராளிகளில் மாற்றுவலுவுடையவர்கள், சுயதொழில் கொடுப்பனவு பெறுவதற்கும் இலவச வீடமைப்பு நிதி பெறுவதற்கும் சமூக சேவைகள் அமைச்சுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

# மஹிந்தவை தூக்கிலிடுங்கள்

### காடு வெட்டிக் குரு கோரிக்கை

சென்னை,மார்ச் 15
இலங்கை ஜனாதிபதி மஹிந்தவை தூக்கிலிட வேண்டும் என்று வன்னியர் சங்க மாநிலத் தலைவர் காடு வெட்டி குரு தெரிவித்தார்.

கரூரில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் போர்க்குற்றவாளியாக அறிவித்து தூக்கிலிட வேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எந்தச் சூழ்நிலையிலும் பா.ம.க. கூட்டணி வைத்துக் கொள்ளாது.

பா.ம.க. தலைவர் ராமதாஸ் பல்வேறு மாவட்டங்களுக்குச் செல்ல மாவட்ட ஆட்சியாளர்கள்தான் தடை விதித்துள்ளனர். ஆனால் தமிழக அரசு தடை விதிக்கவில்லை.

மத்திய அரசும், தி.மு.க.வும் நினைத்திருந்தால் இலங்கையில் தனி ஈழம் பெற்றுத்தந்திருக்க முடியும். அங்கு தமிழினம் அழிந்த பின்னர் அவர்களை வாழ வைப்பதாக தி.மு.க.வும், காங்கிரஸும் கூறி மக்களை ஏமாற்றுகின்றன.

வெறும் கண்துடைப்பு நாடகம்தான் டெசோவின் செயற்பாடு-என்றார் அவர். (வ)

# இலங்கை-சீனா நல்லுறவை ஊடறுக்க ஜப்பான் திட்டம்

ரோக்கியோ,மார்ச் 15
இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் அதிகரித்துள்ள சீனாவின் தலையீடுகளைக் கட்டுப்படுத்த, இலங்கையுடன் தனது கடல்சார் கூட்டணியை வலுப்படுத்திக் கொள்ள ஜப்பான் திட்டமிட்டுள்ளது.



இது தொடர்பான கூட்டறிக்கை ஒன்று, ஜப்பானிய பிரதமர் சின்சோ அபேக்கும், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பை அடுத்து வெளியிடப்படும் என்று ஜப்பானிய அதிகாரிகளை மேற்கோள்காட்டி, அந்த நாட்டின் 'அசாகி சிம்பொன்' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவைச் சுற்றி முத்துமாலை வியூகம் அமைக்கும் திட்டத்தின் கீழ், இலங்கைக்கு ஒருதொகை துறைமுக கட்டுமான உதவிகளைச் சீனா வழங்கியது.

இதன் மூலம், இலங்கைக்கு கொடை வழங்கும் நாடுகளில் முதலிடத்தில் இருந்த ஜப்பானை பின்தள்ளி விட்டு, 2009 இல் சீனா அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது.

இலங்கையுடனான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வது, சீனாவின் முத்துமாலை வியூகத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதற்கான ஒரு நகர்வு என்று ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைவான கொள்கைகளை அடிப்படையாக கொண்ட, குறிப்பாக, கடல் தொடர்பான ஐ.நா பிரகடனங்களுக்கு அமைய, சட்டத்தின் ஆட்சியின் முக்கியத்துவத்தை, ஜப்பானும் இலங்கையும் இணைந்து வெளியிடத் திட்டமிட்டுள்ள கூட்டறிக்கை உறுதிப்படுத்திக் கொள்ளவுள்ளது.

இந்தக் கூட்டறிக்கை, குறிப்பாக இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் ஜப்பானியக் கடலோரக் க்காவல்படைக்கும், இலங்கைக் கடற்படை மற்றும் ஜப்பானிய கடல்சார் தற்காப்புப்படைக்கும் இடையில் ஒத்துழைப்பை விரிவாக்கிக் கொள்வதையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

இந்து சமுத்திரக் கடற்பாதையில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் இலங்கை அமைந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறப்பிடமான அம்பாந்தோட்டையில் பெரிய துறைமுகம் ஒன்றைச் சீன முதலீட்டின் மூலம் அமைக்கப்பட்டதானது, முத்துமாலை வியூகம் சாத்தியமானதற்கு ஒரு காரணமாகும்.

இது குறித்து ஜப்பானிய வெளிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் கவலை வெளியிட்டுள்ளார். இந்தத் துறைமுகம் சீனக் கடற்படையின் இராணுவத் துறைமுகமாக மாற்றப்படக் கூடும் என்று அவர் அச்சம் வெளியிட்டுள்ளார். பொருளாதார உதவிகளின் மூலம் இந்தப் பிராந்தியத்தில் சீனா தனது தலையீடுகளை விரிவாக்கி வருகிறது.

பாகிஸ்தானில் குவாதார், பங்களாதேசில் சிட்டகொங் துறைமுகங்களை விரிவாக்கிக் கொள்ள சீனா உதவி வருவது குறிப்பிடத்தக்கது. (த)

## தும்மிந்தவின் உடல் நிலை அறிக்கை கோருகிறது மன்று

கொழும்பு, மார்ச் 15
நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் உடல்நிலை குறித்த அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு கொழும்பு மேலதிக நீதவானினால் சட்ட வைத்திய அதிகாரிக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியுமா என்பது தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த)

## இன்று மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 15
அச்சுவேலி பிரதேசத்தில் இடைக்காடு, தம்பாலைப் பிரதேசங்கள் இணுவில் கந்தசாமி கோவிலடியிருந்து கே.கே. எஸ். வீதி வரையான பிரதேசங்களில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென மின்சார சபை அறிவித்துள்ளது. (த-ரி)

## இலங்கைக்கு ஆதரவாக ஜெனிவாவில் இன்று நடக்கவிருந்த போராட்டம் ரத்து

ஜெனிவா,மார்ச் 15
இலங்கை அரசுக்கு ஆதரவாக ஜெனிவாவில் நடத்தப்படவிருந்த போராட்டம் திடீரெனக் கைவிடப்பட்டுள்ளதாகச் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதிகாரப் போட்டி காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களினால் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் நடைபெறும் கட்டடத்துக்கு முன்னால் இந்தப் போராட்டம் நடத்தப்படவிருந்தது.

இந்தப் போராட்டத்துக்காக இத்தாலியிலிருந்து ஜெனிவா செல்ல பஸ் ஆசனங்களை ஒதுக்கியவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். இன்று வெள்ளிக்கிழமை இந்தப் போராட்டம் நடத்தப்படவிருந்தது.

இந்தப் போராட்டத்தை வெளிவிவகார அமைச்சு ரத்துச் செய்யவில்லை என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார்.

தாய் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் போராட்டம் நடத்தவிருந்த இலங்கையர்கள் நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டமையினால் அதிருப்தி அடைந்துள்ளனர். போராட்டங்களின் மூலம் சிலர் சுயலாபத்தை ஈட்டிக் கொள்ள முயற்சிக்கின்றனர். இவ்வாறு போராட்டம் நடத்த இருந்த நபர் ஒருவர் தனது உறவினர்களைத் தூதரகங்களில் பணிக்கு அமர்த்தியுள்ளார்.

11 பஸ்களில் இத்தாலியிலிருந்து இலங்கையர்கள் ஜெனிவா நோக்கிச் சென்று போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

எனினும், போராட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் தங்களின் பெயரைப் பிரசாரம் செய்து கொள்வதில் காட்டிய அக்கறையினாலும், அதிகாரப் போட்டியினாலும் இந்தப் போராட்டத்தை நடத்த முடியவில்லை எனச் சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (த)

# குற்றவாளிகளைப் பொலிஸாருக்கு காட்டிக்கொடுங்கள் பொதுமக்களே

### இப்படித்தான் கோருகிறார் ஜனாதிபதியின் ஆலோசகர்

யாழ்ப்பாணம், மார்ச் 15
பொலிஸாருக்கு மக்கள் கூடிய ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குற்றம் செய்பவர்களைத் தெரிந்திருந்தாலும் மக்கள் அவர்களைக் காட்டிக் கொடுப்பதில்லை. நீங்கள் ஒருங்கிணைந்து குற்றவாளிகளைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்துங்கள் என ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜேயசிங்க தெரிவித்தார்.

முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பது குறித்த கருத்தரங்கு நேற்று நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

அரியாலை ஜே/90 கிராம அலுவலர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஒரு அரச ஊழியருக்கே இந்த நிலை என்றால் சாதாரண மக்களாகிய நாங்கள் எமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் என எப்படி எதிர்பார்க்க முடியும் என்று பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கேள்வி எழுப்பினர்.

கிராம அலுவலர் தாக்கப்பட்ட சம்பவத்தையொட்டி தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மக்கள் தெளிவாக எடுத்துக் கூறியதுடன் பொலிஸாரோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ இது விடயத்தில் இன்னமும் மௌனமாகவே உள்ளனர் எனவும் குற்றம்சாட்டினர்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜீவ விஜேயசிங்க இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அங்கு பிரசன்னமாகியிருந்த பொலிஸாரிடம் வினவினார்.

தாங்கள் இருவரைக் கைது செய்தனர் எனவும், பொது மக்கள் தம்முடன் ஒத்துழைக்கவில்லை எனவும் பொலிஸார் பதிலளித்தனர். (த-7)

# வவுனியாவை முன்னேற்றுவதற்கு மாணவர்களே பாடுபட வேண்டும்

## வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 15


வவுனியா மாவட்டத்தை ஏனைய மாவட்டங்களைப் போன்று முன்னேற்றகரமாக மாற்ற வேண்டிய பொறுப்பு இங்குள்ள மாணவர்களின் கைகளிலேயே உள்ளது. அதற்காக இன்றைய இளைய தலைமுறையினர் பாடுபட வேண்டும் என்று வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் பராசக்தி கணேசலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட விஞ்ஞான கள கற்கை நிலைய முகாமையாளர் அ.ஜெய்க்கீசனால் தயாரிக்கப்பட்ட கண்டல் இறுவட்டு வெளியீட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா மாவட்டத்தை முன்னேற்றகரமான மாவட்டமாக மாற்றவேண்டிய வல்லமை உங்களுக்கு இருக்க வேண்டும். அந்த வகையில் நீங்கள் கற்கும் ஒவ்வொரு நாள் கல்வியையும் சிறந்த சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எவனொருவன் வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்துகின்றானோ அவன் வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றான். இது அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை.

பாடசாலையில் கிடைக்கும் ஒவ்வொரு நாளையும், வகுப்பறையில் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் மிகவும் செம்மையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாணவர்களின் முக்கிய இலக்கு கல்வியாக இருக்க வேண்டும். அதனை அடைவதற்கு ஒவ்வொரு நிமிடத்தையும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு பயன்படுத்தினால் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவது மாத்திரமின்றி, அதன் பின்னரும் உங்களது மதிப்பும் கௌரவமும் உயர்வதைக் காண்பீர்கள்- என்றார். (எ)



வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்திய கச்சியப்பர் விழாவில் நடைபெற்ற கௌரவிப்பின் போது ஓய்வு பெற்ற கிராம அலுவலர் மயில்வாகனம் தியாகராசாவுக்கு வவுனியா வர்த்தகப் பிரமுகர் லயன் பி.பழனிவேல் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (402)

### நெடுங்கேணியில் எலும்புக்கூடு மீட்பு

நெடுங்கேணி, மார்ச் 15

நெடுங்கேணி ஐயன் குளம் கோயிலுக்குக் கிழக்குப் புறமாகவுள்ள காட்டுக்குள் மனித எலும்புக்கூடு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் கோயிலுக்குச் சென்ற நபர் ஒருவர் காட்டுப்பகுதியில் எலும்புக் கூடு ஒன்று இருப்பதைக் கண்டு நெடுங்கேணிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

அதனை அடுத்து அந்தப் பகுதியில் பொலிஸார் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதோடு, எலும்புக்கூடு உள்ள இடத்துக்கு பொது மக்கள் எவரையும் செல்வதற்கு படையினர் அனுமதிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது (த-400-422)

### அனிஞ்சியன்குளம் 7 ஆம் ஒழுங்கை எவருமே கவனிக்காத நிலையில்



முல்லைத்தீவு, மார்ச் 15

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அனிஞ்சியன் குளம் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட 7 ஆம் ஒழுங்கை புனரமைப்பு இன்றிக் காணப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மல்லாவி பிரதான வீதியில் இருந்து வடக்குப் பக்கமாக உள்ள இந்த ஒழுங்கையில் சுமார் 100 இக்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. மீளக்குடியமர்வு இடம்பெற்று மூன்றரை வருடங்கள் கடந்த போதும் இந்த ஒழுங்கை புனரமைப்புச் செய்யப்படவில்லை.

மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் இந்த ஒழுங்கையினூடாகச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த ஒழுங்கையின் நிலைமை பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு மக்கள் தெரிவித்தும் இன்று வரையும் கவனிப்பார் அற்ற நிலையில் காணப்படுகின்றது. (எ-415)

# சுகாதாரச் சீர்கேடுகள் நிலவியதால் மாட்டிறைச்சியை எடுத்துவரத் தடை

## மன்னார் நகர சபையின் உப தலைவர் விளக்கம்

மன்னார், மார்ச் 15

*மாந்தை மேற்கிலிருந்து மாட்டிறைச்சியை எடுத்து வருவதில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டதால் அதற்கு நகரசபையால் தடை விதிக்கப்பட்டது.*

*இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் நகரசபையின் பதில் தலைவரான ஜேம்ஸ் ஜேசுதாசன்.*

மன்னார் நகரத்தில் அமைந்துள்ள இரண்டு மாட்டிறைச்சிக் கடைகள் மூடப்பட்ட நிலையில் உள்ளமை தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேற்படி மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களை இந்த ஆண்டுக்கான கேள்விப் பத்திரத்தின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட அஹமது உசன் என்பவரிடம் கேட்டபோது; நடப்பு ஆண்டுக்கான கேள்விப் பத்திரத்தின் பிரகாரம் மன்னார் நகரில் அமைந்துள்ள 1 ஆம், 2 ஆம் இலக்க மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள் என்னால் 22 இலட்சம் ரூபாவுக்குப் பெறப்பட்டன.

ஆனால்வன்னியில்இருந்து மாடு கொண்டு வருவதற்கு மன்னார் நகரசபையால் எனக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

நான் இது தொடர்பாகப் பல தடவைகள் கடிதங்கள் மூலம் கோரிக்கை விடுத்ததன் பேரில் கடந்த மாதம் 9 ஆம் திகதியிலிருந்து மாந்தை மேற்கு பிரதேச சபையால் அனுமதி வழங்கப்பட்ட இறைச்சிக்கடையில் இருந்து மன்னார் நகரத்துக்கு இறைச்சி கொண்டு வருவதற்கான அனுமதி எனக்கு வழங்கப்பட்டது. பின்னர் இந்த அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையினால் இது வரை எனக்கு எந்தவிதப் பதிலும் வழங்கப்படாமையினால் நான் விடயத்தை வட மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வரும் வகையில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மன்னார் நகர சபையின் பதில் தலைவரான ஜேம்ஸ் ஜேசுதாசனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

மேற்படி இறைச்சிக் கடைக்காரர் தாம் மாடுகளை உயிருடன் மன்னார் நகரத்துக்குக் கொண்டு வருவதில் சிரமம் இருப்பதாகத் தெரிவித்ததன் பிரகாரம் கடந்த மாதம் 9 ஆம் திகதி மாந்தை மேற்கில் இருந்து இறைச்சியை எடுத்து வந்து விற்பனை செய்வதற்கு நகரசபைத் தலைவரால் தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் இவ்வாறு இறைச்சி எடுத்து வருவதில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற நகர சபையின் கூட்டத்தில் இதற்குத் தடை விதிக்கப்பட்டது.

பின்னர் கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற நகர சபைக் கூட்டத்திலும், 7 ஆம் திகதி மன்னார் அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலும் உரிய விதிகளுக்கு அமைவாக உயிருடன் மாடுகளைக் கொண்டு வந்து இறைச்சியாக்கி விற்பனை செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. (க-12)

# தர்மபுரத்தில் விபத்தில் சிக்கி காயமடைந்த பெண் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 15

மோட்டார் சைக்கிள்-'படி' வாகனம் மோதிக்கொண்டதில் காயமடைந்த பெண் சிகிச்சை பயனின்றி கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

வவுனியா மாதம்பைக் குளத்தைச் சேர்ந்த தே.யோகராணி (வயது-53) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் தனது சகோதரனுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு வவுனியாவில் இருந்து அக்கராயனுக்குச் செல்லும் போது தர்மபுரம் பகுதியில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது காயமடைந்த பெண் கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-ரி-4)



கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா நிகழ்வில் பங்குபற்றிய விருந்தினர்கள் மேடையில் காணப்படுகின்றனர். (6)

### குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

வவுனியா, மார்ச் 15

வவுனியா முனியப்பர் கோயிலில் இருந்து பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி வரையுள்ள சுமார் 2 கிலோமீற்றர் நீளமான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இரவில் இந்த வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மழை காலங்களில் வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பாடசாலை செல்லும் மாணவர்களும் இடர்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த வீதியால் போக்குவரத்தை மேற்கொள்ளும் இந்தப் பகுதியைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே மக்களின் நலன் கருதி இந்த வீதியைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-400,402)

# மோசமான நிலையில் கணேசபுரம் வீதி

கிளிநொச்சி, மார்ச் 15

கிளிநொச்சி கணேசபுரம் பிரதான வீதி மக்கள் பயணிக்க முடியாத நிலையில் மோசமாகக் காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் முதல் குடியேற்றத் திட்டங்களில் ஒன்றாகக் காணப்படும் கணேசபுரம் கிராமத்தில் 300 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதியாகக் காணப்படும் கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகச் செல்லும் இந்த வீதி புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளம்காரணமாக வெள்ளநீர் வீதியை குறுக்கறுத்துப் பாய்ந்து சென்றதால் ஆபத்தான குழிகள் இந்த வீதியில் தோன்றியுள்ளன.

தற்போது இந்த வீதியூடாக எந்த வகையிலும் பயணிக்க முடியாத நிலையே காணப்படுகிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு இந்த வீதியின் ஒரு பகுதியில் தற்காலிகமாக புனரமைப்பு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இன்று அந்தப் பகுதியும் முழுமையாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியைத் தினமும் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள் ஏனைய மக்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. (க-6)

# பொதுபல சேனா அணியினர் பௌத்த தலைவர்கள் அல்லர்

### சிங்கள மக்களை ஏமாற வேண்டாம் என்கிறார் வாசு

கொழும்பு, மார்ச் 15

பொதுபலசேனாவில் உள்ளவர்கள் யார்? அவர்கள் பௌத்த சமயத் தலைவர்கள் அல்லர். அவர்கள் கூறுவதை நாம் ஏற்கமுடியாது என்று தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்கப்பாட்டுக்குமானஅமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் சட்டத்துக்கு எதிராக பொதுபல சேனா செயற்படுமாயின், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், முஸ்லிம்கள் மட்டும் ஹலால் உணவுகளைக் கொள்வனவு செய்வதற்கான பொறிமுறையொன்றையும் உருவாக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

'உதயனு'க்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுபலசேனா அமைப்புப் பற்றி அவர் இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

''பொதுபலசேனா அமைப்பிலுள்ளவர்கள் யார்? அவர்கள் பௌத்த சமயத் தலைவர்கள் அல்லர். அத்துடன், அவர்கள் கூறுவதை நாம் ஏற்கவும் முடியாது. அதைக் கேட்டு சிங்கள மக்கள் ஏமாறவும் மாட்டார்கள்.

பொதுபலசேனா அமைப்பினரால் நாட்டிலுள்ள சிங்கள மக்களை ஏமாற்ற முடியாது. ஆனால், அவர்களது செயற்பாடுகள் நாட்டிலுள்ள முஸ்லிம் மக்களுக்கே பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றன. எனவே, இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிராக பொதுபல சேனா அமைப்பு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து ஆராய அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு அது தொடர்பில் ஆராய்ந்துவருகின்றது. இதன்படி ஹலால் பிரச்சினைக்கும் சுமுகமான தீர்வொன்று எட்டப்படும்.

நாட்டிலுள்ள சிங்கள, தமிழ் மக்கள் ஹலால் உணவுகளை நிராகரித்தாலும், முஸ்லிம் மக்கள் ஹலால் உணவுகளை உண்பதற்குத் தேவையான பொறிமுறையொன்று உருவாக்கப்படவேண்டும்.

பொதுபலசேனா அமைப்பினர் நாட்டின் சட்டத்துக்கு எதிராகச் செயற்படுவாராயின், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்'' - என்றார். (த-சி)

# தமிழக மீனவர்கள் சிறைப்பிடிப்பு இந்திய நாடாமன்றில் எதிரொலிப்பு

புதுடில்லி, மார்ச் 15

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என வலியுறுத்தி இலங்கைக்கு எதிரான போராட்டம் தமிழகத்தில் வலுப்பெற்று வரும் நேரத்தில், நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 70 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை நேற்று கைதுசெய்துள்ளது என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டு வருவது தொடர்பாக நேற்று டில்லி லோக்சபாவில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்.

அ.தி.மு.கவின் தம்பித்துரையும் தி.மு.க. தரப்பில் டி.கே.எஸ்.இளங்கோவனும் மத்திய அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்து பேசினர்.

சமீப காலமாக தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் போது இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் சம்பவம் அதிகரித்து வருகிறது. இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க வலியுறுத்தி இலங்கைக்கு எதிரான போராட்டம் வலுப்பெற்றும் வரும் நேரத்தில் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், சிறை பிடிக்கப்படுவதும், தமிழக அமைப்பினரை கவலை அடைய செய்துள்ளது. (த-சி)

## எதிரணிக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கூட்டமைப்பில் கைச்சாத்திட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய சோஷலிசக் கட்சி ஆகியன இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கனேசன், நவசமசமாகக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, மௌபிம மக்கள் கட்சியின் தலைவர் ஹேமகுமாரநாணயக்கார, றுகுணு மக்கள் கட்சியின் தலைவர் அருணா சொய்ஸா, ஐக்கிய மக்கள் கட்சித் தலைவர் சிறிமசிறி ஹப்பு ஆராய்ச்சி, சுதந்திர அரங்குக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி சுதர்ஷன குணரத்ன ஆகியோருடன் முஸ்லிம் தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர்.

இதில் முஸ்லிம் - தமிழ்த் தேசிய முன்னணி என்ற பெயரில் இயங்கிய கட்சியை தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் புதிய கட்சியாகத் தொடங்க அஸாத் ஸாலி முடிவு செய்துள்ளார்.

புதிய கட்சியின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கெய்கில்டன் ஹோட்டலில் இடம் பெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுக்கு எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில்லாத கட்சிகள் மற்றும் ஆளுந்தரப்பு அமைச்சர்களையும் அஸாத் ஸாலி அழைத்துள்ளமையே எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பின் பிளவுக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

தேசிய அரசு அமைப்பதனூடாக மீண்டும் அரசியலுக்குள் நுழைய முயற்சிக்கும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த அரசின் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, டிலான் பெரேரா மற்றும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, தம்மல அமிலதேரர் ஆகியோருடன் இந்த ஆரம்ப நிகழ்வுக்கு எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் உள்ளவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதனாலேயே பொது எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பிடையே கசபுணர்வு தோன்றியுள்ளது. எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

## மகளிர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதே எழுந்துள்ள பிரதான கேள்வியாக உள்ளது.

கணவனால் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் பெண்களுக்கு பிரதேச மகளிர் அமைப்பு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை என்ன எனவும் அவர்கள் கேட்டுள்ளனர். (ம-9)

## இந்தியா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டமோ கட்சிக்கு அறவேயில்லை.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்படும் பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழகம் முழுவதும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய மத்திய அரசு இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகள் யாவும் ஒருமித்த குரலில் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றன. அத்துடன் தமிழக மாணவர்களும் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூரகத்தின் முன்பாக, ஜெனிவா பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டுமென்று கோரி தமிழத் தேசியக் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக வதந்தி வெளியாகியுள்ளதாகத் தெரிவித்த சீ.வி.கே.சிவஞானம் இதில் எந்த வித உண்மையுமில்லையென்றும், இவ்வாறானதொரு போராட்டங்களை நாம் ஒரு போதும் நடத்தப்போவதில்லையென்றும், அந்த நோக்கமோ எண்ணமோ தம்மிடம் இல்லை என்றும், இதனால் மக்களைக் குழப்பமடைய வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளார். (த-5)

## இலங்கை அரசு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஒத்துழைப்பை உள்நாட்டு விடயங்களில் தலையீடு செய்யும் செயற்பாடாக கொழும்பு கருதக்கூடாது என்றும் சுட்டிக்காட்டினார்.

''பொறுப்புக்கூறும் கடப்பாட்டை முதலில் இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டும். அதிலிருந்து இலங்கை தப்ப முடியாது. மனித உரிமைகள் பாதுகாப்பில் இன்னமும் முன்னேற்றம் தேவை. கருத்துச் சுதந்திரம், சுயாதீனமான நீதித்துறை உட்பட்ட பல விடயங்களில் இலங்கை இன்னமும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு சுமார் எத்தனை நாடுகள் இதுவரை ஆதரவை அளித்துள்ளன என்று அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு ''அதை இப்போதைக்கு வெளியிடுவது நல்லதல்ல. வொஷிங்டன் அவற்றை கையாளுகின்றது '' என்று பதிலளித்தார்.(த-சி)

## வலி.வடக்கில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

காப்பு வலயத்தின் நிரந்தரப் பாதுகாப்பு வேலிக்குள் உள்ளடங்கும் வீடுகள் இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டன.

இதன் பின்னர் நேற்றுமுன்தினம் கீரிமலைப் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குள் சில கட்டடங்கள் இடித்து தரை மட்டமாக்கப்பட்டுள்ளன. சீருடையினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேலும் உயர் பாதுகாப்பு வலயத்தின் நிரந்தரப் பாதுகாப்பு வேலிக்கு அண்மையாக தெல்லிப்பழை வைத்தியசாலையின் கிழக்குப் புறமாகவுள்ள வீடுகளின் கூரைகள் இரவோடு இரவாகக் கழற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் பாவனைக்காக விடப்பட்ட பகுதியில் உள்ள மூன்று வீடுகளின் கூரைகளே சீருடையினரால் இரவோடு இரவாக அகற்றப்பட்டுள்ளன. கூரை கழற்றப்பட்ட வீடுகளில் இருந்த எஞ்சிய பொருள்களும் நேற்று மாலை சீருடையினரால் டிராக்ரரில் ஏற்றி செல்லப்பட்டதாவும் தெரிவிக்கப்பட்டது.

சீருடையினரின் இந்த நடவடிக்கை அந்தப் பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை தோற்றிவித்துள்ளது. (த- 5-86)

## விபத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தச் சம்பவத்தில் ஆனைக்கோட்டை வடக்கைச் சேர்ந்த க.பிரதீப் (வயது -23) நெடுந்தீவைச் சேர்ந்த ஆர். மோகனதீபன் (வயது -18) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர். இவர்கள் இருவரும் ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏழு மாத காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் ஆமை வேகத்திலேயே இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் குறித்த பாலம் புனரமைக்கப்படுவது தொடர்பாக அந்த வீதியில் எவ்வித அறிவுறுத்தல்களும் போடப்படவில்லை.

இரவு நேரங்களில் பயணிப்போர் குறித்த பாலம் புனரமைக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதற்கான எந்த விதமான சமிக்ஞைகளும் போடப்படவில்லை, வீதித் தடைகளும் போடப்படவில்லை.

பாலம் புனரமைப்போரின் பொறுப்பற்ற செயற்பாடே இந்த அநியாய உயிரிழப்புகளுக்குக் காரணம் என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவோர் எவ்வாறான நடைமுறைகளைப் பேண வேண்டும் என்பது தொடர்பாக உரிய அதிகாரிகளின் அறிவுறுத்தல்கள் போதுமானதாக இல்லை என்றும் மக்கள் கூறுகின்றனர்.

புனரமைப்புப் பணியாளர் இளைப்பாறுவதற்கென இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடிசையில் காவலாளி ஒருவர் இருந்துள்ளார். விடியும் வரை இந்தச் சம்பவம் தொடர்பாக அவருக்கு எதுவுமே தெரியாது என்றும் கூறப்பட்டது.

காலையில் குறித்த வீதி வழியாக பயணித்தவர்களே சடலத்தைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

ஒருவர் பாலத்தில்அடிபட்டு இறந்த நிலையிலும் மற்றவர் தண்ணீருக்குள் இருந்து சடலமாகவும் மீட்கப்பட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர்களின் சடலங்கள் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

(த-ம-7-14-17-78-135-288)

## சட்ட மாணவ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யும், மதுரையில் சட்டக் கல்லூரி மாணவர்கள் நேற்று வியாழக்கிழமை அரைநிர்வாண ஊர்வலம் நடத்தினர். 50 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

சட்டக் கல்லூரி மாணவர் சாமுண்டி தலைமையில் மதுரை மாவட்ட நீதிமன்றத்தை நோக்கி இவர்கள் சென்றனர். அதில் மாணவர்கள் மேல் சட்டையை அவிழ்த்து அரை நிர்வாணமாக ஊர்வலம் வந்தனர். மேலும் அவர்களோடு அனைத்துக் கல்லூரி மாணவர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். (வ)

## இலங்கை வர...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டம் கருத்து வெளியிட்டார் இலங்கை தொடர்பில் ஆராய ஐ.நா. செயலாளரினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவரும், சர்வதேச சட்ட நிபுணருமான மர்சூகி தருஸ்மன் .

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஓரங்க நிகழ்வுகளில் கலந்துகொள்ள வந்திருந்த அவருடன் உரையாடியபோதே மேற்படி கருத்தை நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

''இலங்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்தீர்கள்... அது இப்போது கிடப்பில் போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறதே'' என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், அறிக்கை சமர்ப்பிப்பது மட்டுமே எமது பணி. மிகுதி வேலைகளைச் செய்ய வேண்டியது ஐ.நாவின் பொறுப்பு-என்று குறிப்பிட்டார்.

'' சரி.. உங்களின் அறிக்கை சரியானது தான் என்பதில் உங்களுக்குத் திருப்தி உள்ளதா'' என்று கேட்டபோது '' நிச்சயமாக.. எனது கடமையை நான் சரியாகச் செய்திருக்கிறேன் என்று நம்புகிறேன். நாங்கள் இல்லாத எதையும் குறிப்பிடவில்லை. நடந்தவற்றை தீவிரமாக ஆராய்ந்து எமது அறிக்கையை சமர்ப்பித்தோம்'' என்றார் தருஸ்மன்

''இலங்கைக்கு வந்து நிலைமைகளைப் பார்த்து அறிக்கைகளை சமர்ப்பிக்கலாமே'' என்ற கேள்விக்கு சத்தமாக சிரித்தவாறு பதிலளித்த அவர், ''ஆசையாகத்தான் உள்ளது... இப்போது வந்தால் கொடும்பாவிகளை எரிப்பார்களே'' என்றார். (த-சி)

## அடாத்தாகப்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

னருக்கு வழங்குவதில்லையென்று பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத் தொடரில் நாம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். இந்த நிலையில் எமக்கு எதுவும் தெரிவிக்காமல் - அனுமதி பெறாமல் - இராணுவத்தினர் முகாம் அமைத்து வருகின்றனர்'' என வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தலைவர் அ.ஜெபநேசன் தெரிவித்தார்.

மாதகல் காட்டுப்புலம் ஆதார வைத்தியசாலையின் பின்னால் வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான 42 பரப்புக் காணியுள்ளது. இந்தக் காணியை முகாம் அமைப்பதற்கு வழங்குமாறு இராணுவத்தினர் கடந்த வருடம், பிரதேச சபையிடம் கேட்டிருந்தனர்.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இராணுவத்தினர் கோரிய மேற்படி காணியை வழங்குவதில்லை யென்று தீரமானிக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானம் இராணுவத்தினருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. அத்துடன் குறித்த காணியில் குப்பைகளை மீள் சுழற்சி செய்யும் வேலைத் திட்டத்தை மேறகொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக குறித்த காணியில் பிரதேச சபையினால் மதில் அமைக்கப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் குறித்த காணிக்கு வந்த இராணுவத்தினர் முகாம் அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். 51 ஆவது படைப் பிரிவினராலேயே மேற்படி நிரந்தரப் படைமுகாம் அமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர், இராணுவத்தினரிடம் நேரடியாகச் சென்று தர்க்கப்பட்ட போது, குறித்த காணி நகர அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு அமைச்சினால் தமக்கு வழங்கப்பட்டுள்ளதென்று தெரிவித்து தனிச் சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதத்தை அவர்கள் காண்பித்துள்ளனர்.

இருப்பினும் அவ்வாறான கடிதமொன்றும் பிரதேச சபைக்கு இதுவரையும் கிடைக்கவில்லை என்று தலைவர் தெரிவித்தார்.

(த-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரணிலுக்கு புதிதாகப் பிறந்திருக்கும் பிந்திய அரசியல் ஞானம்...!

**தா**ன் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்று பேச்சு வழக்கில் ஒரு வாசகம் உண்டு.

மஹிந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு, தாமும் தமது கட்சியும் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருப்பது மேற்சொன்ன வாசகத்தையே ஞாபகப்படுத்துகிறது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில், இலங்கை அரசுக்கு எதிராக, அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணை நிச்சயம் நிறைவேற்றப்படும். அதில் எந்தமாற்றமும் கிடையாது. அந்தப் பிரேரணை எமது நாட்டுக்கு எதிரானது. அதனை முறியடிப்பதற்கு, அரசுக்கு ஆதரவளிக்க நாம் தயாராக உள்ளோம்.-

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுதல் ஆகிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டால், நாம் அவற்றுக்கு ஆதரவு வழங்குவோம் - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் விளம்பி உள்ளார்.

அது குறித்து அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளவும் தாம் தயார் என்றும் ரணில் விக்கிரமசிங்க கோடி காட்டி இருக்கிறார்.

இறுதிப்போரின் போது, அரச படைகள் மனிதாபிமானத்தைக் காலால் மிதித்து மேற்கொண்டதாகக் கருதப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா.வின் அனைத்துலக விசாரணைக்குழு இலங்கைக்கு வந்து விசாரணை நடத்துவதற்கு வகைசெய்யப்பட வேண்டும் என்பதே இலங்கை அரசுக்கு ஒவ்வாமையை (அலர்ஜியை) உண்டாக்கி உள்ள பென்னம்பெரிய விவகாரம்.

இலங்கையின் எதிர்க்கட்சி இந்நாட்டு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதாக அறிவிப்பதால், இந்த இறுதி வேளையில், அதுவும் அமெரிக்கப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதற்கு ஒரு சில நாள்கள் முன்னதாகக் கொக்கரிப்பதால் எந்தவித மாற்றமும் நிகழப்போவதில்லை.

மேலும்-

உங்கள் பிரேரணையைச் சமர்ப்பிக்காதீர்கள்; எங்கள் நாட்டு அரசு உங்களோடு சேர்ந்து உழைக்கத் தயாராக உள்ளது என்று அமெரிக்காவுக்குப் பின்னால் சென்று சொல்லக்கூடிய அதீத செல்வாக்கும் கனதியும் ஐக்கிய தேசியக் கட்சியிடம் உண்டா?

அவ்வாறு இல்லையெனில், அமெரிக்காவுடன் தமக்கு மிக நெருங்கிய நட்புறவு உள்ளதால், இறுதி நேரத்தில் தனது தாளத்துக்கு அமெரிக்க வல்லரசு ஆடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் நம்ப வைக்க முயல்கிறாரா?

இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அவர்களின் அரசியல் தலைவர்கள் என்று தலையெடுத்த மிகமிகப் பலருமே ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளினாலும் ஏமாற்றப்பட்டவர்கள். அன்றில் தத்தமது சுயநலன்களுக்காகச் சோரம் போனவர்கள் என்பதே சரித்திரம்.

ஆனால்-

இலங்கை அரசுக்கு எதிராக அனைத்துலக குற்றவியல் விசாரணையை ஏற்றுக்கொள்வதா அல்லது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றி அமெரிக்கப் பிரேரணையைச் (தீர்மானத்தை) செயலிழக்கச் செய்வதா?- என்ற இரண்டு தெரிவுகளில் எதனையுமே இந்த இறுதி நேரத்தில் அரசாங்கத்தாலும் சரி தெற்கின் எதிர்க்கட்சியாலும் சரி கையில் எடுக்க இயலாது.

மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுவிட்டால், அதனால் இலங்கை அரசின், அதன் படைகளின் 'குட்டுகள்' மேலெழும்பும் என்ற அச்சம் அடிமனதில் இருந்தாலும், அதனை அரச தரப்புகள் வெளிக்காட்டுவதாக இல்லை.

மேலும், கடந்த 2011 ஆம் ஆண்டில், ஐ.நா. நிபுணர் குழு அமைக்கப்பட்டு, இலங்கைக்கு எதிரான அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்ததை இங்கே நினைவுபடுத்துவது பொருத்தம்.

நிபுணர்குழுவினரால் சுட்டிக்காட்டப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் விடயங்கள் குறித்து பொறுப்புடைமை பேணுவதற்கு உள்நாட்டிலேயே- இலங்கையிலேயே- விசாரணைக்கான பொறிமுறை அமைக்க உறுதி அளிக்கப்பட்டது. ஆனால் அந்தவாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. காற்றோடு கலந்துவிட்டது.

அதன் ஒட்டுமொத்த விளைவுதான் இப்போது இலங்கையை, அதன் ஆட்சியாளர்களை ஆட்டிப்படைக்க கங்கணம் கட்டிநிற்கிறது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற தமிழ் முதுமொழி தனிப்பட்டவர்களின் வாழ்க்கையிலும் சரி, அதிகார வர்க்கத்தினரின் செயற்பாடுகளிலும் சரி பொய்ப்பது அரிதிலும் அரிது.

ஒரு வாரம் பொறுத்திருந்தால், அனைத்துலக அணியின் பக்கமா அல்லது இலங்கை அரசின் பக்கமா நீதி என்ற தராசின் முள் சாயும் என்பது தெரிந்துவிடும். பொறுத்திருந்து பார்க்க வேண்டியதே.

# வடக்கு கடற்றொழில் அபிவிருத்திக்கு 1500 மில்லியன் ரூபா செலவிட முடிவு

## கடற்றொழில் அமைச்சு முன் வந்தது

வலி.தென்மேற்கு, மார்ச் 15

வடபகுதி மீனவர்களின் நலன் கருதி ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்யக் கடற்றொழில் அமைச்சு முன்வந்துள்ளது.

இதனை அடுத்து இது சம்பந்தமான தரவுகளைத் திரட்டுவதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்டக் கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம் மேற்கொண்டுள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்று வந்த சூழ்நிலை காரணமாக வடமாகாணத்தில் கடற்றொழில் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டிருந்தது.

பல வசதியீனங்கள் மத்தியில் கடற்றொழிலாளர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். இதனால் அவர்களுடைய வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுச் சமாதானச் சூழ்நிலை உருவானதைத் தொடர்ந்து, வடபகுதியில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்யக் கடற்றொழில் அமைச்சு முன்வந்துள்ளது.

கடந்தவாரம் கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கடற்றொழில் தேசிய மகா சபையின் பொதுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த கடற்றொழில் அமைச்சர், வடபகுதியில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக மேற்கொள்வதற்கு வசதியாக இது சம்பந்தமான தரவுகளை உடனடியாக அனுப்பி வைக்குமாறு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட கடற்றொழில் தேசிய மகா சபையின் உப தலைவரும் யாழ். மாவட்ட கிராமியக் கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவருமான என்.பொன்னம்பலத்திடம் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து, திரட்டப்பட வேண்டிய அபிவிருத்தி சம்பந்தமான தரவுகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி சம்மேளனத்துக்கு அனுப்பி வைக்குமாறு சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடற்றொழில் அபிவிருத்தி சம்பந்தமாக ஆராய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சம்மேளனத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-115)

## இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

தேசிய கலை, இலக்கிய போட்டிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட திறந்த பிரிவில் பங்கு பற்ற விரும்பும் போட்டியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டுக் கழகங்கள் பதியப்பட்டு இலக்கங்கள்

யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் வடமாகாண விளையாட்டு அமைச்சால் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்கான பதிவு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான பதிவு இலக்கங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 26 விளையாட்டுக்கழகங்களுக்கான பதிவு இலக்கங்கள் பிரதேச செயலகத்துக்கு வந்துள்ளன.

விளையாட்டுக் கழகங்கள் தமது பதிவு இலக்கத்தைப் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் பதிவுக்காக விண்ணப்பிக்காத விளையாட்டுக் கழங்கள் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## சோமாலியாவுக்கு அன்பளிப்பாக அரிசி வழங்கியதால் 62 கோடி ரூபா நஷ்டம்

கொழும்பு, மார்ச் 15

சோமாலியாவுக்கு அன்பளிப்பாக, நெல் சந்தைப்படுத்தல் சபையின் சேமிப்பில் இருந்து 6 ஆயிரத்து 987 மெற்றித் தொன் அரிசியை அரசு வழங்கியமையால் சபைக்கு 62 கோடி ரூபா வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவிக்கிறது.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் வசமிருந்த நெல்லில் 16 ஆயிரத்து 129 மெற்றித் தொன் நெல் அரிசியாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

அதன் பெறுமதி 45 கோடி ரூபா வரையிலானது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த நெல் தொகையை அரிசியாக்குவது மற்றும் ஏனைய செலவினங்கள் என்ற ரீதியில் மேலதிகமாக சபைக்கு 17 கோடி ரூபா வரையில் செலவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

## இலங்கையில் 90 வீதமானோர் குளுக்கோமா நோயால் அவதி

கொழும்பு, மார்ச் 15

நாட்டின் சனத்தொகையில் 90 வீதமானோர் 'குளுக்கோமா' நோயால் அவதியுறுகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

'குளுக்கோமா' என்பது கண்களுக்கு ஏற்படும் தாக்கத்தின் காரணமாகப் படிப்படியாக பார்வைச் குருட்டை ஏற்படுத்தும் நோயாகும். இந்த நோயால் அவதிப்படுவோரை வெளித் தோற்றத்தின் மூலம் அவதானிக்க முடியாது.

கண்களின் அழுத்தம் குறைவடைதல் அல்லது கூடுதல், நீரிழிவு நோயால் அவதிப்படுதல், குடும்பப் பரம்பரையில் எவரேனுமொரு உறவினர் 'குளுக்கோமா' நோயால் துன்புறுதல், ஏதேனுமொரு பொருள் கண்களில் கடுமையாகத் தாக்கியிருக்குமானால் அல்லது கண்ணில் பள்ளமான அடையாளம் இருக்குமானால் அத்தகைய நபர்கள் 'குளுக்கோமா' நோய்க்கு ஆளாக வாய்ப்புகள் உள்ளன.

40 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் குறைந்த பட்சமாக வருடத்தில் ஒரு தடவையாவது 'குளுக்கோமா' பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மார்ச் 12 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியை குளுக்கோமா வாரமாகப் பிரகடனம் செய்துள்ள சுகாதார அமைச்சு இந்தத் தகவல்களையும் வெளியிட்டுள்ளது. (ம-22)

## ஈழத்துக்கு வாக்கெடுப்பு கோரி மாணவர் பேரணி

### தமிழகத்தின் தஞ்சை அதிர்ந்தது



தமிழீழத்துக்கு பொது வாக்கெடுப்பு நடத்தக் கோரியும், இனப்படுகொலை யாளியான இலங்கை அரசைக் கூண்டில் ஏற்றக் கோரியும் தஞ்சை மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை மாபெரும் மாணவர் பேரணி நடைபெற்றது.

காலை 9 மணியளவில் தஞ்சை சரபோஜி கல்லூரி வாயில் கதவை பூட்டி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அங்கு 300 இற்கு மேற்பட்ட மாணவர்கள் திரண்ட நிலையில், மருது பாண்டியர் கல்லூரியின் 300 இற்கு மேற்பட்ட மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். பாரத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாண வர்களும், மாணவிகளும் அங்கு எழுச்சி முழக்கமிட்டுத் திரண்டனர்.

2 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கூடிய நிலையில் தஞ்சை சரபோஜி வாயில் மாணவர்களால் கூட்டம் நிரம்பி வழிந்தது. அங்கு நடைபெற்ற உண்ணா நிலைப் போரட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் கலந்துகொண்டன.

தமிழ்த் தேசப் பொது வுடைமைக் கட்சி தலைமைச் செயற்குழு உறுப்பினர் பழ.இராசேந்திரன், நாம் தமிழர் கட்சி ஒருகிணைப்பாளர் நல்லதுரை, உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர், மாணவர்கள் மத்தியில் உரையாற்றினர். (வ)

# வன்னி விளாங்குளத்தில் புதிய சோதனைச் சாவடி

## அச்சத்தில் தமிழ் மக்கள்

துணுக்காய், மார்ச் 15

வன்னி விளாங்குளத்தில் படையினர் புதிதாகச் சோதனைச் சாவடியை அமைந்துள்ளனர்.

மாந்தை கிழக்கிலுள்ள வன்னிவிளாங் குளத்தில் முன்னர் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள இடத்துக்கும் அருகில் இந்தச் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

இதில் நிலைகொண்டுள்ள படையினர் இந்தச் சோதனைச் சாவடிக்கு ஊடாகப் பயணிப்பவர்களின் அடையாள அட்டைகளைப் பரிசோதித்து வருகின்றனர். இந்தச் சோதனைச் சாவடிக்கு ஊடாகச் செல்லும் வீதியில் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பகுதிகளுக்குச் செல்வோர் பயணிக்கின்றனர்.

முன்னர் மூன்று முறிப்பில் இதனைப் போன்றதொரு சோதனைச் சாவடி அமைக்கப்பட்டிருந்தது.

தற்போது வன்னிவிளாங்குளத்திலும் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளமை மக்களிடையே ஒரு வித அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

போர் முடிந்து 4 வருடங்கள் ஆகிவிட்ட போதும் படையினர் ஏன் இன்னும் புதிது புதிதாகச் சோதனைச் சாவடிகளையும் முகாம்களையும்அமைக்கின்றனர் என்று கேள்வி எழுப்புகின்றனர். (சு-415)

# இராணுவ காவலரணை அகற்ற கோரிக்கை

## ஓமந்தை மக்கள் விடுக்கின்றனர்

வவுனியா, மார்ச் 15

வவுனியா ஓமந்தை வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள இராணுவக் காவலரணை பின் நகர்த்த உதவுமாறு கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஓமந்தை சேமமடு வீதி மிக நீண்ட காலமாக இராணுவத்தினரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இந்த வீதியூடாக வெலிஓயா செல்லும் வரை சுமார் 8 இராணுவ முகாம்கள் உள்ளன. இந்த முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு இடையில் நாவற்குளம், ஆறுமுகத்தான், புதுக்குளம், அயர்த்தி மோட்டை, அலைகல்லு போட்ட குளம், நொச்சிக்குளம், மாளிகை, விநாயகபுரம் மற்றும் இராமநாதங்குளம் ஆகிய பிரதேசங்களில் 2 ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

மக்களின் குடியிருப்புகளுக்கு அண்மையில் அமைந்துள்ள இராணுவ முகாம்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் பல இராணுவக் காவலரண்கள் இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளன.

ஓமந்தையில் தாய்மாரின் உடல் நலன்களை பராமரிக்கும் சுகாதார நிலையத்துக்கு அருகில் காவலரண் அமைந்திருப்பதால் கிளினிக்குக்கு வரும் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தாய்மார் தெரிவிக்கின்றனர்.

குழந்தைகள் பசியினால் அழும்போது இராணுவக் காவலரண் அண்மையில் காணப்படுவதால் குழந்தைகளுக்கு பாலூட்ட முடியாது தாய்மார் சங்கடத்துக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே கிளினிக்குக்கு வரும் பாலூட்டும் தாய்மார்களின் நலன்கருதி காவலரணை நகர்த்துமாறு அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (த-400-402)

# சிமெந்து உற்பத்திகளில் வவுனியாவில் ஆர்வம்



வவுனியா மாவட்டத்தில் சுயதொழிலில் ஈடுபடுபவர்களில் பலர் சிமெந்து உற்பத்தி பொருள்களை தயாரிப்பதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

பல்வேறு அபிவிருத்திகளை கண்டுவரும் வவுனியா மாவட்டத்தில் சிமெந்து உற்பத்திப் பொருள்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாக சிமெந்து உற்பத்திப் பொருள்களை தயாரிப்பதில் ஈடுபடுபவர்கள் தெரிவிக்கின்றனர்.

கட்டடத் தொழிலாளர்கள் துரிதகதியில் கட்டடங்களை அமைப்பதற்கென சிமெந்து உற்பத்தியாளர்களிடம் பொருள்களை கொள்வனவு செய்வதனால் அவற்றுக்கான கேள்வி அதிகரித்து வருகிறது.

மேலும், பல்வேறு தெரிவுகளுடனான தரமான உற்பத்திப் பொருள்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடிவதனால் மக்கள் தற்போது சிமெந்து பொருள்களுக்கான உற்பத்தி நிலையங்களை நாடத் தொடங்கியுள்ளனர் என்றும் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர்.

சுயதொழில் முயற்சியாளர்கள் பலரும் சிறு முதலீடுகளுடன் அந்தத் தொழிலில் ஈடுபடக் கூடியதாக உள்ளமை பலரது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்று நம்பப்படுகிறது. (எ)

# நீதிமன்றில் சத்தமிட்டவருக்கு கடூழிய சிறை

மன்னார் நீதிமன்றத்தில் சத்தமிட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்த இளைஞனுக்கு 2 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் வழக்குக்காக புதன்கிழமை நண்பகல் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அப்போது குறித்த இளைஞன் மன்றினுள் சத்தம் போட்டு, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தினார். (வ-12)

# விசுவமடு விபத்தில் அதிபர் படுகாயம்

கிளிநொச்சி, மார்ச் 15

விசுவமடு றெட்பானா ஏ-35 வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலய அதிபர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 7.40 மணியளவில் முல்லைத்தீவு றெட்பானா ஏ-35 வீதியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த அதிபர் படுகாயமடைந்த நிலையில் தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு உடனடியாக அங்கிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

விபத்தில் காயமடைந்த அதிபர் விசுவமடு தொட்டிலடியைச் சேர்ந்த எஸ்.தேவராசா (வயது-52) ஆவார். இவர் கிளிநொச்சியிலிருந்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஒ-6-555)


முதலாம் ஆண்டு நினைவு

அமரர்
சிவமலர் செல்வரத்தினம்
(அக்காச்சி)

திதி: சதுர்த்தி (15.03.2013)

தோற்றம்
25.08.1945

மறைவு
26.03.2012





கணப் பொழுதும் எண்ணவில்லை – எம்
கலங்கரை விளக்கே.....
நீ இமைப் பொழுதில் எம்மை விட்டகல்வாயென
நொடிப்பொழுதும் மறவாமல்
எம்மை மடிக்குள்ளே தினம் பொத்தி வைப்பாய்
வெடிக்குதம்மா எம் நெஞ்சு
உன்னை வேக வைத்ததனை எண்ணுகையில்.....
நீ கற்றுத் தந்ததை பற்றிக் கொண்டோம் – உன்
கற்பனைக்கும் வெற்றி கொண்டோம் அதை
பற்றிக் கொள்ள விடாது உன்னைப் பறித்துக்
கொண்டானே பாவியவன்
ஈராறு மாதங்கள் ஆனதுவோ – எம் இதயம் இன்னும்
ஆறவில்லையம்மா வேரோடு சாய்ந்தாலும் உன்
விழுதம்மா நாங்கள் பொழுதானாலும் உன்
நினைவு தான் பொழுது புலர்வதும் உன்னில் தான்
மறவோம் நாம் உன் நினைவை மறுபடி நீ
எம்மிடத்தில் உதிக்கும் வரை......
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஏழாலை மத்தி, ஏழாலை. - குடும்பத்தினர்.

(34517) (2.8.7)

# ஆயிரம் பெண்களுக்கு கடன் வழங்கிய வங்கி

## பிரதேச அபிவிருத்தியில் பங்களிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணத்தில கடந்த 9 மாத காலமாக வங்கிச் சேவையை வழங்கி வரும் பிரதேச அபிவிருத்தி வங்கி இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு சுயதொழில் வாழ்வாதாரக் கடன்களை வழங்கியுள்ளது.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் சுப்பிரமணியம் சிவலோகன் இவ்வாறு தகவல் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கிராமப்புறங்களை மையமாகக் கொண்டு நடுத்தரக் கிராமங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடியதாகக் கடந்த 9 மாத காலமாக பிரதேச வங்கி சுயதொழில் வாழ்வாதாரக் கடன்களை வழங்கி வருகிறது .

**9 மாத காலமாக பிரதேச வங்கி சுய தொழில் வாழ் வாதாரக் கடன்களை வழங்கி வருகிறது.**

கிராம மட்டத்தைச் சேர்ந்த பெண்களை 5 பேர் கொண்ட குழுக்களாக இணைத்து ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபா கடன்களை சுயதொழில் மேம்பாட்டுக்காக வழங்கி வருகின்றது.

கிராம மட்டத்தில் உள்ள சன சமூக நிலையங்களில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு இந்த மகளிர் குழுக்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட பெண்கள் இந்த மகளிர் குழுக்களில் அதிகமாக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பாகச் சுயதொழில்களுக்கான கடன் வசதிகளை வழங்கி அதனூடாக அவர்களது வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதே பிரதேச அபிவிருத்தி வங்கியின் சேவையாகவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தீவுப் பகுதிகள் உட்பட பின் தங்கிய கிராமங்களில் இந்தக் கடன் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கடன் திட்டத்தில் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இணைந்து பயன்பெற்று வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.(ம-14)

### யாழ். குடாநாட்டில்

# ஆண்டு இறுதிக்குள் சகலருக்கும் மின்சாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் 'வடக்கின் வசந்தம்' வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டில் உள்ள சகலருக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுவிடும் என்று யாழ்.மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் போரால் இடம்பெயர்ந்த பின் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்களுக்கு 'வடக்கின் வசந்தம்' வேலைத்திட்டத்தின் கீழ் இலவச மின்சார இணைப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய 2009 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 60 சதவீதமானோருக்கும், கடந்த 2012 ஆம் ஆண்டு இறுதி வரையில் 84 சதவீதமானோருக்கும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு இறுதிக்குள் அது நூறு சதவீதம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 500 மில்லியன் ரூபாவுக்கு 25 வேலைத் திட்டங்களும் 92 நீடிப்பு இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இதனால் 8 ஆயிரம் பேர் வரையில் பயனடைந்துள்ளனர். தற்போது 102 மில்லியன் ரூபாவுக்கு 5 வேலைத் திட்டங்களும், 7 நீடிப்பு இணைப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் 2 ஆயிரம் பேர் வரையில் பயனடையவுள்ளனர்.

637.77 மில்லியன் ரூபாவுக்கு,40.4 கிலோமீற்றர் நீளமான மத்தியதர வோல்ரேஜ் இணைப்புகளும், 351.8 கிலோ மீற்றர் நீளமான குறைந்தளவு வோல்ரேஜ் இணைப்புகளும், 24 உதவி நிலையங்களும் அமைக்கப்பட வேண்டியுள்ளன. இதனால் 10 ஆயிரம் பேர் வரையில் பயனடையவுள்ளனர் என்று அறிக்கை கூறுகிறது. (ம-5)

# பாரம்பரிய முறையில் கடற்றொழில் செய்வோர் எண்ணிக்கை குறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்.குடாநாட்டில் பாரம்பரிய முறையில் கடற்றொழில் செய்வோரின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது என்று கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் தகவல் தெரிவித்தது.

தற்போது 300 இற்கும் உட்பட்ட கட்டுமரங்கள், பாய் மரக்கப்பல்கள் என்பனவே பயன்பாட்டில் உள்ளன.

இந்தப் பாரம்பரிய கடற்கலங்களைப் பயன்படுத்தி வடமராட்சி பிரதேசத்தில் மட்டுமே தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

பெரும்பாலான தொழிலாளர்கள் இயந்திரப் படகுகளையே தற்போது பயன்படுத்தி வருகின்றனர் என்று மேலும் கூறப்பட்டது. (ம-17)

### யாழ். கனகரத்தினம் ம.ம.வி.

# அதிபர் நியமன முறைகேடு குறித்த விசாரணை கொழும்புக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் நியமனத்தில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், பிரதிவாதிகளான வட மாகாணக் கல்வித் திணைக்களம் உரிய காலத்தினுள் பதிலளிக்கத் தவறியுள்ளமையால் விசாரணை கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபர் வெற்றிடத்துக்குக் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

இதற்கமைய புதிய அதிபராகப் பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றியவர் நியமிக்கப்பட்டார். தனக்கு வழங்க வேண்டிய அதிபர் நியமனத்தை பாரபட்சமான முறையில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வேறொருவருக்கு வழங்கியுள்ளார் எனத் தெரிவித்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்துக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனிடம் மனித உரிமை ஆணைக்குழுவால் விளக்கம் கோரப்பட்டிருந்தது. கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட விளக்கத்தை முறைப்பாட்டாளர் ஏற்றுக் கொள்ள மறுத்து விசாரணையைக் கோரியிருந்தார்.

இதற்கமைய முதலாவது விசாரணை கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதி இடம்பெறவிருந்தபோதும், இந்த விசாரணையில் தன்னால் பங்குபற்ற முடியாதெனவும், கொழும்பு செல்ல வேண்டியிருப்பதாகவும் தெரிவித்து விசாரணையை ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் கோரியிருந்தார்.

இதன் பின்னர் விசாரணை கடந்த பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போது பிரதிவாதிகளான வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் சார்பில் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், மாகாண நிர்வாகப் பணிப்பாளர், யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

இதன்போது, மேற்படி விவகாரம் தொடர்பில் பதில் அளிப்பதற்கு 10 நாள்கள் காலஅவகாசம் கோரியிருந்தனர்.

இருப்பினும் 10 நாள் கால அவகாசம் முடிந்த பின்னரும், கல்வித் திணைக்களத்தால் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு பதில் அனுப்பப்படவில்லை.

இதனையடுத்து மேற்படி விசாரணை கொழும்பு மனித உரிமை ஆணைக்குழுவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் விரைவில் தலைமையகம் விசாரணை மேற்கொள்ளும் என்று பிராந்திய இணைப்பாளர் தெரிவித்தார். (த-5)

# இரவு நேர விபத்துக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

## போதையில் ஓட்டியோர் மாட்டினர்

வலி.வடக்கு, மார்ச் 15

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் இரவு வேளையில் மது போதையில் வாகனம் செலுத்திய ஒன்பது பேர் பொலிஸாரிடம் அகப்பட்டனர்.

இவர்கள் நீதி மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். கடந்த மூன்று நாள்களாக வீதிச் சோதனைகளில் ஈடுபட்ட பொலிஸாரிடம் இவர்கள் அகப்பட்டிருந்தனர்.

இரவு வேளைகளில் இடம்பெறும் விபத்துக்ளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பொலிஸார் இதுபோன்ற கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-86)

சிவமயம்

மண மங்கல நல் வாழ்த்துக்கள்

இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை கொழும்பு
தெஹிவளை
ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மண்டபத்தில்
திருமாங்கல்யதாரணம் செய்யும்

க.சண்முகதாஸன்
தம்பதியரின் புத்திரன்
திருநிறை செல்வன்
சேந்தன்
(சங்கானை)



வரதராஜா
தம்பதியரின் புதல்வி
திருநிறை செல்வி
லக்ஸ்மீரா

அவர்களுக்கும்
எல்லாம் வல்ல இலுப்பைத் தாழ்வு முருகன்
திருவருளோடும் ஆதீன குருமுதல்வர் சிவாகம கலாநிதி
சிவப்பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சார்யார்
அவர்களின் குருவருளோடும் இனிதே சிறப்புற நிகழ
நல்லாசிகளும் வாழ்த்துக்களும் கூறும்




இலுப்பைத்தாழ்வு,
சங்கானை.

ஸ்ரீமதி சிவ.நித்தியானந்த
சிவாச்சார்யார்
குடும்பத்தினர்.

(C/7450)(2-9-7)

NORTH LEAD COMPUTER & ACCESSORIES WHOLESALER
Tel: 021-222 4459, 0772533390. Fax : 021-222 4460



HP Mini Tower,
Processor: 3.2GHz
Intel Mother Board
1GB DDR II Ram
80 GB Sata Hard Disk
DVD Multy Player
15" Dell LCD Monitor
3 Language Keyboard
HP Optical Mouse & Pad
Multymedia USB Speaker
Head Phone With Mic
13 M.Pixal Webcamera
இவை அனைத்தும்: 19,750/
warranty: 6 Month

LAPTOP FOR SALE


| | |
|---|---|
| HP Probook 4440S<br>Intel I-3 2.40GHz<br>320GB Hard Disk<br>4GB DDR-III Ram<br>DVD Writer<br>14" Led Screen<br>Finger Print<br>HD Webcamera<br>Original Windows-7<br>**Price : 78,750** | Dell Inspiron 3320<br>Intel D.C 1.70GHz<br>320GB Hard Disk<br>2GB DDR-III Ram<br>DVD Writer<br>16.5" Led Screen<br>HD Webcamera<br>Notebook Coolar<br>Windows-7<br>**Price : 58,750** |
| Intel D.C Processor : 8550 | ATX Casing : 2475 |
| Intel I-5 M. Board : 7850 | Powerlogic Casing : 3650 |
| 500GB Hard Disk : 7600 | 1 User Kaspersky : 1500 |
| 1000GB Hard Disk :12250 | 450w Power Supply : 1550 |
| 2GB Kingstan Ram : 2550 | 650 W Techfine Ups: 4475 |
| 4GB Kingstan Ram : 3850 | 16.5" AOC Led : 10850 |
| Samsung Dvd Writer: 2775 | 19" Samsung Led : 12650 |
| Asus Dvd Writer : 3350 | 19" HP Led Display:12750 |

(C/7463)(6-7)

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம், உங்கள் கணனிகள் அனைத்தும் ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். (வியாபாரிகளுக்கு விஷேட விலையில்)

No:328,Stanly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

தவத்திரு வே.முருகேசுசுவாமி அவர்களின்
16ஆம் ஆண்டு குருபூசைத்தினம்



இடம் :சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் :20.03.2013 புதன்கிழமை
சிறப்பு இசைச் சொற்பொழிவு வழங்குபவர் :- கவிமணி க.ஆனந்தராசா
(அன்னைதாசன்)

மேற்படி குருபூசை ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆயைத்தில் இடம்பெறும். விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் சிறப்பு நிகழ்வுகளுடனும் அறுபத்து மூவர் குருபூசையுடனும் நிறைவு பெறும்.
சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் இந் நிகழ்வில் பங்குபற்றி குருவருளையும் திருவருளையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு: இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் முருகேசு சுவாமிகள் ஞாபகார்த்தமாக இடம்பெறும் வருடாந்த சங்காபிஷேகமும் சண்முகார்ச்சனையும் இடம்பெறும்.

செல்வச்சந்நிதி.
தொண்டமானாறு.

தவத்திரு வே.முருகேசு சுவாமி
அடியார்கள் சார்பில்
ஆ.அருணாசலம்.

(K/7550) (5.6.7)

## கடும் போரின் நடுவே இலங்கையுடன் செய்த

# இரகசிய உடன்படிக்கையை ஒப்புக் கொண்டது இந்தியா

டில்லி, மார்ச்.15

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் உச்சக் கட்டத்தில் இருந்தபோது, இலங்கை அரசுடன் ஏற்படுத்தியிருந்த ஒப்பந்தம் ஒன்றை இந்தியா வெளியிட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அன்ரனி இந்திய நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பூநகரியை, மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா தலைமையிலான இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவு கைப்பற்றுவதற்கு சில வாரங்கள் முன்னதாக, இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.


2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கையுடன் ஏற்படுத்தப்பட்ட இந்த இணக்கப்பாடு, தமிழ் நாட்டுக்கும் இலங்கையின் வடமேற்குப் பகுதிக்கும் இடையிலான விடுதலைப் புலிகளின் வழங்கல் பாதையைத் துண்டிக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்படுத்தப்பட்டது.

அதனடிப்படையில், இலங்கை அரசால் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களுக்குள், தமது நாட்டு மீன்பிடிப் படகுகளை அனுமதிக்கப் போவதில்லை என்று இந்திய அரசு இலங்கைக்கு உறுதியளித்தது - என்றார்.

இதேவேளை இந்தியாவுடன் இலங்கை ஏற்படுத்திக்கொண்ட இந்த இணக்கப்பாட்டின் மூலம், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் வழங்கல் நடவடிக்கையை இலங்கைக் கடற்படை துண்டிப்பது இலகுவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## சினிமா படப்பிடிப்பால் போக்குவரத்து பாதிப்பு

### ஒரு மணிநேரம் களேபரம்



பொள்ளாச்சி, மார்ச்.15

பொள்ளாச்சியில், போக்குவரத்து நிறைந்த பகுதியில், திரைப்படப்பிடிப்பு இடம் பெற்றதால் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிப்படைந்தது.

'சிவா மனசுல சக்தி', 'ஒரு கல் ஒரு கண்ணாடி' ஆகிய படங்களின் இயக்குநர் ராஜேஷின் இயக்கத்தில் நடிகர் கார்த்தி நடிக்கும் 'ஆல் இன் ஆல் அழகு ராஜா' திரைப்படப்பிடிப்பு பொள்ளாச்சி நகர் மற்றும் சுற்றுப் பகுதிகளில் ஒரு வாரமாக இடம்பெறுகின்றது.

பொள்ளாச்சி - கோவை வீதியில் உள்ள ஒரு சினிமா தியேட்டரில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற படிப்பில் நடிகர் கார்த்தி, படம் பார்த்து விட்டு வெளியில் வருவது போலவும் அப்போது அவருடைய மோட்டார் சைக்கிளை ஒருவன் திருடிச் செல்வதைப் பார்த்து திருடனைத் துரத்திச் சென்று சண்டையிடுவது போலவும் காட்சிகள் படமாக்கப்பட்டன.

கோவை வீதியில் போக்குவரத்து நெரிசல் நிறைந்த நேரத்தில் சினிமாப் படப்பிடிப்பு இடம்பெற்றதால், அந்த வீதியில் ஒரு மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

படக்குழுவினர், அந்த வழியாக வந்த வாகனங்களைத் தடுத்து நிறுத்தினர். இதனால் வாகனச்சாரதிகளுக்கும் படக்குழுவினருக்கும் வாக்குவாதம் ஏற் பட்டது. போக்குவரத்து சீரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஊர்க்காவல் படையினர் படப்பிடிப்பை நிறுத்தி விட்டு, போக்குவரத்து நெரிசலைச் சீராக்கினர். (வ)

## இந்திய ஜனாதிபதிக்கு கொலை மிரட்டல்கள்

தீவிரவாதிகளான அஜ்மல் கசாப், அப்சல் குரு ஆகியோரின் கருணை மனுக்களை நிராகரித்ததால், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு தீவிரவாதிகளிடமிருந்து கொலை மிரட்டல்கள் வந்துள்ளதாக உளவுத்துறைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மும்பை பயங்கரவாத தாக்குதல் வழக்கில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் தீவிரவாதி அஜ்மல் கசாப், கடந்த ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி புனே சிறையில் தூக்கிலிடப்பட்டார். அவரது கருணை மனுவை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நிராகரித்ததைத் தொடர்ந்து அவர் தூக்கிலிடப்பட்டார்.

அதேபோல் நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கின் குற்றவாளியான அப்சல் குருவின் கருணை மனுவை ஜனாதிபதி நிராகரித்தார்.



அதையடுத்து அவர் பெப்ரவரி 9ஆம் திகதி தூக்கிலிடப்பட்டார். இதுவரை இருந்த ஜனாதிபதிகளிலே பிரணாப் முகர்ஜி காலத்தில்தான் அதிகளவிலான தூக்குத் தண்டனைகள் நிறைவேறி வருகின்றன. அதிகளவிலான் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இரு முக்கியக் குற்ற வாளிகளின் கருணை மனுக்களை பிரணாப் நிராகரித்திருப்பதால் அவருக்கு தீவிரவாதிகளிடமிருந்து கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் உளவுத்துறைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதையடுத்து பிரணாப் முகர்ஜியின் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

## இந்தியாவிலிருந்து வெளியேற இத்தாலித் தூதுவருக்குத் தடை

### முற்றுகிறது இராஜதந்திர முறுகல்

டில்லி, மார்ச்.15

இந்தியாவுக்கான இத்தாலித் தூதர் இந்தியாவை விட்டு வெளியேற உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இத்தாலி தூதர் டேனியல் மாசினி வெளரத்துக்கே இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற அனுமதியுடன் இத்தாலி சென்ற கடற்படை வீரர்களை இத்தாலி திருப்பி அனுப்ப மறுத்துள்ள நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரபிக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் இருவரை இத்தாலிய மாலுமிகள் மாசிமிலியானோ லத்தோர், டேனியல் மான் சினி ஆகியோர்சுட்டுக்கொன்றனர். பின்னர் இருவரும் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த நிலையில் இத்தாலியின் தேர்தலில் வாக்களிப்பதற்காக உச்ச நீதிமன்ற உத்தரவுப் படி 4 வாரத்துக்கு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

முன்னதாக, கிறிஸ்மஸ் விடுமுறையில் சென்ற அவர்கள் மீண்டும் திரும்பி இந்தியாவுக்கு வந்தனர். ஆனால் தற்பொழுது அவர்களை இந்தியாவுக்கு அனுப்ப முடியாது என்று இத்தாலி அரசு கூறியுள்ளது. (வ)

## வெளியுறவு அமைச்சர் குர்ஷித் மன்மோகனுடன் ஆலோசனை

டில்லி, மார்ச்.15


இத்தாலிக் கடற்படை வீரர்களை இத்தாலி திருப்பி அனுப் பாதது குறித்து பிரதமர் மன்மோகன்சிங் குடன் வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தை அணுகுவது குறித்து முடிவெடுக்கப்பட்டதாகவும் தகவல் வெளி யாகியுள்ளது.

ஆனால் அவர்களைத் திரும்பி அனுப்ப முடியாது என்று இத்தாலிய அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை, குற்றம் சாட்டப்பட்ட வர்களை திரும்ப அனுப்பா விட்டால் இத்தாலியுடனான உறவை இந்தியா துண்டிக்க வேண்டும் என்று மீனவர் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (வ)

60 ஆவது பிறந்தநாள் நினைவு



தோற்றம்
15★03★1953
மறைவு
14★12★2010
மயில்வாகனம் சுந்தரலிங்கம்
(கிராம சேவையாளர்)

உம் பிறந்த நாளில்
நீர் இன்றி வாடுகின்றோம்
உம் நினைவுகளோடு வாழுகின்றோம்
காலங்கள் சென்றாலும்
முடியவில்லை எமைத் தேற்ற
காலனவன் தந்த கொடிய பரிசு இது

94/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உம் நினைவுகளோடு வாழும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

(34490)(2.6.7)

விற்பனைக்கு
43 Sri - x x x x Isusu டிப்பர் வாகனம் விற்பனைக்குண்டு
(தனியார் நிறுவன பாவனையில் உள்ளது)
தொடர்பு: 077 077 5656 (34510) (6.7.45)

உதயன்
விளம்பரத்
தொடர்புக்கு
021
567 1111
இன்றே தொடர்பு
கொள்ளுங்கள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04.10.1928
மறைவு 26.03.2012

அமரர் வல்லிபுரம் வடிவேலு
(ஓய்வு பெற்ற நில அளவை உதவியாளர்)
திதி: (15.03.2013) வளர்பிறை சதுர்த்தி

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.



வ.கனகரத்தினம் (மகன்)
2/2, திருவையாறு, கிளிநொச்சி.

மருதடி மேற்கு,
சாவகச்சேரி.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(34461)(6.11)

# பன்னாட்டு தபால் சேவை மீண்டும் அரசின் வசம்

## தனியாரிடம் இருந்து தற்காலிகமாகப் பொறுப்பேற்றது

கொழும்பு,மார்ச்15

விமானம் மூலமான வெளிநாடுகளுக்கு தபால் மற்றும் பொதிகளை அனுப்பும் சேவையை தனியார் நிறுவனத்திடம் இருந்து தபால் திணைக்களம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை முதல் மீண்டும் பொறுப்பேற்றது. தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் உத்தரவுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தபால் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

விமானம் மூலமான வெளிநாட்டுத் தபால் சேவைகளை தனியார் நிறுவனத்திடம் கையளிப்பதற்கு தபால் சேவைகள் அமைச்சு முன்னர் முடிவெடுத்திருந்தது. தனியார் நிறுவனத்திடம் கையளிப்பதன் மூலம் 75 மில்லியன் ரூபாவை மீதப்படுத்த முடியும் எனக் கணக்கிடப்பட்டது. நேர்த்தியான சேவையைத் தொடர்வதன் மூலம் மேலும் 50 மில்லியன் ரூபாவை மீதப்படுத்த முடியும் என்று தபால் திணைக்களம் முடிவு செய்திருந்தது.

அதற்கமைய அமைச்சரவை உபகுழுவின் ஊடாக கேள்விப் பத்திரம் கோரப்பட்டு தனியார் நிறுவனம் ஒன்றிடம் கடந்த முதலாம் திகதி முதல் சேவை ஒப்படைக்கப்பட்டது. எனினும், தபால் சேவைகள் ஆரம்பித்த நாள் முதல் அது ஒழுங்கான முறையில் முன்னெடுக்கப்படவில்லை. இது தொடர்பாக அமைச்சின் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ, தபால்மா அதிபர் ரோஹன அபயரத்ன மற்றும் அதிகாரிகள் ஆய்வுகள் நடத்தின. ஒப்பந்தம் செய்த தனியார் நிறுவனம் முறையான சேவையை வழங்கவில்லை என அதில் கண்டறியப்பபட்டது.

அதனையடுத்து அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை விசேட பேச்சு நடைபெற்றது. குறித்த நிறுவனத்துக்கு தொடர்ந்தும் சேவையை வழங்க முடியுமா என்பது பற்றி ஆராயுமாறும், இல்லையேல் உடனடியாக அவர்களது கேள்விப் பத்திரத்தை இரத்துச் செய்யுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதற்கமைய குறித்த தனியார் நிறுவனத்துக்கு மேலும் 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. விமான நிறுவனங்களுடன் உள்ள நேரடித் தொடர்புகள் குறித்த ஆவணங்கள் மற்றும் வெளிநாட்டு தபால் மற்றும் பொதிகள் சேவையை நடத்துவதற்கான அவர்களது திட்டவரைபு என்பவற்றை அமைச்சிடம் சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லையெனில் அவர்களுக்குரிய கேள்விப்பத்திர ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படும் என்று தபால் சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது. அதுவரையில் வெளிநாட்டு தபால் மற்றும் பொதிகள் சேவையை தபால் திணைக்களமே நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் பொறுப்பேற்றுள்ளது. (ச)

# புலிச் சந்தேகநபர்கள் அநுராதபுரம் சிறையில்

## வவுனியாவில் அவர்களுக்கு இடமில்லை

கொழும்பு,மார்ச்15

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று தெரிவித்து சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட எவரும் தற்போது வவுனியா சிறைச்சாலையில் இல்லை; இனிவரும் காலங்களிலும் அங்கு தடுத்து வைக்கப்படமாட்டார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறான கைதிகளை அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்படவுள்ளனர் என்று சிறைச்சாலைகள் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, மூடப்பட்டிருந்த வவுனியா சிறைச்சாலை புனரமைப்புப் பணிகளின் பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. (ச)

## ரயில் கட்டணங்களில் மாற்றங்கள் இல்லை

ரயில் கட்டணங்களில் உடனடியாக மாற்றம் செய்யப்படமாட்டாது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. தற்போது அறவிடப்படும் ரயில் கட்டணமே தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்று ரயில்வே பொது முகாமையாளர் விஜய சமரசிங்ஹ தெரிவித்தார்.

''நீண்ட தூர பயணங்களுக்காக நாளாந்தம் லட்சக் கணக்கான பயணிகள் ரயிலைப் பயன்படுத்துகின்றனர். அலுவலக ரயில்களுக்கும் கூடுதலான தேவை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே சிறந்த ரயில் சேவையை தொடர்ந்தும் வழங்குவோம் என்று அவர் கூறினார். (ச)


### உங்களது பணத்தை வீண் விரையமாக்கவோ அல்லது உயிரை ஆபத்தில் இட்டுச்செல்லவோ வேண்டாம்



**பிரெண்டன் ஓ கொணர்**
அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை தொடர்பான அமைச்சர்

இதுபற்றி மிகத் தெளிவாகக்கூற எனக்கு இடமளியுங்கள். மிகவும் நியாயமான ஒரு காரணமின்றி, எந்தவொருவருக்கும் புகலிடம் வழங்க, அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறானவர்கள் இலங்கைக்கு வரும் அடுத்த விமானத்திலேயே மீண்டும் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். எனவே, உங்கள் பணத்தை வீணாக விரையம் செய்ய வேண்டாம். உங்களது உயிரை ஆபத்தில் இட்டுச் செல்ல வேண்டாம்.

ஏற்கனவே இவ்வாறு இங்கு வந்த நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்திலும் இவ்வாறு வருபவர்கள் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள். அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற மிக நியாயமான காரணம் இல்லையேல், துரிதமாக உங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க நேரிடும். அவ்வாறானவர்களுக்கு பணம் அல்லது வேறு எந்த வகையிலான ஒத்துழைப்புக்களும் கிடைக்க மாட்டாது என்பதைக் கூறவேண்டும். தனது பணத்தை வீண் விரையம் செய்து, உயிரைப் பணயம் வைத்து, கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு வர முயற்சி செய்வது சிறிதேனும் பயனுள்ள ஒரு முயற்சியல்ல. மீண்டும் இலங்கைக்கு வரக்கிடைப்பது மாத்திரமே அதன் ஒரேயொரு பிரதிபலனாகும்.

உங்களை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல பொய் கூறுவார்கள். பொய் சத்தியம் செய்வார்கள். அவ்வாறு வருபவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை என்று நான் மீண்டும் கூறுகின்றேன். எந்தவித துரித பிரதிபலனும் கிடைப்பதில்லை. எவ்விதமான விசேட கவனிப்புகளும் கிடைக்காது.

மிகவும் ஆபத்தான முறையில் மேற்கொள்ளப்படும் படகுப் பயணங்களில் இருந்து மனிதர்களைப் பாதுகாக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் கடப்பாட்டுடன் செயற்பட்டு வருகின்றது.

### அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை எவ்வாறு மாற்றியுள்ளது?

எமது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுகளில் கடல் மார்க்கமாக வருபவர்களை, குறித்த ஒரு காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். உண்மையில், மற்றமடைந்துள்ள நடவடிக்கைகளுக்கு அமைய, சாதாரண விதிமுறைகளுக்கு அமையாத எந்தவொருவருக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ள மாட்டாது. அவுஸ்திரேலிய சர்வதேச கொள்கைகளுக்கு அமையாத அனைவரும், துரிதமாக மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள்.

எமது அரசாங்கம் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தியுள்ளது. படகுகளில் கடல் மார்க்கமாக வருபவர்களை, குறித்த ஒரு காலத்திற்கு, நாவுறு அல்லது பப்புவா நியூகினி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். உண்மையில், மற்றமடைந்துள்ள நடவடிக்கைகளுக்கு அமைய, சாதாரண விதிமுறைகளுக்கு அமையாத எந்தவொருவருக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அவுஸ்திரேலியா ஏற்ற மாட்டாது. அவுஸ்திரேலிய சர்வதே கொள்கைகளுக்கு அமையாத ...லங்கைச்




### ரஜீவனின் பயங்கரமான அந்த உண்மைச் சம்பவம்

“நான் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சுமார் 30 - 40 இலட்சம் ரூபாவைச் செலவு செய்து, சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்றேன். எம்மை கப்பல் மூலமாகவே அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார்கள். ஆனால், ரோலர் படகு ஒன்றின் மூலமாகவே நாம் அவுஸ்திரேலியா செல்லவிருக்கிறோம் என்பது, பயணம் செய்யும் தினத்திலேயே தெரிய வந்தது. நடுக்கடலில் உணவும், நீரும் இல்லாது, படகு ஒன்றில் சுமார் 30 பேர் கடும் கஷ்டத்தில் தத்தளித்தோம். ஒருசிலர் கடுமையாக நோய் வாய்ப்பட்டனர்.

இந்தோனேசியக் கடலில் எமது படகு பாரிய அலைகளுக்கு முகம்கொடுத்தது. படகுடன் நாங்கள் கடலில் மூழ்கி இறந்து விடுவோம் என்றுதான் நினைத்தோம்.

பல நாட்களின் பின்னர் எங்களை சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் என்று கைது செய்தனர். அதன்பின் எங்களை கொக்கேஸ் என்ற ஒரு தீவில் கொண்டு போய்ச் சேர்ந்தனர். வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின், எங்களை கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அழைத்துச் செல்வதாகத் தெரிய வந்தது. அங்கிருந்து மீண்டும் எங்களை பப்புவா நியூகினி அல்லது நாவுறு போன்ற தீவுகளுக்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டது. நாம் அங்கு சென்று என்ன செய்ய? எங்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறு நாம் கூறினோம். அதிஷ்டவசமாக எங்களால் மீண்டும் இலங்கைக்குத் திரும்பிவர முடிந்துள்ளது.”

(இதில் குறிப்பிடப்படும் பெயர் மாத்திரம் மாற்றப்பட்டுள்ளது)

### அவுஸ்திரேலிய அரசாங்கம் தமது கொள்கைகளை ஏன் மாற்றியது?

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்லி, போலி வாக்குறுதிகளையும் வழங்கி, எவ்வித பிரயோசனமும் அற்ற படகுச் சவாரிகளை மேற்கொள்ளும் போது, பெரும்பாலானோர் உயிரிழக்கின்றனர். இவை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு விடயமல்ல. மிகவும் பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய, படகுச் சவாரிகளினால், மக்களைக் காப்பாற்ற அவுஸ்திரேலிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதனால் அவர்களுக்கு எவ்வித பலனும் கிடைக்கப் போவதில்லை. உயிரைப் பணயம் வைத்து இங்கு வந்தாலும், அவர்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. அவர்களுக்கு கிடைக்கும் ஒரேயொரு விடயம் யாதெனில், கையிலுள்ள பணம் விரையமாவதுடன் ஆழ்கடலில் தமது உயிரை மாய்த்துக்கொள்வதும் மாத்திரமே.

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்லி, போலி வாக்குறுதிகளையும் வழங்கி, எவ்வித பிரயோசனமும் அற்ற படகுச் சவாரிகளை மேற்கொள்ளும் போது, பெரும்பாலானோர் உயிரிழக்கின்றனர். இவை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு விடயமல்ல. மிகவும் பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய, படகுச் ச... ல், மக்களைக் காப்...

**அவுஸ்திரேலியாவுக்கு படகில் போக வேண்டாம்**

Australian Government

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
07-05-1950

உதிர்வு
25-03-2004

திருமதி
## வைகுந்தராஜா தையல்நாயகி
(மண்டைதீவு)

திதி:
சதுர்த்தி



தாயின் வதனத்தை
தரிசித்த நம் கண்களுக்கு
நன்றி கூறுகையில்,
காட்சிக்கு மட்டுமல்ல
கண்ணீருக்கும் தான்
கண்கள் என்று
கதை கூறி நிற்கிறது
உங்கள் பிரிவு!
பகல் வேளை நிலவாய்
பார்வைக்கு எட்டாமல்,
வார்த்தைகளில் மௌனமாய்
செவிகளுக்கு கிட்டாமல்,
நினைவுகளை மட்டும்
நிரந்தரமாய் தந்து,
ஆண்டுகள் ஒன்பது,
ஆறாத துன்பமிது...!

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தேம்பாளகம்,
ஆடியம்பிட்டி வீதி,
சாவகச்சேரி.

(34505)(10C667)

# சிரியச் சண்டையில் சிறுவர்கள்

## தன்னார்வ தொண்டு அமைப்பு கவலை

பெய்ரூட், மார்ச் 15

சிரிய உள்நாட்டுப் போரில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்ற பன்னாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனம் கவலை வெளியிட்டுள்ளது.

மோதல்களில் ஈடுபடும் இருதரப்பினரும் சிறுவர்களை பல்வேறு பரிமாணங்களில் போரில் ஈடுபடுத்துகின்றனர் என்றும் அந்த அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இருதரப்புகளும், சுமை தாங்குவோர், உளவு நடவடிக்கைகளில் ஈடுபடுவோராகவும் மற்றும் நேரடி மோதல்களில் ஈடுபடுவோராகவும் சிறுவர்களைப் பயன்படுத்துகின்றனர் என நிதியம் குற்றம் சாட்டியுள்ளது. இரண்டாண்டு காலப் போர் சகல வழிகளிலும் சிறுவர்களைப் பாதித்துள்ளது என்றும் கவலை அது வெளியிட்டுள்ளது.

சிரியாவில் இரண்டாண்டு காலப் போரின் காரணமாக, பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் தமது உறவுகளை இழந்துள்ளனர். சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. போரால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் நலனில் சர்வதேச நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் 'சேவ் த சில்ரன்' என்ற அந்தஅமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (ற)



### அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு நான்கு பேர் உயிரிழப்பு

நியூயோர்க், மார்ச் 15

அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் இடம்பெற்ற வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து அங்குள்ள கல்லூரிகள் மூடப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைத் தேடிவரும் பொலிஸார், சம்பவங்கள் குறித்த மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

### பாகிஸ்தான் படைச்சிப்பாய் கல்லால் அடித்து கொலை

இஸ்லாமாபாத், மார்ச் 15

பாகிஸ்தானில் படைச்சிப்பாய் ஒருவர் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

பழங்குடியினர் அதிகம் வசிக்கும் குராம் எனும் கிராமத்திலேயே படைச்சிப்பாய்க்கு இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த படைச்சிப்பாய் ஓர் சுனி முஸ்லிம் எனவும், அவர் ஷியா முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவருடன் தொடர்பு பேணியதனால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகிறது. எனினும் இந்தச் சம்பவம் குறித்து பாகிஸ்தான் படையினர் எதுவித கருத்துக்களையும் தெரிவிக்க வில்லை.

பாகிஸ்தான் சுனி கடும்போக்காளர்களின் தாக்குதலில் கடந்த ஆண்டு 400 ஷியா முஸ்லிம்கள் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, இந்த ஆண்டில் இதுவரையில் 200 ஷியா முஸ்லிம்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



நேற்றுமுன்தினம் புதிய பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாம் பிரான்சிஸ், சென். பீற்றர்ஸ் தேவாலய சதுக்கத்தில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஆசி வழங்கி உரையாற்றினார். உலக அமைதிக்காகவும், சகோதரத்துவம் தழைக்கவும் பிரார்த்தனை செய்வதாகவும், உலகம் முழுவதும் அமைதி மற்றும் ஒற்றுமை நிலவவேண்டும் என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார். (ற)

### விக்கிலீக்ஸுக்கு தகவல் வழங்கிய படைச்சிப்பாயின் வாக்குமூலம் வெளியிடப்பட்டது

நியூயோர்க், மார்ச் 15

அமெரிக்க இராணுவ இரகசியங்களை விக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு வழங்கிய அமெரிக்கப் படைச்சிப்பாயின் நீதிமன்ற வாக்குமூலம் தற்போது வெளியிடப்பட்டுள் ளது.

இராணுவ இரகசியங்களை வெளியிட்டமைக்காக குறித்த படைச்சிப்பாய் 2010 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அவர் மீது 22 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு, அமெரிக்காவின் மேரிலேண்ட் இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது.

அந்த வழக்குத் தொடர்பாக படைச்சிப்பாயின் வாக்குமூலத்தை வெளியிடுவதற்கு ஊடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் தற்போது அமெரிக்காவைச் சேர்ந்த ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் அமைப்பான எப்.பி.எப். எனும் அமைப்பு படைச்சிப்பாயின் வாக்குமூலத்தைத் தனது இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்த அமைப்பு, ''நீதிமன்றங்களில் அதிகமாக ரகசியம் காக்கப்படுவது, ஜனநாயகத்துக்கு கேடு விளைவிக்கும்'' என்று குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கப் படையினர், ஈராக் தலைநகர் பாக்தாத் நகரில் நடத்திய வான்வழி தாக்குதலில் பத்திரிகையாளர் உட்படப் பலர் உயிரிழந்தனர். அந்தத் தாக்குதல் தொடர்பான ஒளிப்பதிவு மற்றும் பல்வேறு ஆதாரங்களையே குறித்த சிப்பாய் விக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## களவாடுகின்றது சீனா குற்றஞ்சாட்டும் அமெ.

வோஷிங்டன், மார்ச் 15

அமெரிக்க இரகசியத் தகவல்கள், சீனாவின் கணினி வல்லுநர்களால் திருடப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ள அமெரிக்கா, இணையப் பாதுகாப்பை அதிகரிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகர் டோம் டோனிலன் கருத்துத் தெரிவிக்கையில்,

''இணையம் மூலம் தரவுகள் திருடப்படுவது எம்மைக் கவலையடையச் செய்துள்ளது. இந்த மாதிரியான நடவடிக்கைகளை எந்த நாடு செய்தாலும், நாம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். அதற்கான பதில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அமெரிக்காவின் இணையப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஜனாதிபதி பராக் ஒபாமா கலந்துரையாடவுள்ளார்.''- என்றார்.

அமெரிக்காவின் கருத்தால் அமெரிக்க - சீன உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## காஷ்மீர் பிரச்சினைக்கு பயங்கரவாதம் தீர்வல்ல

### பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ரப்பானி கருத்து

லாகூர், மார்ச் 15

காஷ்மீர் பிரச்சினைக்குப் பயங்கரவாதம் ஓர் தீர்வாக அமையாது என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹீனா ரப்பானி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றின் பதவிக்காலம் எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. அது தொடர்பாக வெளியுறவுத்துறை அதிகாரிகளுடன் ரப்பானி சந்திப்பொன்றை நடத்தினார். அந்தச் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

''இந்தியாவுடன் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் உள்ள காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண வழக்கமான வழிகளை விடுத்து, ஆக்கப்பூர்வமாகச் சிந்திக்க வேண்டும். பயங்கரவாதமோ, இராணுவ பலமோ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது.

காஷ்மீர் குறித்துப் பேச்சுக்களை நடத்த இந்தியா மறுத்து வருகிறது. நாம் இந்தியாவுடனான பொருளாதார உறவை வளர்த்துக் கொள்வது சிறந்த வழியாக அமையும். இருநாடுகளுக்கிடையேயான உறவை வளர்த்துக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்''- என்றார். (ற)



சீனாவின் புதிய ஜனாதிபதியாக ஜிஜின்பிங் உத்தியோகபூர்வமாக நேற்று அறிவிக்கப்பட்டார். நாடாளுமன்றில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் பின்னரே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. 2 ஆயிரத்து 956 வாக்குகளில் ஜி ஜின்பிங்குக்கு ஆதரவாக 2 ஆயிரத்து 955 வாக்குகள் கிடைத்தன. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருப்பவரே ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார் என்பது சீனாவின் சட்ட விதிமுறையாகும். எனினும் நாடாளுமன்றில் இதுகுறித்து வாக்கெடுப்பு நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

## பிரேஸில் விமான விபத்து; 10 பேர் சாவு

பரா, மார்ச் 15

பிரேஸிலில் இடம்பெற்ற விமான விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். விமானத்தில் பயணம் செய்த 9 பேரும், விமானியும் விபத்தில் உயிரிழந்துள்ளனர். தனியாருக்குச் சொந்தமான சிறு விமானம் ஒன்றே விபத்துக்குள்ளாகியது என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரேஸிலின் பரா மாகாணத்தில் நீர் மின் நிலையம் ஒன்றை அமைத்துவரும் தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த பணியார்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

கட்டுமானம் நடைபெறும் இடத்துக்கும் நகரத்துக்கும் இடையே வழமையான பறப்பை மேற்கொண்டிருந்த விமானம், மான்டிடௌரடோ பகுதியில் காணாமற்போனது. அதையடுத்து தேடுதலை மேற்கொண்ட மீட்புப் படையினர், விமானத்தின் சிதைவடைந்த பகுதிகளைக் கண்டுபிடித்தனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (ற)

# பிரதேச சபைகளுக்கான அதிகாரத்தை மீளப் பெறுவதற்கு மீண்டும் எதிர்ப்பு

## உள்ளூராட்சி அமைச்சுக்கு தமிழரசுக் கட்சி கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

உள்ளூராட்சி நிறுவனங்களில் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான விடயத்தில் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீளப் பெறுதல் தொடர்பான விடயத்தை மீளாய்வில் கருத்தில் எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு இலங்கை தமிழரசுக் கட்சி மீண்டும் வலியுறுத்திக் கடிதம் அனுப்பியுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளஅந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்ளூராட்சி நிறுவனங்களில் அட்டவணைப் படுத்தப்படாத பதவி வெற்றிடம் தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் பிரதேச சபைகள், நகரசபைகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

அதில் அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கு கல்வித் தகைமை க.பொ.த. சாதாரண தரம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன் நேர்முகப் பரீட்சை நியமனம் தொடர்பில் பிரதம செயலாளரே முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து குறித்த கடிதம் சட்ட ரீதியாகப் பிழையானது எனத் தெரிவித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியால் கடந்த மாதம் 21 ஆம் திகதி பதில் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இதன் பின்னர் வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் கல்வித் தகைமை தொடர்பில் மீளாய்வு செய்யப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டு கடந்த மாதம் 26 ஆம் திகதி பதில் கடிதம் அனுப் பப்பட்டிருந்தது.

இருப்பினும், ஏற்கனவே தற்காலிக, அமைய, ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவோருக்கான முன்னுரிமை தொடர்பிலும் விண்ணப்பம் கோரப் பணித்தல், நேர் முகப் பரீட்சைக்குழு நியமித்தல் மற்றும் நியமனம் பெறுபவரைத் தெரிவு செய்தல் ஆகிய அதிகாரங்கள் தெரிவு செய்யப்பட்ட சபைகளிடமே இருத்தல் வேண்டும்கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் தங்களுக்கோ, மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கோ அனுப்ப வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படுதல் வேண்டும் போன்ற விடயங்கள் மீளாய்வுக்கு உட்படுத்துவதுதொடர்பில் பதில் கடிதத்தில் எதுவும்தெரிவிக்கப் படவில்லை

(ம-5)

# பௌத்த பண்பாட்டை பிக்குகள் மதித்துச் செயற்பட வேண்டும்

## அமைச்சர் மேர்வின் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 15

பிக்குகள் பௌத்த கலாசாரத்தை மதித்துச் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார் பொது மக்கள் தொடர்பு மற்றும் பொதுசன விவகார அமைச்சர் மேர்வின் சில்வா.

மடம்பெல்ல ஸ்ரீவர்தனாராம விகாரையில் புதன் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். ''ஹலால்' பிரச்சினை மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான விடயங்களில் பிக்குகள் தீவிரமாகச் செயற் பட்டு வரும் நிலையில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

''பிக்குகள் சமூகம் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முன்னிலை வகிக்கும் போது மல் வத்து-அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் ஒன்றாக செயற் பட வேண்டும்.

அவ்வாறின்றி வேறாகச் செயற்பட்டு வெவ்வேறு அமைப்பாக வேலை செய்தால் அது தர்மத்துக்கு அவதூறு ஏற்படுத்தும் செயலாகும்.

பல காலமாக முஸ்லிம்களும், சிங்களவர்களும் சகோதரர்களாக வாழ்ந்து வருகிறார்கள்.

இவ்வாறான நிலையில், நாட்டில் மீண்டும் இனபேதம், மதபேதம் ஏற்படுத்தப்படக் கூடாது''. -என்றார்.

(ச)


# கமலா ஸ்ருடியோ

மங்களகரமான திறப்புவிழா

மீண்டும் புதுப் பொலிவுடன்

கால காலமாக கிளிநொச்சியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் இன்று முதல் அதே இடத்தில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருவதோடு மற்றும் ஆள்கள் பதிவுத்திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை படப்பிடிப்பாளர்கள் என்பதையும் உட்புற, வெளிப்புற படப்பிடிப்புக்கள் அத்துடன் மணப் பெண்களுக்கான மேக்கப் பேசியல் அலங்கார ஒழுங்கமைப்புக்களுடனும், ஐசிங் கேக் அமைப்பு வசதிகளுடனும் இயங்குகின்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



தொடர்புகளுக்கு T.P.0770308925
A9 வீதி, கிளிநொச்சி. (24291)(2.6)


# மரண அறிவித்தல்

## குமாரசாமி கனகசபாபதி



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கனகசபாபதி 12.03.2013 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நகுலராணியின் அன்புக் கணவரும், கமலாம்பிகை, தில்லையம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரதீபாவின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும், சுதாகரனின் (பிரான்ஸ்) அன்பு மாமனும், இலக்கியா, இந்துசன், தனுஷா, தர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும், தவயோகராசா, விஜயகுமார், சுசித்திரா, சிவகுமார், உதயகுமாரி, சிவசுப்பிரமணியம், அருந்தவராணி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ந.ப.12.00 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி லேன்,
சுதுமலை தெற்கு
021 790 0736

(34474)(5,6)

தகவல்:
குடும்பத்தினர்.


உதயன் அரசுக்கு எதிராக நேர்மு

☎ 0215671111
advt@uthayan.com


# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (13.02.2013) புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்
**வல்லிபுரம் திருநாவுக்கரசு**
(கிளி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் 13.03.2013 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று(15.032.13)வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

V.C.C. மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.

(34506)(5.6.7)

குடும்பத்தினர்.

# நாலிரண்டு ஆண்டுகளில்



மண் மகிழ- 10.07.1936
கண் நெகிழ - 15.03.2005

அமரர்
**இளையவி கிருஸ்ணபிள்ளை**

நானிலத்தில் நாம் சிறக்க
நல்வழி காட்டிய
எம் தெய்வமே!
நாம் என்றும் உங்கள் நினைவுகளுடன்...

குளமங்கால், மல்லாகம்.

குடும்பத்தினர்.

(34516)(6.7.11)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்



தோற்றம்
20.07.1935

மறைவு
26.03.2012

## அமரர் தில்லையம்பலம் தெய்வேந்திரம்

கடந்த 26.03.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் தில்லையம்பலம் தெய்வேந்திரம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை மு.ப.11.00மணியளவில் நடைபெறவிருப்பதால் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(சி/7458)(5.6.7)

பரமேஸ்வரி
(பரம்-மனைவி)

# இலங்கைக்கு தலையிடி இப்போதைக்குத் தீராது

## மனோகணேசன் ஆருடம்



யாழ்ப்பாணம்,மார்ச் 15

அரசின் தலைவலி இன்னும் சில நாள்களில் முடிவடையவுள்ள ஐ.நா.மனித உரிமைக் கூட்டத் தொடருடன் முடிவுக்கு வரப்போவதில்லை. ஐ.நா.மனித உரிமைகள் சபைக் காய்ச்சல் முடிந்தவுடன் அரசுக்குப் பொதுநலவாயக் காய்ச்சல் ஆரம்பிக்கும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

அமெரிக்க, இந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் பேசும் அரசு, அமெரிக்காவுடன் பின்கதவால் சமரசம் பேசுகின்றது. இதற்காக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுப்பிரமணிய சுவாமியைத் தூதுவராகப் பயன்படுத்துகின்றது. இலங்கை அரசு பேசாமல் சுப்பிரமணிய சுவாமிக்கும் இலங்கை குடியுரிமை வழங்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்று புதன்கிழமை நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் எமது நாட்டுக்கு எதிராக பிரேரணையைக் கொண்டு வருவதற்கு அமெரிக்காவும், இந்தியாவும் சண்டித்தனம் செய்வதாக அமைச்சர் விமலின் கட்சியினர் கூப்பாடு போடுகின்றனர்.

அமைச்சர் விமலின் கட்சியைப் போலவே, அரச அமைச்சர்களும் இதே வசனத்தையே பேசுகின்றனர். ஆனால் இப்படிக் கூறும் அரசுதான் இந்திய அரசியல்வாதி சுப்பிரமணிய சுவாமியைப் பயன்படுத்தி அமெரிக்க அரசுடன் பின்கதவால் சமரசம் பேசுகின்றது. பிரேரணையின் கடுமையை மாற்றியமைக்கக் கெஞ்சுகின்றது. இதற்கு இந்திய மத்திய அரசின் முழுமையான ஆசீர்வாதம் உண்டு.

ஏனெனில் வலுவற்ற பிரேரணை வரவேண்டும் என்பதையே இந்திய மத்திய அரசும் விரும்புகின்றது. இதனால் சுப்பிரமணிய சுவாமியை இலங்கை-இந்திய அரசுகள் பயன்படுத்துகின்றன.

மூத்தோர் சபை சார்பாக நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மண்ட் டூட்டு மற்றும் அயர்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மேரி ரொபின்சனும் இலங்கை அரசின் மனித உரிமை நிலைவரத்தைப் புட்டுப் புட்டு வைத்துள்ளனர்.

அபிவிருத்தி பற்றி பேசும் அரசு, மனித உரிமை விவகாரம் தொடர்பில் கடந்த ஐ.நா.கூட்டத் தொடருக்கும் தற்போதைய கூட்டத்துக்கும் இடையில் எந்தவித மனித உரிமை அபிவிருத்தியையும் காணவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை அடுத்து வழமையான சம்பிரதாயத்தின் அடிப்படையில் பொதுநலவாய சம்மேளனத்தின் தலைமைப் பொறுப்பை இலங்கைக்கு வழங்க முடியுமா என்றும் கேள்வியெழுப்பியுள்ளனர். இது இலங்கை அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை- என்றார்.

காணாமற்போனோர் தொடர்பான பேரணிக்கு அரசு பல கட்டுப்பாடுகளை விதித்தது. அத்துடன் கொழும்பில் கவனவீர்ப்பு நடத்தவிடாமல் அரசு தடுத்தது.

கடந்த ஜெனிவாக் கூட்டத்தின் போது கொழும்பில் பெரும் ஆரவாரம் ஏற்பட்டது. சுவர்களில் சுவரொட்டிகளும், தெருக்களில் பேரணிக் கோஷங்களும் உலகநாடுகளைத் திட்டித் தீர்த்தன.

இன்று கொழும்பு சூடாக இருக்கின்றது. ஆனால் ஆரவாரம் இல்லை. அதனால் தானோ என்னவோ சொல்லொணாத் துன்பங்களின் மத்தியில் வாழும் மக்களைப் பிடித்து பலவந்தமாக அரசு சார்பான ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். இதனை யார் நம்பப் போகின்றனர். இந்தப் பலவந்த ஊர்வலங்களை நடத்த அரசுக்கு வெட்கமில்லையா? -என்றார். (த-5)

# சட்டத்தை கையில் எடுக்க சமயத்தின் பேரால் முடியாது

## பொதுபலசேனாவுக்கு அமைச்சர் சாட்டை



கொழும்பு,மார்ச் 15

தமது சமயத்தை பாதுகாத்தல் என்ற போர்வையில் எந்தவொரு அமைப்பும் சட்டத்தைக் கையில் எடுக்க முடியாது என்று நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பொதுபலசேனா, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுக்கே அமைச்சர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார் என்று கருதப்படுகிறது.

அரச தகவல் திணைக்களத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

''இலங்கையில் இன மோதல் ஒன்றை உருவாக்கச் சில அமைப்புக்கள் முயன்று கொண்டிருக்கின்றன. எனினும் அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

'ஹலால்' சான்றிதழ் வழங்குவதை அடிப்படையாக வைத்தே இன்று இலங்கையில் இன முறுகல் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. இன ஒற்றுமையைப் பாதுகாப்பதில் அரசு அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது''- என்றார். (ச)

# வெலிக்கடை சிறைக்குள் கஞ்சா வியாபாரம்

கொழும்பு,மார்ச்15

வெலிக்கடை சிறைச்சாலைக்குள் நடக்கும் கஞ்சா போதைப்பொருள் வியாபாரம் தொடர்பான தகவல்களை பொலிஸார் திரட்டியுள்ளனர்.

சுமார் 10 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளுடன் வெலிக்கடை, மாதின்னாகொட பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டதையடுத்தே பொலிஸாருக்கு இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

கஞ்சா போதைப்பொருளை கொள்வனவு செய்யும் ஒருவரிடமிருந்து கிடைத்த தகவலின் பிரகாரம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள் ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# லஞ்ச, ஊழல் குற்றங்களை வேடிக்கை பார்க்கும் ஆட்சி

## மஹிந்த அரசை சாடுகிறார் பொன்சேகா

கொழும்பு,மார்ச்15

நாட்டில் லஞ்ச ஊழல்கள், மோசடிகள், அடாவடித்தனம் ஆகியன அதிகம் இடம்பெற்று வருகின்றன. ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்தாமல் ஆட்சியாளர்கள் வேடிக்கை பார்த்து வருகின்றனர் என்று முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

பண்டாரவளை பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

''அரசின் போலி வாக்குறுதிகளால் நாடு பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. 2005 ஆம் ஆண்டு முதல் இந்த அரசுடன் இணைந்து கடமையாற்றினேன். ஆனால் அரசு போலி வாக்குறுதிகளை அளித்துள்ளது. அதனால் நாடு பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளது.

வீதிகளை அமைப்பதன் மூலம் தரகுப் பணம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. கடன் சுமை மக்கள் மீது திணிக்கப்படுகின்றது. சுதந்திரத்தின் பின்னர் ஆட்சி செய்த எந்த அரசும் நாட்டை அபிவிருத்தி செய்யவில்லை''-என்றார். (ச)

**உடன் விற்பனைக்கு**

JU-XXXX இலக்க Honda CD-200
விற்பனைக்கு
தொடர்பு:150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
0712214114 (34507)(6.7.11)

**வீடு வாடகைக்கு உண்டு**

A-9 வீதி, மாங்குளம்
தொடர்பு: 0719061942
(26177) (6.7.11)

ஓம் சக்தி

**வட்டுக்கோட்டை- சங்கரத்தை பிட்டியம்பதி உறை**

**வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா-2013**

அம்பிகை அடியார்களே!

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நிகழ்வுறும் நந்தன வருடம் பங்குனி மாதம் 03 ஆம் நாள் நாளை (16.03.2013) சனிக்கிழமை ந.ப 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் உற்சவம் நடைபெறத் திருவருள் கை கூடியுள்ளது.

அனைவரும் வருக அம்மை அப்பன் அருள் பெறுக!

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (34485)(6.7.11) ஆலய அறங்காவலர்கள்.

**யாழ்ப்பாணம் -தென்மராட்சி கிழக்கு -கரம்பகம் திருவருள்மிகு வீரபத்திரப் பெருமான் ஆலய**

**மஹா கும்பாபிஷேகம்**











**வீரபத்திரப் பெருமான் அடியார்களே!**

யாழ்ப்பாணத்து தென்மராட்சிப் பிரிவில் கரம்பகம் பகுதியில் கோயில்கொண்டு எழுந்தருளி, அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வீரபத்திரப் பெருமானிற்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான நந்தன வருட பங்குனி மாதம் 5ஆம் நாள் (18.03.2013) திங்கட்கிழமை ரோகிணி நட்சத்திரமும் இடப இலக்கினமும் அமிர்தயோகமும் ஸப்தமி திதியும் கூடிய சுபமுகூர்த்தத்தில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. இப்புண்ணிய காலங்களில் அடியார்கள் அனைவரும் வருகைதந்து நடைபெற உள்ள கிரியைகளைத் தரிசித்து எல்லாம் வல்ல வீரபத்திரப் பெருமானின் திருவருளைப் பெற்று உய்தி பெறுவீர்களாக.

**கிரியைகள் விவரம்**

**16.03.2013 சனிக்கிழமை பங்குனி மாதம் 3ஆம் நாள் கர்மாரம்பம்**
காலை 6.35 மணி விநாயக வழிபாடு, தொடர்ந்து திரவிய சுத்தி, கணபதி ஹோமம், அனுக்ஞை, கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி, பூசைகள் நடைபெறும்.
பகல் 11 - 12 மணி யந்திர விம்பஸ்தாபனம்

**எண்ணெய்க்காப்பு**

**17.03.2013 ஞாயிற்றுக்கிழமை பங்குனிமாதம் 4ஆம் நாள்**
காலை 7.00 மணிமுதல் பி.ப 4.00மணிவரை எண்ணெய்க்காப்பு இடம்பெறும்

**மஹா கும்பாபிஷேகம்**

**18.03.2013 திங்கட்கிழமை பங்குனிமாதம் 5ஆம் நாள்**
மு.ப 10.17 முதல் 11.29 வரை வளர்பிறை ஸப்தமி திதியும், ரோகிணி நட்சத்திரமும் இடப லக்கினமும் அமிர்தயோகமும் கூடிய சுபவேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

**பிரதிஷ்டா சிவாச்சாரியார்கள்**

கிரியாமணி, சிவாகம கிரியா தத்துவநிதி
வாமதேவ சிவாச்சாரியார்
**சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்**
(அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் தர்மகர்த்தா)

கிரியாமணி அருள்வாக்குச் சித்தர்
**சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக்குருக்கள்**
(உசன் கந்தசாமி கோயில் மிருசுவில்)

ஆலய பூசகர்:
**வல்லிபுரம் சபாரத்தினம்**
(கரம்பகம் வீரபத்திரர் ஆலயம்)

பிரதிஷ்டா சிவாச்சாரியார்கள் தலைமையில் ஏனைய சிவாச்சாரியார்களும் இணைந்து **மஹா கும்பாபிஷேகத்தினை** நடத்தி வைப்பார்கள்.
அனைவரும் வருக. எம்பெருமான் அருள் பெறுக.

கரம்பகம்,
மிருசுவில். (ச/3474)(6.7)

இங்ஙனம்:
நிர்வாக சபையினர்.

# மொபைல் போன்களுக்கு நிகராக செயற்படும் கார் கண்ணாடி




விண்ட்ஸ் ஸ்கிரீன் எனப்படும் காரின் கண்ணாடிகளில் கைபேசியிலிருந்து வரும் அழைப்புக்கள் மற்றும் GPS தொடர்பான தகவல்களை பிம்பமாகத் தெரியப்படுத்தும் தொழில்நுட்பம் அறிமுகமாகியுள்ளது.

இத்தொழில்நுட்பமானது ஜெனீவாவில் இடம்பெற்ற மோட்டார் வாகனக் கண்காட்சி ஒன்றில் முதன் முதலாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

Harman's Head UpDisplay System (HUD) எனப்படும் இத்தொழில்நுட்பத்தின் மூலம் தொடுதிரைத் தொழில்நுட்பத்துக்கு நிகரான அனுபவம் கிடைக்கப் பெறுவதோடு பாதுகாப்பானதாகவும் காணப்படுகின்றது.

## விண்வெளியில் DNA மூலக்கூறுகள் கண்டுபிடிப்பு

உயிரங்கிகளின் இயல்பு களை சந்ததிக்குச் சந்ததி கடத்திச் செல்வதில் பாரிய பங்கு வகிக்கும் நிறமூர்த்தங்கள் அடங்கிய DNA மூலக் கூறுகள் விண்வெளியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

NRAO எனும் விண் வெளியியல் நிறுவனத்தில் பணிபுரியும் Tony Remijan மற்றும் அவரது குழுவினரால் இந்த DNA மூலக்கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வேற்றுக்கிரகவாசிகளின் நடமாட்டம் தொடர்பாக பல சர்ச்சைகள் காணப்படுகின்ற வேளையில், இவ்வாறு DNA மூலக்கூறுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் அது பூமிக்கு வெளியில் வேறு உயிரினங்கள் வாழ்வதை மேலும் உறுதிப்படுத்துவ தாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாக்குத் தவறியதால் பல மில்லியன் யூரோ அபராதமாகச் செலுத்திய Microsoft

உலக அளவில் பிரபலமான மென்பொருள் நிறுவனமான மைக்ரோசொப்ட், தாம் தயாரித்த மென்பொருளை உபயோகிக்கும் வாடிக்கையாளர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாததால் பல மில்லியன் டொலர் களை அபராதமாகச் செலுத்தி யுள்ளது.

அமெரிக்காவின் மைக்ரோ சொப்ட் நிறுவனம், தங்களு டைய தயாரிப்பான கணினி மென்பொருள் பழுதடைந்தால் அதைப்பயன்படுத்துபவர்கள், அவர்களுக்கு விருப்பமான மென் பொருளை உபயோகப்படுத்தி இணையத்தள பயன்பாட்டைப் பெறலாம் என்று அறிவித்திருந் தது.

ஆனால், அந்தநிறுவனம் அறிவித்தது போன்று எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள வில்லை. இதனால் இணையத் தளத்தை உபயோகித்த 15 மில்லியன் மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளானார்கள் எனத் தெரிய வந்தது.

இத்தவறைப் புரிந்த மைக் ரோசொப்ட் நிறுவனம், அதற் காகப் பொறுப்பேற்றுக்கொண் டது.

எனினும், இது வாடிக்கை யாளர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தியதால் அந்நிறுவனத் திற்கு 561 மில்லியன் யூரோ அபராதம் விதிக்கப்பட்டது.

> அமெரிக்காவின் மைக்ரோ சொப்ட் நிறுவனம், தங்களுடைய தயாரிப்பான கணினி மென்பொருள் பழுதடைந்தால் அதை பயன்படுத்துபவர்கள், அவர்களுக்கு விருப்பமான மென் பொருளை உபயோகப்படுத்தி இணையத்தள பயன்பாட்டைப் பெறலாம் என்று அறிவித்திருந்தது. ஆனால், அந்நிறுவனம் அறிவித்தது போன்று எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

## Angry Bird மூலப் பதிப்பை இலவசமாக பெற்றுக் கொள்ள..

கணினி விளையாட்டுப்பிரியர்களை கட்டிப்போட்ட விளையாட்டுக்களில் ஒன்றாக Angry Bird காணப்படுகின்றது.


தற்போது இதன் மூலப்பதிப்பை முற் றிலும் இலவசமான முறையில் அப்பிளின் iOS சாதனங்களுக்காக பெற்றுக்கொள்ளக்கூடிய தாகக் காணப்படுகின்றது.

2009ம் ஆண்டளவில் அறிமுகப்படுத் தப்பட்ட இக்கணினி விளையாட்டானது ஆரம்பத்தில் 0.99 டொலர்களாகவும், iPhone, iPod ஆகிறவற்றுக்கென 2.99 டொலர்களிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் புதிய இலவசப் பதிப்பில் 15 மட்டங்கள் வரையே காணப்படுகின்றது. இணையத்தள முகவரி

itunes.apple.com

# கூகுள் அறிமுகப்படுத்தும் பேசும் காலணிகள்



கணினி தொடர்பான விற்பனை மற்றும் சேவைகளில் அமெரிக்காவின் கூகுள் நிறுவனம் அதிநவீன வளர்ச்சியுடன் முதன்மை பெற்றுத் திகழ்கின்றது.

இந்நிறுவனம் தங்களுடைய புதிய விளம்பர உத்தியான கலை, நக லெடுத்தல் மற்றும் குறியீடு தொடர்புகளை சிறப்பிக்கும் வண்ணம் புதுமை களைப் புகுத்தி வருகின்றது. கூகுள் கண்ணாடி மூலம் கைகளின் உதவி இல்லா மல், வலைத்தள தொடர்பை ஏற்படுத்த முடியும் என்று காட்டிய இந்நிறுவனம் தற்போது பேசும் காலணிகள் மூலம் தங்களது விளம்பர உத்தியை வெளியிட்டுள்ளது. அடிடாஸ் நிறுவனத்தின் விளையாட்டுக் காலணிகளைத் தேர்வு செய்து, சிறிய கணினி, அக்சிலரோமீற்றர், கைராஸ்கோப், அழுத்தத்தைக் குறிக்கும் சென்சார்கள், ஒலிபெருக்கி மற்றும் புளூ ருத் போன்றவற்றை கூகுள் நிறுவனம் பொருத்தியுள்ளது.

ஒருவர் இந்தக் காலணிகளை அணிந்துகொண்டால், அவர்கள் செய்துகொண்டிருப்பதை புளூ ருத் மூலம் அவரின் தொலைபேசிக்கோ, ஒலிபெருக்கி மூலம் அவருக்கோ தகவல் பெறமுடியும். இந்த முயற்சி, ஒருவர் தான் உபயோகிக்கும் பொருள்கள் மூலம் வலைத்தளத்தில் தகவல்கள் கூறலாம் என்பதைத் தெரிவிப்பதாக, இந்த விளம்பர மையத்தின் அதிகாரி, அமான் கோவில் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இதனை நகலெடுத்து உருவகப்படுத்தினால், இந்தக் காலணிகள் பேசும் தன்மை கொண்டவையாக இருக்கும் என்றார்.





“வாக்குக்காக எவனும் எதையும் செய்வான். யார் காலையும் நக்குவான். இதற்கு யாரும் விதிவிலக்கு இல்லை” என்று தந்தை பெரியார் அன்று சொன்னார். அதற்காக, ஈழத் தமிழர் பிணங்களையுமா?

# அன்று பராசக்தி இன்று ‘பல்டி’யே சக்தி!

‘சாந்தா அல்லது பழனியப்பன்’ - இது கருணாநிதி போட்ட முதல் நாடகம். ‘‘டெசோ அல்லது புஸ்லோ’ - இது கருணாநிதி நடத்த ஆரம்பித்திருக்கும் இறுதி நாடகம்.

கோபாலபுரம் வீட்டு வாசலில் முதலமைச்சர் கார் வந்து நிற்க ஆரம்பித்தால், ‘‘தமிழினத் தலைவர்’ நாற்காலியைப் புறவாசலில் கொண்டுபோய்ப் போட்டு விடுவதும், அந்தக் கார் காணாமல் போனால், தூசி தட்டி ‘‘தமிழினத் தலைவர்’ நாற்காலியை எடுத்துவந்து உட்காருவதும் கருணாநிதிக்குக் கைவந்த கலை.

இந்த நூற்றாண்டின் வரலாற்றுச் சோகமான ஈழத் தமிழர் வாழ்க்கையை வைத்தும் அவர் இப்படி நாடகம் ஆடுவதைத் தான் பார்க்கச் சகிக்கவில்லை.

ஈழத்தில் கொடுமை நடந்து 100 ஆண்டுகள் ஆகிவிடவில்லை. மூன்று ஆண்டுகளே முழுமையாக கழிந்துள்ளன. அந்த அவலம் அரங்கேறியபோது, தமிழ்நாட்டின் அதிகாரம் பொருந்திய நாற்காலியில் அமைச்சர்களோடு அமர்ந்து நாளொரு பாராட்டு விழா, நித்தம் ஒரு கொண்டாட்டம், கவர்ச்சி ஆட்டம்பாட்டங்களைக் கண்டுகளித்தவர் கருணாநிதி. அப்போது அவரது கட்சியின் தயவை நம்பித்தான் மத்தியில் காங்கிரஸ் அரசாங்கம் இருந்தது.

மன்மோகன், சோனியா, பிரணாப் முகர்ஜி ஆகிய மூன்று அதிகார மையங்களிடமும் அரை மணி நேரத்தில் தொடர்பு கொண்டு, தான் நினைத்ததைச் சொல்லும் சக்தி கருணாநிதிக்கு அப்போது இருந்தது.

அப்போதெல்லாம் ‘கேளாக் காதினராய்’, ‘பாராக் கண்ணுடையவராய்’ இருந்துவிட்டு, ‘‘என்னது சிவாஜி செத்துட்டாரா?’ என்று மறதி நாயகன் கேட்பதுபோல, இப்போது ‘‘ஈழத்தில் எவ்வளவு அவலம் பார்த்தாயா உடன்பிறப்பே!’ என்று கேட்பது சினிமாவுக்கு வேண்டுமானால் சிரிப்பைத் தரலாம்; அரசியலில் இதற்குப் பெயர் துரோகம்; பச்சைத் துரோகம்.

முதலமைச்சராக இருக்கும்போது ஒரு பேச்சு; எதிர்க் கட்சி ஆனதும் மறுபேச்சு. நரம்பு இல்லாத நாக்கு எப்படி வேண்டுமானாலும் வளையும் என்பார்கள். ஆனால், இப்படியெல்லாம் வளைய முடியுமா என்று கருணாநிதியின் அறிக்கைகளைப் பார்த்து அதிர்ச்சியடையத்தான் வேண்டும். கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக கருணாநிதி எதையெல்லாம் சொல்லிவந்தாரோ, அதை எல்லாம் கடந்த இரண்டு, மூன்று வாரங்களாக ‘உல்டா’ அடிக்க ஆரம்பித்திருக்கிறார்.

இலங்கையைச் சர்வாதிகாரப் பாதையில் செலுத்திக்கொண்டு இருக்கும் ராஜபக்ஷவை, மனித உரிமைகள், மனிதநேயம் ஆகியவற்றுக்கு எதிராகப் பல்வேறு வகையான போர்க் குற்றங்களைப் புரிந்த சர்வதேசக் குற்றவாளி என உலக நாடுகள் பார்க்கின்றன. அவர் இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று கேட்கும் அளவுக்குப் பேசி இருக்கிறார்.

சிங்களப் பேரினவாதத்தின் சின்னம் ராஜபக்ஷ. நமது இந்தியப் பேரரசு தற்போதாவது விழித்துக்கொண்டு ராஜபக்ஷவின் சுயஉருவத்தையும், குணத்தையும், நோக்கத்தையும் புரிந்துகொள்ள வேண்டும் என்று இப்போது அறிக்கைவிடும் கருணாநிதிதான், தமிழ்நாடு சட்டசபையில் ‘முதல்வராக’ இருந்தபோது, ‘‘நாம் தமிழர்களைக் காப்பாற்ற, அவர்களுடைய வாழ்வாதாரத்தை வளமாக்கப் பாடுபடப் போகிறோமா? அல்லது ராஜபக்ஷவை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்போகிறோமா? வாழ்வாதாரத்தைப் பெருக்க வேண்டுமானால், இன்றைக்கு இருக்கிற சிங்கள அரசின் மூலமாகத்தான் அதைச் செய்ய முடியும். அங்கே இருக்கிற தமிழர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமானால், நாம் இங்கே ஆத்திரப்பட்டோ அல்லது வெறுப்பு உணர்வுடனோ அங்குள்ள சிங்கள இனத்தினரைப் பற்றி ஒன்றைச் சொல்லி, அது வேறு விதமான விளைவுகளை உண்டாக்கினால் அது நல்லதல்ல. இலங்கையிலே உள்ள தமிழனைக் காப்பாற்ற வேண்டுமானால், சிங்களவர்கள் கோபத்தை அதிகரிக்க வைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எதிலும் ஒரு நீக்குப்போக்கு வேண்டும் என்று சொல்லிச் சமாளித்தவர்.

லட்சக்கணக்கான தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கொலை செய்யப்பட்டது 2009 மே மாதம் 17ஆம் திகதி. கருணாநிதி இப்படிச் சொன்னது அதே ஆண்டு ஜூலை முதலாம் திகதி. லட்சம் பேர் செத்ததைப் பார்த்து ஆத்திரம் வரவில்லை. அனுதாபம் கூட வரவில்லை. ‘‘கோபப்படாதே’ என்று ஈழ தாகத்தின் வேரில் வெந்நீர் ஊற்றினார். அதற்கு ஒரே காரணம்தான். அதையும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்குக் கொடுத்த பேட்டியில் அவரே ஒப்புக்கொண்டார். ‘‘இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசின் நிலைக்கு மாறாக நடந்திருந்தால், என் ஆட்சியையே இழக்க வேண்டி வந்திருக்கும்’ என்பது பட்டவர்த்தனமான அவரது அன்றைய வாக்குமூலம். பதவி என் தோளில் கிடக்கும் துண்டு, கொள்கைதான் எனது வேட்டி என்று பேசியது எல்லாம் ஊருக்காகத்தானோ?! .

இலங்கை அரசு அறிவித்த போர் நிறுத்தத்தை உண்மைஎன்று நானும் நம்பி, இந்திய அரசும் அதை நம்பி எனக்குத் தெரிவித்ததால், உண்ணாவிரதத்தை வாபஸ் பெற்றேன் என்று புதுக்கதை விட ஆரம்பித்துள்ளார் கருணாநிதி. அவரை இத்தனை சுலபமாக ஏமாற்ற முடியும் என்பதை அவரது எதிரிகள் கூட ஏற்கமாட்டார்கள். அவர் அப்போதும் இப்போதும் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுகிறார் என்பதே உண்மை. ‘‘போரை நிறுத்திவிட்டோம்’ என்று ராஜபக்ஷ சொன்னதை, ப.சிதம்பரம் நம்பலாம். சிதம்பரம் சொன்னதை கருணாநிதியும் நம்பலாம்.

தவறில்லை. அன்றைய தினம்தான் எட்டு இடங்களில் கொத்துக் குண்டுகளைப் போட்டார்கள் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் நடேசன், பி.பி.சி. வானொலியில் அன்று இரவே கதறினாரே அப்போது கருணாநிதி அளித்த பதில் என்ன? கருணாநிதியின் அறிவிப்பைப் பார்த்துத்தான் ‘‘பாதுகாப்பான இடத்துக்கு’ அப்பாவி மக்கள் இடம்பெயர்ந்தார்கள். அந்த இடத்தில் குண்டுகள் போடப்பட்டு கொலைகள் நடந்தன. கருணாநிதி சொன்னதை நம்பியதால் தமிழர்கள் உயிரைவிட்டார்கள். ஆனால், இப்போது கருணாநிதி அறிக்கைவிட்டு, ஊதுபத்தி ஏற்றுகிறார்.

நீங்கள் போர் நிறுத்தம் செய்துவிட்டதாகச் சொல்லி உண்ணாவிரதத்தை முடித்துவிட்டீர்கள். ஆனால், அன்றைய தினம்கூட குண்டுபோட்டுள்ளார்களே? என்று மனசாட்சி உள்ள ஒரு பத்திரிகையாளன் கேட்ட போது, ‘மழைவிட்டும் தூவானம் தொடர்வது வழக்கம்தான்.

இதைப் போலத்தான் இலங்கையிலே இப்போதும் தொடரும் விமானத் தாக்குதல்களைக் கருத வேண்டும்’ என்று கருணாநிதி சொன்ன வாசகம், மிகக் கொடூரமான சினிமா வில்லன்கள்கூடப் பேசாத வசனம். உரிமை மனோபாவம் கொண்டவன் உடலில், உடை கூட இருக்கக் கூடாது என்று நிர்வாணப்படுத்திக் கண்ணைக் கட்டி சிட்டுக்குருவிகளைப் போல சுட்டுக் கொன்ற காட்சிகளைப் போர் முடிந்த நான்காவது மாதம் சேனல் 4 வெளிப்படுத்தியது. கொன்றுவிட்டார்கள் கொடுமைப்படுத்தினார்கள் சித்திரவதை செய்தார்கள்’ என்று அதுவரை சொல்லிக் கொண்டுதான் இருந்தார்கள்.

முதன்முதலாக அந்த வீடியோ காட்சிகள் வெளியாகி, பார்த்தோரை அதிரவைத்தன. அப்போதும் ‘‘முதல்வர்’ கருணாநிதி, ‘‘இந்தக் காட்சிகள் பழையவை. இப்போது எடுக்கப்பட்டவை அல்ல” என்று எல்லாம் தெரிந்தவராகச் சொன்னார். ராஜபக்ஷவின் கண்துடைப்பு நாடகத்தில் தானும் ஒரு பாத்திரமாகப் பங்கேற்கும் வகையில் 10 பேரை அனுப்பிவைத்தார் கருணாநிதி. அவர்களைச் சென்னை விமான நிலையத்தில் வரவேற்கும் தினத்திலும், ‘‘போரின்போதுதான் சித்திரவதைகள் நடந்தன. இப்போது அல்ல.

இப்போது தமிழர்கள் யாரும் கடத்திச் செல்லப்படுவது இல்லை’’ என்றார். அதாவது, இலங்கை அரசை, ராஜபக்ஷவைக் குற்றம்சாட்டி யார் கேள்வி கேட்டாலும் கருணாநிதிக்குச் சுருக்கென்றது. அதனால்தான் ராஜபக்ஷவும் மன்மோகனும் பதில் சொல்ல வேண்டிய கேள்விகளுக்கு எல்லாம் கருணாநிதியே வலியப் போய் பதில் சொன்னார். இந்த அதீத ஆர்வத்துக்கு ஒரு பின்னணி இருந்தது. இலங்கையில் நடந்த அனைத்தும் அவருக்கு முன்கூட்டியே சொல்லப்பட்டன.

‘‘இறுதிப் போர் நடந்த காலகட்டத்தில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே அதிகார பூர்வமற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒரு குழுவை அமைத்தோம். எங்கள் நாட்டின் சார்பில் நானும் பசில் ராஜபக்ஷ, லலித் வீரதுங்க ஆகிய மூவரும் அக் குழுவில் இடம் பெற்றோம்.

இந்தியாவின் சார்பில் எம்.கே.நாராயணன், சிவசங்கர்மேனன், விஜய்சிங் ஆகிய மூவரும் இருந்தார்கள் என்று கோத்தபய ராஜபக்ஷ சொன்னார். போர் நடந்த காலகட்டத்தில் கருணாநிதியை எம்.கே. நாராயணன் எத்தனையோ தடவை சந்தித்தார். இலங்கை போய்விட்டு இங்கே வருவார். அல்லது கருணாநிதியைப் பார்த்துவிட்டு அங்கே போவார். போரை வழிநடத்திய ஒருவர் தன்னை அடிக்கடி வந்து சந்திக்கிறாரே என்று அப்போதாவது கருணாநிதிக்குக் குற்றவுணர்ச்சி வந்திருக்க வேண்டும். ‘‘போர் நிறுத்தம் செய்வதற்கு இந்தியா முயற்சிக்காவிட்டால், உங்களுக்குத் தரும் ஆதரவை வாபஸ் பெறுவேன்’ என்று இந்த மானஸ்தர் அப்போது சொல்லி இருக்க வேண்டும்.

போர் நிறுத்தம் செய்யச் சொல்வது எங்களது வேலை அல்ல என்று கருணாநிதி வீட்டு வாசலில் நின்றுகொண்டு அன்றைய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி சொன்னபோதாவது, கருணாநிதிக்கு ஆத்திரம் வந்திருக்க வேண்டும். அங்கே போர் முடிவுக்கு வரப்போகிறது என்ற சந்தோஷ அறிவிப்பை நாடாளுமன்றத்தில் பிரணாப் வெளியிட்ட போதாவது, கோபம் வந்திருக்க வேண்டும். ராஜபக்ஷ என்ன முடிவெடுத்தாலும் இந்தியா வழக்கம்போல ஆதரிக்கும். இந்தியாவின் போரை நாங்கள் நடத்தினோம் என்று ராஜபக்ஷ சொன்னது ஒருவகையில் சரியானதுதான் என்று சிவசங்கர் மேனன் சொன்னபோதாவது, அவமானம் வந்திருக்க வேண்டும். இத்தனை கழுத்தறுப்புகளையும் மறைப்பதற்கு ‘டெசோ’ நாடகத்தை கருணாநிதி இப்போது ஆரம்பிக்கிறார்.

போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது, முதல்வர் கருணாநிதியின் உயிருக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்து என்று சென்னை போலீஸ் கமிஷனரை வைத்து அறிக்கை விடவைத்து, முத்துக்குமார் உள்ளிட்ட தமிழ்த் தியாகிகள் தங்களது தேகங்களை ஈழத் தாய்க்கு அர்ப்பணித்தபோது வேடிக்கை பார்த்ததுடன், அவர்கள் ஈழத் தமிழர்களுக்காகத் தீக்குளிக்கவில்லை, பொண்டாட்டியிடம் தகராறு. அதனால் தீக்குளித்தனர் என்று கொச்சைப்படுத்தும் காரியத்தை போலீஸ்காரர்களை வைத்து முடுக்கிவிட்டு, தமிழ்நாடு ஒரே உணர்வில் இருக்கிறது என்பதைக் காட்ட கடையடைப்பு நடத்தப்பட்ட போது, ‘இது சட்டப்படி குற்றம். கடையை அடைக்கச் சொன்னால் தேசப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்வோம்’ என்று மிரட்டல் விடுத்து, பிரபாகரன் படத்தைப் பார்த்தாலே கிழிக்கும் வேலையை போலீஸாருக்குக் கொடுத்து, தாம் செய்த அனைத்துப் பாவங்களுக்கும் இப்போது பரிகாரம்தேட நினைக்கிறார் கருணாநிதி.

சென்னையில் இருந்த இலங்கைத் தூதரக வட்டாரத்துக்கும், அன்றைய தி.மு.க. ஆட்சியின் போலீஸ் உளவுத் துறைக்கும் இருந்த பிரிக்க முடியாத பாசத்தை கருணாநிதி உணரத் தவறியதன் விளைவுதான், இன்று நித்தமும் உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதியாக வேண்டிய அவஸ்தையைக் கொடுக்கிறது. உயிரோடு வந்த பாட்டி பார்வதியை, அநாதையாக திருப்பி அனுப்பிய சோகத்தை, பேரன் பாலச்சந்திரன் படம் பார்த்து அறிக்கை வெளியிட்டுப் போக்கியாக வேண்டியிருக்கிறது. பாவிகளின் கொலை வெறிக்குப் பலியான பாலகன் பாலச்சந்திரன் என்று இன்று கண்ணீர்க் கவிதை வடிப்பவர், விடுதலைப் புலிகள் கல்லறைகள் கட்டுவதில் காலம் கழித்து விட்டார்கள் என்று கிண்டல் அடித்ததும், இன்று அனைவரும் ஒன்று சேர்ந்து போராடுவோம் என்பவர், அன்று, ஈழ ஆதரவாளர்கள் அனைவரும் கடல் வழியாகப் போய்ப் போராட வேண்டியதுதானே. நான் கரையில் இருந்து கண்டுகளிப்பேன் என்று வயிற்றெரிச்சலைக் கொட்டியதும் தமிழன் மறக்கக் கூடாத வாக்குமூலங்கள்.

ஊழல் வழக்கில் ஏ.சி முருகேசன் தன் கையைப் பிடித்துத் தூக்கியதால் ஏற்பட்ட சிவப்புக் காயப்பை 100 வீடியோ கேமராக்களுக்கு முன்னால் காட்ட வேண்டுமானால், பாளையங்கோட்டை சிறையில் பல்லி ஓடியதையே 50 ஆண்டுகள் சொல்ல முடியுமானால், வளரும் கருவை வயிற்றில் இருந்து எடுத்துப் பொசுக்கிய காட்டுமிராண்டிக் கூட்டத்தைப் பற்றி இன்னும் எத்தனை ஆண்டுகள் சொல்லித் தொலைத்தாலும் ஆத்திரம் அடங்காது. அந்தச் சோகத்தில் கூட அரசியல் செய்ய நினைப்பது, அந்தக் கொடூரத்தை விடக் கொடூரமானது. காங்கிரஸை மிரட்டுவதற்கு, அல்லது காங்கிரஸ் தங்களை விரட்டிவிட்டால் ஈழ ஆதரவுக் கட்சிகளைக்கொண்ட கூட்டணி அமைப்பதற்கு, அதுவும் இல்லாவிட்டால் ஈழப் பிரச்சினையை எதிர் அணியினர் பயன்படுத்தாமல் தவிர்ப்பதற்கு என்று, சாவு வீட்டிலும் லாபநஷ்டங்களுக்கு, கடல் தாண்டிய சொந்தங்களின் சோகத்தை முதலீடு ஆக்குவது ஆபத்தானது.

தன்னுடைய கடந்த காலத் தவறுகளை மறைக்க இன்றைக்கு கருணாநிதிக்குத் தேவை முகமூடி. ஏற்கெனவே வீரமணி, திருமாவளவன் ஆகிய இருவரும் சிக்கிவிட்டார்கள். பெரியாரைக் காப்பாற்றுவதை விட, அம்பேத்கர் புகழைப் பரப்புவதை விட, இவர்களுக்கு கருணாநிதியை நியாயப்படுத்துவதே முழு நேரத் தொழிலாக மாறிவிட்டது. ‘‘வாக்குக்காக எவனும் எதையும் செய்வான். யார் காலையும் நக்குவான். இதற்கு யாரும் விதிவிலக்கு இல்லை’’ என்று தந்தை பெரியார் அன்று சொன்னார். அதற்காக, ஈழத் தமிழர் பிணங்களையுமா?

(நன்றி - ஆனந்த விகடன்)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எண்ணெயில் பொரித்த உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. யாருக்கும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். உணர்ச்சிவசப்படாமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து போகும். எதிலும் முன் எச்சரிக்கையுடன் செயற்படப் பாருங்கள்.

**இடபம்:** பழைய கடன் தீரும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கடகம்:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்குமாறு நடந்து கொள்வீர்கள்.

**சிங்கம்:** மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகு முறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக்கொள்வது நல்லது.

**கன்னி:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் இலாபம் வரும். உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும். எதிலும் நிதானித்து செயற்படப்பாருங்கள்.

## நாளை

பங்குனி-03 சனிக்கிழமை 16.03.2013
திதி: பஞ்சமி பி.இ. 05.35 வரை
நட்சத்திரம்: பரணி மா. 06.02 வரை
சுபநேரம்: 03.19- 04.49 வரை
இராகுகாலம்: 09.19- 10.49 வரை

**துலாம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**தனுசு:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**மகரம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**மீனம்:** முன்கோபத்தைக் குறையுங்கள். தடைப்பட்ட வேலையை மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 5 | | | | 4 | |
| | | 7 | | 1 | 4 | 2 | | 5 |
| | | | 8 | | 2 | | | 9 |
| | | | 4 | 7 | | 5 | | 8 |
| 8 | | 9 | | 5 | | 4 | | 2 |
| 4 | | 5 | | 8 | 1 | | | |
| 7 | | | 1 | | 8 | | | |
| 6 | | 4 | 9 | 2 | | 7 | | |
| | 9 | | | | 3 | | | 6 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 8 | 5 | 9 | 7 | 6 | 4 | 3 |
| 9 | 3 | 7 | 6 | 1 | 4 | 2 | 8 | 5 |
| 5 | 4 | 6 | 8 | 3 | 2 | 1 | 7 | 9 |
| 3 | 2 | 1 | 4 | 7 | 9 | 5 | 6 | 8 |
| 8 | 7 | 9 | 3 | 5 | 6 | 4 | 1 | 2 |
| 4 | 6 | 5 | 2 | 8 | 1 | 3 | 9 | 7 |
| 7 | 5 | 3 | 1 | 6 | 8 | 9 | 2 | 4 |
| 6 | 8 | 4 | 9 | 2 | 5 | 7 | 3 | 1 |
| 1 | 8 | 2 | 7 | 4 | 3 | 8 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:- 05.03.1959



மறைவு:- 26.03.2012

வேலணை மேற்கு, 6 ஆம் வட்டாரம்

அமரர்

## பொன்னம்பலம் சிவமணி

(மணி – அரசுவாட்டன்)

**திதி: பூர்வபக்ஷ சதுர்த்தி**

ஓர் ஆண்டு கடந்து விட்டதையா எங்கள் குல தெய்வம்
நீங்கள் எங்களை விட்டு மறைந்து....
கண்ணின் மணிபோல் வளர்த்தீர் ஐயா உம் மகளை.
அப்பா எங்கே எங்கே என்று கதறியழுகின்றாள்
அவள் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிக்கின்றோம்.
உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் எல்லோரும்
உன் திருநாமத்தை எப்பொழுதும் உருப்போட்டபடியே
தான் வாழ்கின்றார்கள்
என்ன செய்வது இறைவன் எங்களிடம் இருந்து உம்மைப்
பறித்துவிட்டான். காலத்தின் கட்டாயம் என்ற நியதியை ஒட்டி
என்றும் நீங்கள் எங்கள் மனதில் வரைந்த அன்புக் கோலத்தை
பொக்கிஷமாய் பாதுகாத்து என்றென்றும் உங்கள் நினைவால்
கண்ணீருடன் வாழும் அன்பு உள்ளங்கள் உமது
தூய ஆத்மா சாந்தியடைய சிவமணிப்பிள்ளையாரிடம்
பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

மனைவி, மகள், சகோதர சகோதரிகள், மருமக்கள்,
மைத்துன, மைத்துனிமார், பெறாமக்கள், உறவினர், நண்பர்கள்.

(C/6976) (2.6)

# நீதி கேட்டு வீதியில் பாடசாலை மாணவர்

## ஏறாவூரில் புதனன்று சம்பவம்

மட்டக்களப்பு,மார்ச்15

மட்டக்களப்பு, ஏறாவூர் தளவாய் விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை வீதியில் இறங்கி ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 6 ஆம் திகதி மட்டக்களப்பு வலய மட்டத் திலான எல்லே விளையாட் டுப் போட்டியில் தளவாய் விக்னேஸ்வரா வித்தியாலய அணிக்கும் கல்லடி சிவா னந்தா தேசியப் பாடசாலை அணிக்குமிடையில் போட்டி இடம்பெற்றது.

போட்டி நடந்த போது மாணவர்கள் மீது அங்கிருந்த ஒரு குழுவினர் தாக்கினர். இதைக் கண்டித்தும், இது குறித்து குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியு றுத்தியுமே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர்.

சம்பவத்தில் ஏறாவூர் தள வாய் விக்னேஸ்வரா வித்தி யாலய மாணவர்கள் மூவர் காயங்களுக்குள்ளாகி ஆரை யம்பதி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வெளியேறி யுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மாண வர்களைக் கல்வி அதி காரிகள் சென்று பார்வை யிடவில்லை. அதனால் தளவாய் பாடசாலையை கல்வி அதிகாரிகள் புறக் கணித்து விட்டனர் என்று மாணவர்களும் ஆசிரியர் களும் கொந்தளிக்கின்றனர்.

இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக மட்டக் களப்பு கல்வி வலய ஏறா வூர்ப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி எம். பாலசுப்பிர மணியம், பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே. சத்தியநா தன், ஏறாவூர் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.பி. பெரேரா, தளவாய் பொலிஸ் சாவடிப் பொறுப்பதிகாரி கே.ஜி. சந்திரசேகர ஆகி யோர் ஆர்ப்பாட்டம் நடந்த இடத்துக்கு வந்து பெற்றோர் கள், மாணவர்கள், ஆசிரியர் கள் ஆகியோருடன் கலந்து ரையாடினர்.

இந்தக் கலந்துரையாட லில் மட்டக்களப்பு சிவா னந்தா விளையாட்டு மைதா னத்தை மாற்றி வேறு மைதானத்தில் விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்த வேண் டும்; அல்லது அந்த மைதா னத்துக்குள் பொலிஸ் பாது காப்பு வழங்கப்பட வேண் டும், தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை களை மாணவர்களும் பெற் றோரும் முன்வைத்தனர்.

மாணவர்களின் கோரிக் கையை கல்விப் பணிப்பாள ரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக வலயக் கல்வி அதிகாரிகள் தெரிவித்த னர். (ச)



**தாக்குதலுக்கு உள்ளான மாண வர்களைக் கல்வி அதிகாரிகள் சென்று பார்வையிடவில்லை. அதனால் தளவாய் பாடசாலையை கல்வி அதிகாரிகள் புறக் கணித்து விட்டனர் என்று மாணவர்களும் ஆசிரியர்களும் கொந்தளிக்கின்றனர்.**



மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை நோக்கி அதி வேகமாகப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ், மயிலம் பாவெளியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

## மட்டு. சிறைச்சாலை மாந்தீவுக்கு மாற்றம்

மட்டக்களப்பு,மார்ச்15

மட்டக்களப்பு சிறைச் சாலையை மாந்தீவுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என்று மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயக மூர்த்திமுரளிதரன்தெரிவித்தார்.

மட்டக்களப்பு வைத்திய சாலையில் இடம்பெற்ற அவ சர மற்றும் விபத்துச் சேவைப் பிரிவை ஆரம்பிக்கும் நிகழ் வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு சிறைச் சாலையை தற்போது அமைந் திருக்கும் இடத்திலிருந்து அகற்றி அந்த இடத்தை மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையுடன் சேர்ந்து மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள உள்ளோம்.

இந்த விடயம் குறித்து சிறைச்சாலைகள் அமைச்சரு டன் கலந்துரையாடியுள் ளேன். சிறைச்சாலையை மாந்தீவுக்குக் கொண்டுபோவது குறித்து ஏற்கனவே பேச்சுக் கள் இடம்பெற்றுள்ளன. மாந்தீவுதான் சிறைச்சாலைக் குப் பொருத்தமான இடமாகும்.

மட்டக்களப்பு போதனாவைத் தியசாலையை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதற்கு வேறு காணிகள் இல்லை. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அருகில் இருக்கும் ஒரேயொரு அரச காணி மட்டக்களப்பு சிறைச் சாலை அமைந்துள்ள வளாகம் தான். எனவே சிறைச்சாலையை இடம் மாற்றினால் மட்டக் களப்பு வைத்தியசாலை விரி வாக்கம் பெறும் என்றார். (ச)



# கடை ஏலம் விடுதல்



கரைச்சி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 26.03.2013 செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த பொங்கல் உற்சவத்தின்போது வாணிபம் செய்ய விரும்புகின்றவர்களுக்கான கடை ஏலம் விடும் நிகழ்வு எதிர்வரும் 17.03.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெற வுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

**முக்கிய குறிப்பு:**

உணவு வாணிபங்கள், ஐஸ்கிறீம் வாணிபங்கள் என்பனவற்றை மேற்கொள்ள விரும்புவோர் உள்ளு ராட்சி மன்றத்தின் அந்த வாணிபத்துக்கான உரிமம் பெற்றவர்களாக இருப்பது அவசியமானது.

**புளியம் பொக்கணை, நாகதம்பிரான் ஆலயம், பரந்தன்.**

**ஆலய பரிபாலன சபை.**

(சி/7402)(10,6,7)

## அபிவிருத்தில் மண்டூர் கிராமம் புறக்கணிப்பு

மட்டக்களப்பு, மார்ச்15

மட்டக்களப்பு, மண்டூர் கிராமம் அபி விருத்தியில் புறக் கணிக்கப்பட்டு வருகின்றது என்று அந்தக் கிராம புத்தி ஜீவிகளும் கல்வி மான்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

'மஹிந்த சிந் தனை' வேலைத்திட் டத்தின் கீழ் பல கிரா மங்கள் அபிவிருத்தி கண்டு வருகின்ற போதும் மண்டூர் கிரா மம் அபிவிருத்தியில் புறம் தள்ளப்பட்டு வருகின்றது என அவர் கள் குற்றஞ்சாட்டு கின்றன. இது ஒரு பாரபட்சமான செய லாகும் என்று மக்கள் கவலை தெரிவித் தனர்.

இந்தக் கிராமத் தில் பல வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இது தொடர்பாக அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றபோ தும், இதுவரையும் எந்தவித நடவடிக் கையும் எடுக்கப்பட வில்லை என்று மக் கள் சுட்டிக்காட்டு கின்றனர். (ச)



# கிருஷ்ணா அடகுசேவை

இல. 370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
இ ல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு இல. J/DS/BR/472

**மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2012 ஆம் ஆண்டு (28.02.2012) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2013) இக்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடகுத் தொகையைக் கட்டிப் பெற்றுக் கொள்ளவும். அல்லது ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். இரண்டும் செய்யத்த தவறின் 15.04.2013 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.**

இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 4900 311

இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 5046.

(சி/7448) (45,6,7)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு
24.01.1934

உதிர்வு
23.02.2013



## அமரர் கணபதிப்பிள்ளை ருக்மணி

23.02.2013 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி கணபதிப்பிள்ளை ருக்மணி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**சந்தையடி வீதி, ஆவரங்கால்.**

**குடும்பத்தினர். 0213735126**

(34503) (6.7.11)

☎ 0215671111
advt@uthayan.com

## நன்றி நவில்லல்



முருகேசு
சந்திரகுமார்



தம்பிப்பிள்ளை
குணசீலன்

450 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாறுகொண்ட புளியம் பொக்கணை, கல வெட்டித்திடல் கிராமங்களுக்கும் அங்கிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும், புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்துக்கும் இதுவரை காலமும் எவராலும் செய்யப்படாத இனிமேலும்செய்யமுடியாத மாபெரும் வேலைத்திட்டமான தர்மபுரம் கிராமத்திலிருந்து 4½ கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள கிராமங்களுக்கும்ஆலயத்துக்கும் மின் இணைப்பை ஏற்படுத்தித்தந்த எமது பெருமதிப்பிற்கும் அனைவரது அன்பிற்குமுரிய கௌரவ **நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றகுழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார்** அவர்களுக்கும், அவரது கோரிக்கையை ஏற்று மிகக்குறுகிய காலத்தில் இந்த வேலைத்திட்டத்தை நிறைவு செய்த **வடக்கின் வசந்தம் திட்டமுகாமையாளர், மின் பொறியியலாளர் மதிப்பிற்குரிய தம்பிப்பிள்ளை குணசீலன்** அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாவோம்.

**கிராம மக்கள்,**
**கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**புளியம் பொக்கணை.** (24292) (45.6.7)

பரிபாலன சபையினர், புளியம் பொக்கணை,
**நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை.**




## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
30 ★ 10 ★ 1939



ஆண்டவன் அடியில்
13 ★ 02 ★ 2013

அமரர்
**ஆறுமுகம் சின்னப்பிள்ளை**

**அன்போடு ஆதரவாய் வாழ்ந்தீர்.**
**நெஞ்சோடு உம் நினைவு. உறவாட வைத்துச் சென்றீர்**

கடந்த 13.02.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை மு.பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்தோடு மரணச் செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்தவர்கள், உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் வெளிநாடுகளில் இருந்து, நேரடியாக தொடர்பு கொண்டவர்களுக்கும் அந்தியேட்டி குருமார்களுக்கும் அன்பர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி,செல்லப்பிள்ளையார் வீதி,
நீர்வேலி. 021 321 8894 (34457)(5.6)

**பிள்ளைகள்,மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# இரத்தத்தை வியர்வையாக சிந்தியே மருத்துவர்களை நாடு உருவாக்கியது

## அவர்கள் இங்கு மக்கள் பணியாற்ற வேண்டும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு,மார்ச் 15

இலங்கையில் வைத்தியராக நியமனம் பெறும் ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் ஐந்து வருடங் களாவது மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். இவ்வாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் கற்று வெளியேறிய முதல் மருத்துவக் குழுவினருக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை பண்டார நாயக்கா ஞாப கார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நியமனக்கடி தங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலவசக் கல்வியை வழங்கி ஒருவரை வைத்தியராக அமர்த்துவதற்கு நாட்டு மக்கள் அவர்களது இரத்தத்தை வியர்வையாக சிந்தி பாடுபடுகின்றனர்.

இலங்கையில் இலவசக் கல்வியைப் பெற்று வைத்தியர் நியமனம் பெற்ற பலர் வெளிநாடுகளுக்குச் சென்று சேவையாற்றுகின்றனர்.

கடந்த வருடம் நான் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த சமயம், இலங்கையில் இருந்து அமெரிக்கா சென்றுள்ள வைத்தியர்களைச் சந்தித்தேன். அவர்களை இலங்கைக்குத் திரும்பி வந்து சேவையாற்றுமாறு அழைத்தேன். ஆனால் அவர்கள் இலங்கைக்கு திரும்பும் நோக்கத்தில் இல்லை.



எமது பல்கலைக் கழகங்களில் இலவசக் கல்வி மூலம் கற்று வைத்தியர் களாகிய சுமார் பத்தாயிரம் பேர் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம் போன்ற பல வளர்ச்சி அடைந்த நாடுகளுக்குச் சென்று பணியாற்றுகின்றனர்.

கடந்த வருடம் உள்ளக மருத்துவப் பயிற்சிக்கு சேர்க்கப்பட்ட வைத்தியர்களில் கூட பலர் அந்தப் பயிற்சிக்கு சமுகமளிக்காது வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். இது கவலைக்குரிய விடயமாகும்.

இலங்கையில் கல்வி கற்று வெளிநாட்டில் கடமையாற்றும் வைத்தியர்கள் இங்கு வந்து சேவையாற்ற முன்வர வேண்டும். அவ்வாறு வருகை தருபவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு தயாராகவுள்ளது.- என்றார். (ச)

# இலங்கையில் வேண்டாம் பொதுநலவாய மாநாடு

## பிரிட்டன் முன்னாள் அமைச்சர் வலியுறுத்தல்

லண்டன், மார்ச் 15

இலங்கையில் நடைபெறுவதாக உள்ள பொது நலவாய மாநாட்டை வேறு ஒரு நாட்டுக்கு மாற்ற வேண்டும் என்று வலுப்பெற்று வரும் கோரிக்கைக்கு பிரிட்டன் ஆதரவு வழங்க வேண்டும் என்று முன்னாள் பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலாளர் டேவிட் மில்லிபான்ட் வலியுறுத்தியுள்ளார்.

'பிரிட்டிஷ் கார்டியன்' பத்திரிகையில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் தாம் முன்னர் வெளியுறவு அமைச்சராக இருந்த போது பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் பேர்னார்ட் கவுச்னருடன் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டதை நினைவு கூர்ந்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கை ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களைச் சந்தித்தோம். வடக்கில் உள்ள அகதி முகாம்களுக்குச் சென்றோம். அங்கு கண்டவைகளை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்.

குறிப்பாக தமிழ்ப் பெண்கள் தமது கணவன்மார் மற்றும் பிள்ளைகள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுப் பின்னர் விடுவிக்கப் படவில்லை என்று கூறி அவர்களின் பெயர்களை கடதாசி அட்டைகளில் எழுதி வைத்துக் கொண்டு கதறியழுததை என்னால் மறக்க முடியாது'' என்று கூறினார். (த)


# இலங்கை ஹோட்டல்களில் கட்டணம் மிக அதிகம்

## உல்லாசப் பயணிகள் குற்றச்சாட்டு

இலங்கையில் உள்ள ஹோட்டல்களில் அறிவிடப்படும் கட்டணங்கள் அதிகம் என்று பன்னாட்டு உல்லாசப் பயணிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கைக்குச் சுற்றுலா செல்பவர்கள், தங்கும் வசதிகளுக்காக ஹோட்டல்களில் அதிக செலவுகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இருந்த கட்டணங் களை விட இந்த வருடம் கட்டணங்கள் அதிகரித்துள்ள போதும், அடிப்படை வசதிகள் எவையும் அதிகரிக்கப் படவில்லை என்று உல்லாச பயணிகள் சுட்டிக் காட்டுகின்றனர். (ச)

## 39 ஆவது பிறந்தநாளில் 90 ஆம் நாள் நினைவுகளுடன்





மண்ணில் மலராக
15★03★1974
விண்ணில் மதியாக
17★12★2012

செல்வி
**ஜெயக்குமாரி சங்கரப்பிள்ளை**

இன்றுடன் 90 நாள்கள் நகர்ந்து விட்டன.
அன்று சட்டென்று இழந்த கண்கள் இப்பொழுது
இந்த நொடியில் நடந்தது போல மனதை உலுக்கி எடுக்கிறது.
காலனின் கட்டளையை சிரித்த முகத்துடன் ஏற்றுக்கொண்டாய்.
கலங்கும் கண்களுடனும், கனத்த இதயத்துடனும், நாங்கள்
வேதனையில் ஏங்கித் தவிக்கின்றோம். இனி ஒரு விடியலில்
இவ் வாசலில் உன் மெதுவான காலடி ஓசை கேட்காதா
என ஏங்கி நிற்கின்றோம். உன் நினைவால் என்றென்றும்.
எம் நெஞ்சமெல்லாம் நிலைத்திருக்கும் உன்னை .
ஆத்மாவின் சாந்திக்காக உன்னையே வணங்கி நிற்கின்றோம்.
உன் பிரிவால் தவிக்கின்றோம்.
அன்பு நெஞ்சத்தை நினைவு கூருகின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

"லிங்கபவனம்", கரணவாய் மத்தி,
கரவெட்டி. T.P. 021 226 3943

உன் நினைவில்
**குடும்பத்தினர்.**

(34469)(2.6)

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய நிறுவனம் ஒன்றுக்கு ஓய்வு பெற்ற
RMP/MD/MBBS
வைத்தியர்கள் தேவை.
தொடர்பு: 0779465467
(34456)(8.7.11)

## A/L இரசாயனவியல்

Personal & Group Class
(34 வருட வினாத்தாள் கற்பிக்கப்படும்)
S.Anojan, B.Sc. (Chem.sp.)
தொடர்பு: 0770781451
(34477)(6.11)

## தெளிவான சிந்தனையின் பயன்

எமது துன்பத்துக்குக் காரணமாய் அமைவது ஆசையும், பற்றும்தான். எவ்வளவு சம்பாதித்தாலும் மனம் திருப்தி யடையாது, ஆசைகளுக்கு அளவில்லை. பழைய ஆசைகள் தீர்ந்த பின்பு புதிய ஆசைகளைத் தேடி மனம் அலையும். ஆசையால் மனம் திருப்தி அடையவோ மகிழ்ச்சிக்கு வழி. மனதைச் செம்மைப்படுத்துவதே அமைதியைத் தேடிக் கொள்ளும் வழி.

மனிதனுடைய வாழ்க்கை மனத்தின் அடிப்படையிலே தான் நடக்கின்றது. மனமே சிக்கல்களுக்குக் காரணமாக அமைகிறது. அது நினைக்கும் விதத்தில்தான் வாழ்க்கையில் பிரச்சினைகளும் உருவாகின்றன. மனப்பக்குவம் அடைந்தவர்களுக்கு ஆசைகளை அடக்கத் தெரியும். ஆசையால் பிரச்சினைகளை உருவாக்கால்வாழும்வழியை அறிவார்கள். ஆகவே ஒரு நல்ல வாழ்க்கையின் அடிப்படை, அடக்கமான மனதில் தான் இருக்கிறது. மனதை இப்படி அடக்கிய பிறகு அதைத் தூய்மைப்படுத்த முயலவேண்டும். தூய்மையான மனதில் தெளிவான சிந்தனை இருக்கும். தெளிவான சிந்தனை இருக்கும் பட்சத்தில் இறைவன் கொலுவிருப்பார்.

ஞானக்கதிர்

## மரண அறிவித்தல்



### திருமதி கார்த்திகேசு வள்ளியம்மாள்

சிங்கப்பூரைப் பிறப்பிடமாக வும், மாதர்சங்க வீதி, சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு வள்ளியம்மாள் 13.03.2013 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கிருஸ்ணபிள்ளை - சுந்தரம்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், மீனாட்சிப்பிள்ளையின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும், நிர்மலாதேவி, ராஜகுமாரன், சந்திராதேவி, பராசக்தி, காலஞ்சென்ற யசோதரா மற்றும் சிவகுமாரன், சிவகௌரி ஆகியோரின் அன்புத் தாயும், நவரட்ணராஜா, கலைச்செல்வி, வைகுந்தவாசன், தில்லையம் பலம், காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் ஜெயசுதா, கணாநந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், சிவசேகரம், சந்திரதேவன், காலஞ்சென்ற ஜெகதீசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தக்ஷாயினி, தனுசாயினி, கோபிகா, சாயினி, மயூரா, அபிரா ஜோசப், ஆகாஷ், அபிஷா, ரட்ணமகிபன், சிந்தூரன், பிரதோஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சத்திய சனாதன், சாயிசனந்தன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்திரவாச, சித்தன்கேணி. (34519) (45.6.7) குடும்பத்தினர்.

### வாகனம் உடன் விற்பனைக்கு

NP-WA-XXXX தொடரிலக்க முடைய Pasion Pro black Colour மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு.

தொடர்பு: 0777566614 (34518) (6.7.11)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1977 இல் பிறந்த, ஆயிலியம் 2 இல் செவ்வாய், புதன், சூரியன், பாவக்கிரகம் 18 உடைய, B.A பட்டதாரி தற்போது NGO வில் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

T.P: 0778425125 (27794) (6.7.11)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
09.09.1946

மறைவு
13.02.2013



### அமரர் ஆறுமுகம் தியாகராசா

கடந்த (13.02.2013) இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் **அமரர் ஆறுமுகம் தியாகராசா** அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் 13.03.2013 புதன்கிழமை கீரிமலையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:-முகமாலை, எழுதுமட்டுவாள்.
தற்காலிக முகவரி:-அறுபது பாகை கிணற்றடி, முதலாம் கட்டை, பருத்தித்துறை.

குடும்பத்தினர். (27795)(6.7.11)

## சமய சந்நிதிகளில்

பருத்தித்துறை, மருதடி அருள்மிகு ஞானவைரவர் சுவாமி ஆலய அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை வைரவர் சாந்தியுடன் நிறைவுறும். (வ-8)

★ ★ ★

தொல்புரம் உடையார்வளவு ஸ்ரீ மஹா சக்தி அம்பாள் ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அன்றையதினம் விநாயகர் வழிபாடுகளுடன் கிரியைகள் ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறும். (வ-13)

★ ★ ★

இளவாலை ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

★ ★ ★

பண்ணாகம், விசவத்தனை முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 15

பாடசாலை மாணவர்களுக்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நனோ தொழில்நுட்பம் தொடர்பான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகைதரும் விசேட பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் தரம் 9 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கு மேற்படி கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. (வ-14)

## மெய்வன்மைப் போட்டிகள்

கைதடி- நுணாவில் அ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் ஆ.தங்கவேல் தலைமையில் நடைபெறும் போட்டியில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்து கொள்வார். (வ-9)

★ ★ ★

சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கு.சிவகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக நிர்வாக கிராம அலுவலர் நா.நவரத்தினராசாவும் சிறப்பு விருந்தினராக லயன்ஸ் கழக வலயத் தலைவரும் ஓய்வுபெற்ற முதியோர் இல்ல அத்தியட்சகருமான செ.யோகநாதனந்தராசாவும் கலந்து கொள்வர். (வ-86)

★ ★ ★

செங்குந்தா இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் இ.பாலகுமார் தலைமையில் கல்லூரி மைதான இராசையா அரங்கில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் யாழ் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமான கோ.வரதராஜமூர்த்தியும் சிறப்பு விருந் தினர்களாக யாழ் கல்வி வலயக் கணக்காளர் ஆ.கிரிதரன், சட்டத்தரணி கனகேசவன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ)

★ ★ ★

நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ம.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாடசாலைகள் மருத்துவ அதிகாரி வி.யோகேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக ஆனைப்பந்தி மெதடிஸ்தமிஷன் வித்தியாலய அதிபர் வை. ஜெகானந்தன், மங்கையர்க்கரசி வித்தியாலய முன்னாள் பகுதித் தலைவர் திருமதி பி.சுதந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

★ ★ ★

கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சோ.கருணேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப.ஸ்ரீகரன் கலந்து கொள்வார்.

(400)

TAG CORPORATION

TAG Group (Chennai India) Introduces
Future Maestros Concert series
in association with
CarnaticRadio.com (Singapore)

TAG குழுமம், கர்நாடிக் இணைய வானொலி இணைந்து அறிமுகம் செய்யும்
வருங்கால சங்கீத விற்பனர்கள் கச்சேரித் தொடர் . . . .

முதல் கர்நாடக இசைக் கச்சேரி

ஐஸ்வர்யவித்யா ரகுநாத் ~ வாய்ப்பாட்டு

ஆர். ராகுல் ~ வயலின்

டெல்லி ஸாயிராம் ~ மிருதங்கம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைக் கல்லூரி அனுசரணையுடன்.

இடம் – நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபம்
காலம் – 22.03.2013 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி



# வடக்கு பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வடமாகாண பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டார்.

வடமாகாணத்தில் ஆயிரம் பாடசாலை, இள நிலை பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 90 பாடசாலைகளும் 333 ஆரம்பப் பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டன.

இதில் முதற் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 12 பாடசாலைகளுக்கு புதன்கிழமை 'மல்ரி மீடியா' உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ம-400)

## விற்பனைக்கு

**Panasonic MD 9000 Video கமராக்களும் Panasonic 62 Video கமராக்களும் Nikon D90 Photo கமராக்களும் விற்பனைக்கு உண்டு.**

**தொடர்பு: 0779515187**

(34527) (6.7.11)

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

இளம் குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியில் இடம் பெற்றுள்ளது. அந்தப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தர்மலிங்கம் தங்கராசா (வயது-31) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். (த-ரி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில்
28.02.2013 அன்று நடைபெற்ற
28ஆவது பட்டமளிப்பு விழாவில்
கலைமாணிப் (பொது) பட்டம் பெற்ற
**சரண்யா சுதர்சன்** (B.A)
அவர்களை வாழ்வில் மேலும்
வளம்பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்துவோர்:
கணவர்(லண்டன்),அம்மா(தங்கமணி),
அண்ணா,அண்ணி(கனடா),
அக்கா,அத்தான் (இத்தாலி),
மற்றும் உறவினர்கள்.

(34526)(5.6.7)

# "ஈழம் செல்வேன்' வைரமுத்து அறிவிப்பு



"எனது அடுத்த படைப்பு ஈழ காவியமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்கான களப் பணிகள் மிகப் பெரியவை என்பதால் இலங்கைக்கே சென்று சில காலம் இருக்க ஆசைப்படுகிறேன்" என்று கவிஞர் வைரமுத்து தெரிவித்தார்.

மூன்றாவது உலகப் போர் என்ற நாவலைத் தொடர்ந்து, ஈழத்தையும் அதன் மனிதர்களையும் மையப்படுத்தி தன் அடுத்த படைப்பை உருவாக்குகிறார் வைரமுத்து.

வைரமுத்துவின் சமீபத்தைய படைப்பான 'மூன்றாவது உலகப் போர்' பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்த நாவலுக்கு இலக்கியச் சிந்தனை விருதும் கிடைத்துள்ளது. இந்த நாவல் மூலம் தான் ஈட்டிய வருவாயில் ஒரு பகுதியை தஞ்சைப் பகுதியில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் என பகிர்ந்தளித்தார்.

இந்த நிலையில், தற்போதே தனது அடுத்த படைப்புக்கான பணிகளை ஆரம்பித்துள்ளார் வைரமுத்து.

"எனது அடுத்த படைப்பு ஈழக் காவியமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்கான களப் பணிகள் மிகப் பெரியவை என்பதால் இலங்கைக்கே சென்று சில காலம் இருக்க ஆசைப்படுகிறேன். அந்த மண்ணையும், காற்றையும், நிலத்தையும், நீரையும், மனிதர்களையும் தொட்டு உணராமல் படைத்தால், அது முழுமையான படைப்பாக இருக்காதே" என்றும் தெரிவித்துள்ளார்.


## புலமைப்பரிசில் பெறுவோரை அதிகரிப்பதற்கு செயற்றிட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்றிட்டத்தை வலயக் கல்வி அலுவலகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

செயற்றிட்டத்தின் பிரகாரம் மார்ச் மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரையில் மாணவர்களிடையே மாதம் ஒரு பயிற்சிப் பரீட்சை வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்டு பகுப்பாய்வுகளை மேற்கொண்டு பரீட்சையின் சித்தி வீதத்தை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் மார்ச் மாதத்துக்கான முதலாவது பயிற்சிப் பரீட்சையின் முதலாவது பகுதி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 2.45 மணி வரையும் எதிர்வரும் 18 ஆம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 வரை பகுதி இரண்டும், நடத்தப்படவுள்ளன. பரீட்சைக்குரிய வினாத்தாள்களை இன்று சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார். (ம-9)

## ஈரவிழிகளுடன் ஓராண்டில்



தாயின் மடியில் 16 - 05 - 1932

தரணியின் அடியில் 26 - 03 - 2012

அமரர்

**வேலுப்பிள்ளை சோமசுந்தரம்**

திதி: 15.03.2013

ஈரவிழி காயவில்லை -ஐயா ஓர் ஆண்டு ஆகிவிட்டது
உங்கள் உயர்ந்த எண்ணமும்
உறுதியான பண்பும் எம்முள் உறைய
புவனமெல்லாம் போற்றும் பாசத்துடனும்
புத்திரனை இழந்த சோகத்துடனும்
என்ன எண்ணி சென்றீர்களோ? ஏங்குகிறது எமது உள்ளம்
அன்பும் பாசமும் நிறைந்த எம் அருமையான
பொக்கிஷம் நீங்கள் -ஐயா என்றென்றும் எம்முடன் தான்..
ஏங்குகிறோம் உங்கள் முகம் காண என்றும்
நீங்கள் உதிர்த்த உதிரங்கள்

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இந்தன் முத்து விநாயகரை பணிந்து வேண்டுகிறோம்.

இல.127,அரசடி றோட்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(34525)(5.6.7)

## மரண அறிவித்தல்

### கதிர்காமர் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர் யாழ்.மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை)



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் பாதிரியடி, அம்பனை, தெல்லிப்பழை, வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமர் சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர், யாழ். மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை) அவர்கள் 13.03.2013 புதன்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் - லக்ஷ்மி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முத்தையா, பொன்னம்பலம் (இளைப்பாறிய ஆசிரியர், யாழ்.நடேஸ்வராக் கல்லூரி), சின்னத்துரை, கண்மணி ஆகியோரின் சகோதரனும், கிருஷ்ணகுமார் (ஆஸ்திரேலியா), பாலகுமார் (ஆஸ்திரேலியா), நந்தகுமார் (ஆஸ்திரேலியா), ஞானசூரியர் (லண்டன்), Dr. சடகோபன் (L.R.H. கொழும்பு), அமிர்தவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகமணி, (ஆஸ்திரேலியா), நிரஞ்சனா (ஆஸ்திரேலியா), தனலஷ்மி (ஆஸ்திரேலியா), பிருந்தா (லண்டன்), சூரியராணி ஆகியோரின் அன்பு மாமனும் தயானந்தன் (ஆஸ்திரேலியா), மிதுரா (ஆஸ்திரேலியா), அனுஷன் (ஆஸ்திரேலியா), Dr.துஸ்யந்தி (ஆஸ்திரேலியா), அஜே, ஆராதனா (லண்டன்) ஆகியோரின் அருமைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Mahinda Florist 191, Galle road, Mt.Lavinia. இல் நேற்று (14.03.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து மாலை 4 மணிவரை, இன்று (15.03.2013) வெள்ளிக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, முற்பகல் 10.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ஞானசூரியர்
(சூர்யா 0044 7944 166810,
சடகோபன் (கோபி 0094 777 007 849,
0094 112 360 598, 0094 112 364 895)

(சி/6898) (2.6.7)

# வல்வெட்டித்துறைக்கு புதிய நீர்த்தாங்கி

யாழ்ப்பாணம், மார்ச் 15

உலக வங்கியின் நிதி உதவியுடன் வல்வெட்டித்துறையில் 750 கனமீற்றர் நீர் கொள்ளளவு உடைய நீர்த்தாங்கி ஒன்றை நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை அமைத்து வருகின்றது என்று யாழ்.பிராந்திய முகாமையாளர் பி.தவீந்திரன் தெரிவித்தார்.

உலக வங்கியின் 225 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக இந்த நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நீர்த்தாங்கிக்குரிய நீரை மணற்காட்டில் உள்ள நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்குச் சொந்தமான கிணற்றில் இருந்து பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மருதங்கேணி, குடத்தனை, செம்பியன்பற்று ஆகியபிரதேச செயலகங்களுக்குட்பட்ட இடங்களுக்கும் புதிய நீர்த்தாங்கி அமைக்கப்படவுள்ளது. 45 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் இந்த நீர்த்தாங்கிஆயிரத்து 200 லீற்றர் கொள்ளளவை கொண்டதாக இருக்கும் என்றும் கூறப்பட்டது. இந்தத் திட்டங்கள் அனைத்தும் அடுத்த மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும். (ம-13)

**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**
**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தங்குவதற்கு உகந்த சகல வசதிகளுமுடைய 15 பேர் தங்கக்கூடிய குறைந்தது 5 அறை கொண்ட ஒரு வீடு வாடகைக்கு தேவைப்படுகின்றது. வீடு வைத்தியசாலையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்திற்குள் இருக்க வேண்டும். வீடு வாடகைக்கு தர விரும்புபவர்கள் பின்வரும் விலாசத்திற்கு தபால் மூலமாக மாத வாடகையுட் பட விவரங்களை மூடிய கடித உறையில் 26.03.2013 பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (C/7485) (6.7.11)

**4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
30★10★1980

மறைவு
17★03★2009

திருமதி
**ஆனந்தராசா ஜெயகௌரி**



ஆறாது என் சோகம்
மாறாது என் துயரம்
உங்கள் நினைவை மனதில்
சுமந்து ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றேன்.

நாளை (16.03.2013) சனிக்கிழமை மதியம் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தபால் நிலைய ஒழுங்கை,புளியங்குளம் வீதி,
நெடுங்கேணி. 0778786226
இ. ஆனந்தராசா (கணவர்).
(26170)(2.6.7)

**மரண அறிவித்தல்**

திருமதி
**இரத்தினம்மா முருகேசு**



நல்லூர், அரசவீதியைப் பிறப்பிடமாகவும் அமெரிக்கா புளோரிடாவை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம்மா முருகேசு 11.03.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகொழுந்து-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் முருகேசு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-சின்னாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், புளோரிடாவைச் சேர்ந்த சுந்தரலிங்கம், ராஜலிங்கம், அமிர்தலிங்கம், பிரேமா, திரவியலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, செல்லம்மா, தங்கம்மா, இலட்சுமியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகம்மா, காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, இராசையா, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜொய்ஸ் சுந்தரலிங்கம், இந்திராணி ராஜலிங்கம், சகுந்தலா அமிர்தலிங்கம், கைலாசபிள்ளை சின்னத்துரை, சாந்தி திரவியலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும், சுதன் (+அஞ்சலா), கெவின் (+தக்ஷாயினி), கிரிஸ்டோபர் (+கேரா), மிஷால், குகன், கீதா, அரன், சயன் ஆகியோரின் பாட்டியும், சிட்னி, லான்டன், எலிஸபெத் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் March 16, 2013 (Saturday) அன்று 10.00 AM - 1.00 PM வரை Kraeer Funeral Home & Cremation Center, 1665 University Drive, Coral Springs, Florida 33071, USA (954-753-8960) என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
அமிர்தலிங்கம் - (954) 753 - 5803
ராஜலிங்கம் - (954) 825 - 6482
பிரேமா - (954) 340 - 2106
திரவியலிங்கம் - (954) 427 - 6316

தகவல்:
பிள்ளைகள்.
(34551)(10,6,7)

# சாவகச்சேரி வடக்கில் இளைஞர் அட்டகாசம்

தென்மராட்சி,மார்ச் 15

சாவகச்சேரி வடக்கு, மருதடி வீதியின் சந்தியில் தினமும் காலை, மாலை வேளைகளில் கூடும் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று அந்த வீதியால் போக்குவரத்துச் செய்வோர் குறைப்படுகின்றனர்.

குறித்த சந்திக்கு அருகில் உள்ள கடையின் முன்பாக கூடும் இளைஞர்கள் தனித்து வரும் பாடசாலை மாணவிகள் உட்பட பெண்களுடன் அநாகரிகமான முறையில் நடந்து கொள்கிறார்கள் என்று கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு, மடத்தடி வீதி, மீசாலை மேற்கு ஆகிய பிரிவு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளால் மாணவிகளையும், இளம் பெண்களையும் பெற்றோர் தம்முடன் பாதுகாப்பாக, அழைத்துவர வேண்டிய நிலையில் உள்ளனர் எனவும் இளைஞர்களின் அட்டகாசத்தைத் தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-9)

# ஈழ அகதிகள் 12 பேர் மரத்தில் ஏறி போராட்டம்

செங்கல்பட்டு-காஞ்சிபுரம் வீதியில் உள்ள ஈழ அகதிகள் சிறப்பு முகாமில் தங்கியுள்ள 12 பேர் மரத்தின் மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போலி கடவுச்சீட்டு உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தொடர்புபட்ட இலங் கைத் தமிழர்களை கியூப் பிரிவு பொலிஸார் கைது செய்து இந்த முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

இந்த நிலையில் தங்களை திறந்தவெளி முகாமுக்கு மாற்றக்கோரி கடந்த புதன்கிழமை இலங்கை அகதிகள் 12 பேர் முகாம் வளாகத்தில் உள்ள மரக்கிளையில் ஏறி அமர்ந்து கொண்டு கூச்சலிட் டனர்.

அவர்களுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில செய்தி தொடர்பாளர் வன்னியரசு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செங்கை, தமிழரசன், நகர செயலாளர் அன்புச் செல்வன் ஆகியோர் சிறப்பு முகாம் அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். (வ)

# கைதடி முதியோருக்கு கண் பரிசோதனை

குருநகர், மார்ச் 15

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பரிசோதனையை லண்டனில் இருந்து இங்கு வருகை தந்த கண் வைத்திய நிபுணர் ஜெயபூரணபாலா நடத்தினார்.

இந்தப் பரிசோதனைக்கான அனுமதியை முதியோர்களின் நலன்கருதி கைதடி அரச முதியோர் . இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் வழங்கியிருந்தார்.

இதன்போது 70 முதியவர்களுக்கு கண் பரிசோதனை நடத்தப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது. (ம-51)

**வான் விற்பனைக்கு**

TOYATO LITE ACE, 20-X X X X
புதிய வடிவமைப்பு, புஸ்பாக் சீற், A/C வசதியுடன் பெற்றோல் வான் விற்பனைக்கு
தொ.பே. 077 7656 918 (34495) (45.6.7)

**விற்பனைக்கு**

நகைக்கடைக்குரிய சோக்கேஸ்,பிற்றிங் கவுண்டர் மற்றும் கதிரைகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772349933 (34528) (6.7.11)

**காணி விற்பனைக்கு**

எழுது மட்டுவாள் சந்தியில் இருந்து 200m தூரத்தில் நாகர் கோயில் வீதியில் பயன் தரு மரங்களுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு.
தொடர்பு: 0771314583,
0033148353830 (27886) (6.7.11)

**For Sale விற்பனைக்கு**

A/C SINGER (used) 9000
Model - SAS0952NCGA
Contact No:0773296407
(34499)(6.7.11)

# நடிகைகள் தேர்வில் கவனமாக இருங்கள்

## பொலிஸ் தலைமையகம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 15

திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் நடனக் குழுக்களில் நடிப்பதற்கு வாய்ப்புக்கள், விளம்பரங்கள் வரும்போது பெண்கள் மற்றும் யுவதிகளை அவதானமாக இருக்குமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுள்ளது.

இத்தகைய தகவல்கள், விளம்பரங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து பார்க்காது நடிப்பு மீதான ஆசையில் பெருமளவிலான பெண்கள் செல்வதால் மோசடிக்காரர்களினால் ஏமாற்றப்படுகிறார்கள்.

இவ்வாறு நடிகைகள் தேவை என நிறுவனங்கள் விளம்பரம் செய்யும்போது நிலையான தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்படுவதில்லை. அவற்றுக்குப் பதிலாக செல்லிடத் தொலைபேசி இலக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய மோசடிக்காரர்கள் அல்லது நிறுவனங்கள் சம்பந்தமாக ஏதாவது தகவல்கள் தெரிந்திருப்பின், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ, பொலிஸ் அவசர அழைப்பு எண்ணுக்கோ (119) அறியத் தருமாறும் பொலிஸ் தலை மையகம் கோரிக்கை விடுத்துள்ளது. (உ-3-22)

**கண்ணீர் அஞ்சலி**

**சின்னத்தங்கம் சதாசிவம்**



எங்கள் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ச. இராமநாதன் ஐயா, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், அங்கஜன் இராமநாதன் அவர்களின் அன்புப் பேர்த்தியுமாகிய திருமதி சின்னத்தங்கம் சதாசிவம் அவர்களின் பிரிவுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவரது ஆன்மா மாவைக் கந்தப் பெருமானின் ஸ்கந்தபாதத்தில் இணைந்து பேரானந்தப் பெரு வாழ்வில் திழைத்து சாந்தியடைய எம்பிரானை இறைஞ்சு கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிரந்தர முகவரி:
சங்கை எம்பதி
மாரியாமன் கோயிலடி,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
(சி/7467) (45.6.7)

கே.என். சச்சிதானந்தன் - குடும்பத்தினர்,
இராகுல சூரியதாஸ்,
தம்பசெட்டி ,
பருத்தித்துறை.

**எச். ஈ. டெனியல் எமல்ஷன் பானம்**



**100 கிளாஸ் பழரசம் செய்முறை**
2 1/2 கிலோ சீனியை ஒரு கலன் தண்ணீரில் கொதிக்க வைத்து அத்துடன் 1 1/2 அவுன்ஸ் சிட்ரிக் பவுடரையும் ஒரு அவுன்ஸ் எமல்ஸனையும் சேர்த்து கலக்கவும் மீண்டும் ஒன்றுக்கு ஐந்து விகிதப்படி தண்ணீரில் கலந்து பங்கிடவும்.

எச். ஈ. டெனியல் பழரச பானம் தோடம்பழம், அன்னாசி, திராட்சை, Rose, Mango மற்றும் பலவகைகளில் கிடைக்கும்.

கிடைக்கும் இடம்
சிவநர்மதா பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே - 021 2222567

Sole Agents,
BASIC FOODS
244, Bankshall St,
Colombo - 11.
Phone :- 2325529

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



எமது நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் குடும்ப நல உத்தியோகத்தராக கடமையாற்றும் சி.தர்மினி அவர்களின் தந்தையார்

**வல்லி திருநாவுக்கரசு**

கடந்த 13.02.2013 இறைவனடி சேர்ந்தமையையிட்டு அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரியும் , சுகாதார வைத்திய அதிகாரி பணி மனை உத்தியோகத்தர்களும், ஊழியர்களும். (34497)(6.7.11)

# வடக்கின் பெரும் போர் சென்.ஜோன்ஸ் ஆதிக்கம்


நாணய சுழற்சியின் போது


கல்லூரி அதிபர்களுக்கு வீரர்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட போது..


சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்களால் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் களத்திற்கு அழைத்துச் செல்லப்படும் வேளை


பரபரப்பான ஆட்டத்தின் போது...


மேள தாள ஆரவாரத்தின் போது



கல்லூரிக் கொடிகளைத் தாங்கிய பழைய மாணவர்கள்

யாழ்.மத்திய கல்லூரியும், சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்ட 'வடக்கின் பெரும் போர்' கிரிக்கெட் தொடரின் 107 ஆவது போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை ஆரம்பமான இந்தப் போட்டியில் இரு அணிகளுமே சமபலத்தோடு களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது. சென்.ஜோன்ஸ் அணியின் கபில்ராஜ்யும் பிரியசங்கரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் களமிறங்கினர். ஆயினும் அணியின் ஓட்ட எண்ணிக்கை 24 ஐ தொட்டபோது பிரிய சங்கர் 16 ஓட்டங்களுடன் டார்வினின் பந்துவீச்சில் அலன்டிலானிடம் பிடிகொடுத்து வெளியேறினார். தொடர்ந்து வந்த நிறோசனையும் 3 ஓட்டங்களோடு டார்வின் அப்புறப்படுத்தினார். பின்னர் கபில்ராஜுடன் இணைந்துகொண்டார் சயன். ஆயினும் சென்.ஜோன்ஸ் அணி 56 ஓட்டங்களை எடுத்திருந்த போது நிரூபனின் பந்தில் கபில்ராஜ் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய துவாரசீலன் ஓட்டத்தோடு வெளியேறி ஏமாற்றம் அளித்தார்.

4 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த சென்.ஜோன்ஸ் அணியின் ஆட்டம் அவ்வளவுதான் என்று எல்லோரும் நினைத்திருந்த போது களம்புகுந்தார் அணித்தலைவர் அமிர்தயன். சயனும், அமிர்தயனும் கூட்டுச் சேர்ந்து பொறுப்புடன் ஓட்டங்களைச் சேகரிக்கத் தொடங்கினர்.

இருவரும் இணைப்பாட்டமாக 87 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க சென்.ஜோன்ஸ் அணி கௌரவமான இலக்கை அடையமுடிந்தது. சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த சயன் நிறோசனின் பந்தில் வீழ்ந்தார். 114 பந்துகளைச் சந்தித்த சயன் 3 பவுண்டரிகள் அடங்கலாக 44 ஓட்டங்களை எடுத்திருந்தார். தொடர்ந்து களமிறங்கிய கானாமிர்தன் (6 ஓட்டங்கள் ), பிருந்தாபன் (ஒரு ஓட்டம்) நிலைக்கவில்லை. சிறப்பாக ஆடி அணியைத் தூக்கி நிமிர்த்திய அணித்தலைவர் அமிர்தயன் அரைச்சதம் அடித்து ஹரிகரனின் பந்தில் வீழ்ந்தார். 144 ஓட்டங்களை எதிர்கொண்ட அமிர்தயன் 5 பவுண்டரிகள் அடங்கலாக 62 ஓட்டங்களை குவித்திருந்தார். பின்னர் வந்த விந்தாகரன் 12 ஓட்டங்களுடனும் கவாஸ்கர் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழக்க சென்.ஜோன்ஸ் அணியின் முதல் இன்னிங்ஸ் 183 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் மத்திய கல்லூரியின் ஹரிகரன் 3 இலக்குகளையும், டார்வின், அலன்ராஜ் ,நிரூபன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் நிறோஜன் இலக்கையும் வீழ்த்தியிருந்தனர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பாட தொடங்கியயாழ்மத்திய கல்லூரி அணி மோசமான தொடக்கத்தையே ஏற்படுத்த முடிந்தது. சென்.ஜோன்ஸ் அணியின் லோகதீஸ்வரனின் மிரட்டலான பந்துவீச்சில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை எடுத்த எடுப்பிலேயே இழந்து தடுமாறியது மத்திய கல்லூரி. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான அலன்டிலான் 10 ஓட்டங்களுடனும், நிறோஜ் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பின்னர் களம் புகுந்த கபிலனையும் 10 ஓட்டங்களோடு வெளியேற்றினார் லோகதீஸ்வர். அணியைத் தூக்கி நிறுத்துவார் என்று நம்பப்பட்ட மத்திய கல்லூரி அணியின் தலைவர் டார்வின் 8 ஓட்டங்களோடு நிலோஷனின் பந்தில் வீழ்ந்தார். நேற்றைய ஆட்ட நேர நிறைவில் யாழ்.மத்திய கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 4 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று இடம்பெறும்.

(ங-23-86)

## சுசந்திக ஜெயசிங்க இன்று யாழ்.வருகிறார்.



இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் உபதலைவி சுசந்திக ஜெயசிங்க இன்று யாழ்ப்பாணம் வருகிறார். யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள சுசந்திகா யாழ். தேசியக் கல்வியல் கல்லூரியில் நடைபெறும் வடமாகாண விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ளார். இவருடன் தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் அர்சுன டீ சில்வாவும்,குறித்த செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தச் செயலமர்வில் வடமாகாணத்தில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்விப் பணிப்பாளர்கள் சேவைக்கால ஆசிரியர்ஆலோசகர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர் என வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க தெரிவித்துள்ளார்.

(ங-23-400)

## விசுவமடு பாரதி உதைபந்தில் அபாரம்

புதுக்குடியிருப்பு,மார்ச்15

புதுக்குடியிருப்பு கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 15,19 வயதுப் பிரிவுகளில் விசுவமடு பாரதி வித்தியாலயமும் 17 வயதுப் பிரிவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் வெற்றி பெற்று சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றன.

இதில் முதலில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் விசுவமடு பாரதி வித்தியாலயம் 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் இரணைப்பாலை றோ.க. வித்தியாலயத்தினை தோற்கடித்து சம்பியனாகியது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை விசுவமடு மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

அடுத்து இடம் பெற்ற 17 வயது பிரிவினருக்கான ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் விசுவமடு பாரதி வித்தியாலயத்தை தோற்கடித்து சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தை இரணைப்பாலை றோ. க. வித்தியாலயம் பெற்றது.

19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் விசுவமடு பாரதி வித்தியாலயம், விசுவமடு மகா வித்தியாலயத்தினை 2:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சம்பியனாகியது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி பெற்றுக் கொண்டது.

(ங-400)

## இன்றைய ஆட்டங்கள்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தினால் வடமராட்சிப் பகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இன்றைய ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல்- 3.30 மணி

டைமன்ஸ் வீ.க.எதிர் சென்.பீற்றர்ஸ் வி.க.

பிற்பகல்- 4.30 மணி

கலைமதி வீ.க. எதிர் திக்கம் இளைஞர் வி.க.

* * *


கைதடி விநாயகர் சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

இரவு - 7மணி

மறவன்புலோ அம்பாள் வி.க. எதிர் கைதடி குமரநகர் வி.க.

(ங-288- 23 -400-422)


# இங்கிலாந்து அபாரம்



நியூஸிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், நியூஸிலாந்து அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று ஆரம்பித்தது. முதல் நாள் ஆட்ட முடிவில் ஜொனதன் ரொட், கொம்டன் ஆகியோரின் அபார சதங்களின் உதவியுடன் இங்கிலாந்து அணி பலமான நிலையை அடைந்துள்ளது.

வெலிங்டனில் இடம்பெறும் இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முதலாவது இலக்கை 26 ஓட்டங்களுக்கே இழந்த இங்கிலாந்து அணி, இரண்டாவது இலக்குக்காக நிக் கொம்ப்டன், ஜொனதன் ட்ரொட் இருவரும் இணைந்து 210 ஓட்டங்களைக் குவித்ததால் பலமான நிலையை அடைய முடிந்தது.



துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொனதன் ட்ரொட் ஆட்டமிழக்காமல் 121 ஓட்டங்களையும், நிக் கொம்ப்டன் 100 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக நீல் வக்னர், புரூஸ் மார்ட்டின் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

3 போட்டிகள் கொண்ட இந்தத்தொடரின் முதலாவது போட்டி சமநிலையில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(ங)

# பார்சிலோனா வெற்றி

ஐரோப்பாவின் உதைபந்தாட்டத் தொடரான சம்பியன்ஸ் லீக் போட்டித் தொடரின் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டிகளில் பார்சிலோனா, கலட்டசரே அணிகள் வெற்றியீட்டின.



பார்சிலோனா அணிக்கும், ஏசி. மிலான் அணிக்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் பார்சிலோனா அணி 4:0 என்ற கோல் கணக்கில் இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

இந்தப்போட்டியில் பார்சிலோனா அணி சார்பாக 5ஆவது நிமிடத்தில் லயனல் மெஸ்ஸி பெற்றுக் கொடுத்த கோலின் உதவியுடன் அந்த அணி முன்னிலை பெற்றது. 40ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி மீண்டும் கோலொன்றைப் அடித்து அசத்த, பார்சிலோனா அணியின் கோல்களின் எண்ணிக்கை 2 ஆக உயர்ந்தது.


அதன் பின்னர் இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்தது. போட்டியின் 55 ஆவது நிமிடத்தில் டேவிட் வில்லா பார்சிலோனா அணிக்கு 3 ஆவது கோலைப் பெற்றுக் கொடுத்தார். 90 ஆவது நிமிடத்தில் அல்பா அந்த அணிக்கு 4 ஆவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

ஆட்டநேர நிறைவில் பார்சிலோனா அணி ஏசி.மிலான் அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுக் கொண்டது.

சார்ள்கே அணிக்கும், கலட்டசரே அணிக்குமிடையில் இடம்பெற்ற மற்றுமொரு போட்டியில் கலட்டசரே அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

கலட்டசரே அணி சார்பாக 37 ஆவது, 42 ஆவது, 90 ஆவது நிமிடங்களிலும், சார்ள்கே அணி சார்பாக 17 ஆவது, 63 ஆவது நிமிடங்களிலும் கோல்கள் பெறப்பட்டிருந்தன. (ங)

# தீவுகள் முன்னணியில்



சிம்பாப்வே அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முன்னிலை பெற்றுள்ளது.

2 இலக்குகளை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 307ஓட்டங்களைப் பெற்றுச் சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டெரன் சமி 69 பந்துகளில்73 ஓட்டங்களையும், டினேஷ் ராம்டின் 62 ஓட்டங்களையும், மார்லன் சாமுவேல்ஸ் 51 ஓட்டங்களையும், கிறிஸ் கெய்ல் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக கைல் ஜார்விஸ் 5 இலக்குகளையும், டெண்டாய் சத்தர, ஹமில்ற்றன் மஸகட்ஸா ஆகியோர் தலா 2 இலக்குகளையும், கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது இரண்டாவது இனிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி இரண்டாம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷேன் ஷிலிங்பேர்ட் 2 இலக்குகளையும், ஷெனொன் கப்றியல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த சிம்பாப்வே அணி 211 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (ங)

# விளையாடியது மழை

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 4 போட்டிகள் கொண்ட தொடரின் மூன்றாவது போட்டியின் முதல்நாள் ஆட்டம் கைவிடப்பட்டது. நேற்று முழுநாளும் மொஹாலியில் பெய்த தொடர்ச்சியான மழை காரணமாகவே முதல்நாள் ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மொஹாலியில் நேற்று காலை 9.30 க்கு ஆஸ்திரேலிய அணிக்கும், இந்திய அணிக்கும் இடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி நடைபெற இருந்தது. 9.30 க்கு மழை விட்டிருந்தது. ஆயினும் போட்டிக்காக மைதானத்தைச் சரியாகத் தயார்படுத்துவதற்குள் மீண்டும் மழை பொழியத் தொடங்கியது. இதனால் ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் முதல்நாள் ஆட்டத்தைக் கைவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

முதல்நாள் ஆட்டம் நேற்று முற்றாக நடைபெறாததால் போட்டியில் எஞ்சியுள்ள 4 நாள்களும் வழக்கமான நேரத்துக்கு 30 நிமிடங்கள் முன்னதாக ஆரம்பிக்கவுள்ளன. இதன்படி இன்று காலை 9 மணிக்கு ஆட்டம் ஆரம்பிக்கவுள்ளது.இந்தத்தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் இந்திய அணி வெற்றிபெற்று 2:0 என்ற முன்னிலையைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்
சபிண்டீகரண அழைப்பும்



வையத்துள்
12★03★1921
தெய்வத்துள்
14★02★2013

திருமதி குகதாசன் சின்னம்மா

2013.02.14 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த மற்றும் அஞ்சலிகள். ஆறுதல் தெரிவித்த, கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் நாளை (16.03.2013) சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் சபிண்டீகரண பூசையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும். மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**இலுப்பையடி, வல்லைவீதி,
அச்சுவேலி நகர், அச்சுவேலி.
021 321 4156**

**கு.குகானந்தன் (இளையமகன்)
குடும்பத்தினர்.**

(C.7468)(2.6.7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



தீவக வலயத்தில் முன்பள்ளி
உதவிக்கல்விப் பணிப்பாளராக
கடமையாற்றி இன்று (15.03.2013)
வெள்ளிக்கிழமை ஓய்வு பெறுகின்ற

## க.விக்கினேஸ்வரன்

B.A, PGDT (DIP)
Special Science

அவர்கள் வாழ்வில் பல வளங்களும்
பெற்று சிறப்பாக நீடுழி காலம் வாழ்வதற்கு
நயினை நாகபூசணி அம்மனின்
அருள் வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

**முன்பள்ளி இணைப்பாளர், ஆசிரியர்கள்,
வேலணைக்கோட்டம்.**


## உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 15

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பனைக் கைத் தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன என்று பனைஅபிவிருத்திச் சபைத் தலைவர்பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் யாழ். அரச அதிபர் சு. அருமைநாயகம் தலைமையில் நடைபெற வுள்ளது.

பனைக் கைப்பணி உற்பத்திகளை மேற் கொள்ளும் 60 பயனாளிகளைத் தெரிவு செய்து வாழ்வெழுச்சித் திட்டத்தின் ஊடாக ஒவ்வொரு பயனாளிக்கும் தலா10ஆயிரம்ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.


**பணிப்பெண் தேவை**

வீட்டில் நிரந்தரமாக தங்கியிருந்து சமையல்
உட்பட வீட்டுப் பணிகளை செய்யக்கூடிய
நற்பண்புள்ள பணிப்பெண் உடன் தேவை.
நடுத்தர வயதுடையவராக இருக்க வேண்டும்.
பணிப்பெண்ணாக வருபவர் மட்டும் தொடர்பு
கொள்ளவும்.
தொடர்பு-0779546780 (34564)(8.8)

# திருமண வெள்ளிவிழா வாழ்த்துக்கள்



இயேசு!
'கோலும் கையுமாய் கடந்து போனேன்,
இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும்
உடையவனானேன்.'
ஆதியாகமம்:32.10

**தலைமைப்போதகர்
யோனத்தான் & நகோமி**

ஆண்டுகள் ஐஐந்து
அது நம் ஆண்டவரின் பேரன்பு!
இல்லற வாழ்வினில்
இகபரன் ஈந்த சவுகள்!
உன்னதருக்கே மகிமை....!!
ஊழியப்பாதையில் உறுதியான நீங்கள்
என்றும் ஏணியாய் எமக்கிருக்க
ஓர் மனதாய் வாழ்த்துகிறோம்
ஆனந்த ஜோதி இயேசு நாமத்தில்...!!

15.03.2013

வாழ்த்துபவர்கள்
ஜெபவீட்டு குடும்பம்


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

## விலைக்கேள்விக்கான கோருதல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, **வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **வேலைகளுக்கான** இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.

03. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் தவிசாளர், **வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல்** chairmanvsps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை **09.00** மணி முதல் மாலை **15.00** மணி வரை, 15.03.2013ஆம் திகதி தொடக்கம் 03.04.2013ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி படிவத்தினை **தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல்** vspsch@gmail.com) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச்சமர்ப்பித்து 15.03.2013 முதல் 03.04.2013 வரை **காலை 9.00** மணியிலிருந்து மாலை **15.00** மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

05. .விலைக்கேள்விகள் 04.04.2013ம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதியை தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கும் அதன் பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் உரிய காலத்துக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் 04.04.2013 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்

06. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 22.03.2013 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியன் | ஒப்பந்த காலம | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | உடுவில் அந்திரான் வீதி திருத்தம் | 2.32 | 03 மாதங்கள் | M7/C8 | 24000.00 |
| 2 | இணுவில் நியாம்பத்தை வீதி திருத்தம் | 6.31 | 03 மாதங்கள் | M7/C8 | 65000.00 |
| 3 | தாவடி பத்தானை வீதி திருத்தம் | 3.59 | 03 மாதங்கள் | M7/C8 | 36000.00 |

**தி.பிரகாஷ்,
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.**


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு
## நாகமணி கீதபொன்கலன்

கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட
ஆசிரியர்களுக்கான மென்பொருள் ஆக்கப்போட்டி
2012 இல் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப்
பெற்று 2013.03.11 அன்று பண்டாரநாயக்கா
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
நடைபெற்ற விருது வழங்கல் விழாவில் விருதினைப்
பெற்றுக்கொண்ட எமது பாடசாலை விஞ்ஞான பாட
ஆசிரியரான திரு.நாகமணி கீதபொன்கலன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர்
மகா வித்தியாலயம்,
(தீவக வலயம்)

(34663)(6.8)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## சுந்தரேஸ்வரன் சுதாஸ்கரன்

(அதிபர், கிளி/தருமபுரம்,
இல.1, அ.த.க.பாடசாலை)



தமது அதிபர் சேவையில் 6 வருடங்களைப் பூர்த்தி
செய்து 08.08.2012இல் இருந்து இலங்கை அதிபர்
சேவை 2-II இற்கு பதவி உயர்வு பெற்றுள்ள எமது
அதிபரைப் பாராட்டி, இவர் மேன்மேலும்
உயர்வுகளைப் பெறவும் இல்லறத்தில் இன்புற்று
விளங்கவும் மனதார வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர்களும், மாணவர்களும்
கிளி/தருமபுரம் இல.1,
அ.த.க.பாடசாலை, தருமபுரம்.**

# துன்பம் தீர அருள் வாக்கு

குழந்தைப்பேறு இல்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், வெளிநாடு செல்லத்தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராதநோய் தீர அருள்வாக்கு கூறப்படும். வெள்ளவத்தை பெர்ணாந்து வீதியில் உள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞான கணேஸ்வரி அம்மன் அவர்கள் 16, 17, 18.03.2013 வரை யாழ்ப்பாணத்தில் அருள் வாக்கு கூற உள்ளார். 18.03.2013 சங்காபிஷேகம் நடைபெறும்.

**தொடர்புக்கு: ஞானவைரவர் ஆலயம்,
கலாசாலை வீதி 2ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**

**பூசை நேரம்-மு.ப 10.30 மணி
மாலை 4 மணி**

-அம்மா

# ஈழத்துக்காகப் போராடும் தமிழக மாணவர்களுக்கு நன்றி

**யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு**

ஈழத்தமிழர்களுக்கு நீதி வேண்டி தமிழக மாணவர்கள் ஓயாத அலையாக பேரெழுச்சி கொண்டு நடத்தி வரும் போராட்டங்களை மனதார வரவேற்றுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அந்தப் போராட்டங்களுக்குத் தமது முழுமையான ஆதரவையும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் இனப்படுகொலைக்கு எதிராக சர்வதேச விசாரணை, தனி ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பு, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 8 கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மாணவர்கள் மேற்கொண்டு வரும் போராட்டம் தற்போது மிகத் தீவிரமடைந்து வருகின்ற நிலையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கண்டவாறு தமது கருத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் மேலும் தெரிவிக்கையில்,

''வரலாறு காணாதவகையில் தமிழர் தாயகத்தின் தொப்புள்கொடி தமிழகம் மாணவர்களின் தொடர் போராட்டங்களால் எழுச்சி கொண்டுள்ளதைப் பார்த்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். ஈழத்தமிழர்களுக்கு தனி ஈழம் அமையவேண்டும் என்பதிலும், சிங்களப் பேரினவாதத்தின் கொடூரங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேச அரங்கில் நீதி கிடைக்க வேண்டும் என்பதிலும் தமிழக மாணவர்கள் குறியாகவுள்ளனர். இதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா வல்லரசு பிரேரணையைக் கொண்டுவரவுள்ள நிலையில் தமிழகத்தில் மாணவர்கள் ஈழத்தமிழர்களுக்கு நீதிவேண்டி தொடர் போராட்டங்களில் குதித்துள்ளனர்.

அத்துடன் ஐ.நாவில் அமெரிக்கா பிரேரணையை இந்தியா ஆதரிக்கவேண்டும் என்று தமிழக மாணவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் உண்ணாவிரதம் மற்றும் வீதி மறியல் போராட்டங்களில் குதித்து ஈழத்தமிழர்களுக்காக தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்ற நிலையில், அவர்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வீதியில் இறங்கி குரல் கொடுக்க முடியாத இன்றைய சூழ்நிலையை நினைத்து நாம் மிகவும் கவலையடைகின்றோம்.

எனினும், எமது இந்த அவலநிலையை தமிழக மாணவர்கள் நன்கறிவார்கள். அதாவது யாழ். குடாநாடு 24 மணித்தியாலமும் சிங்களப் படையினரின் கண்காணிப்பில் உள்ளது. அத்துடன் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஒவ்வொரு அசைவையும் படையினர், புலனாய்வுப் பிரிவினர் நோட்டமிட்டுக் கொண்டுள்ளனர். அண்மைக்காலங்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது அரசும், படைகளும் நடத்திய அராஜகங்களை தமிழகம் உட்பட சர்வதேசம் நன்றாக விளங்கிக் கொள்ளும்.

இந்நிலையில் ஈழத்தமிழர்களுக்காக தமிழகத்தில் மாணவர்கள் நடத்தும் ஓயாத போராட்டங்களுக்கு எமது முழுமையான ஆதரவை சொல்லில் மட்டும் தெரிவிப்பதையிட்டு மிகவும் கவலையடைகின்றோம்.

எனினும், தமிழக மாணவர்களின் போராட்டங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும்; ஈழத் தமிழர்களுக்கு ஐ.நாவில் நீதி கிடைக்கவேண்டும்; நிரந்தரமான தீர்வு கிடைக்கவேண்டும்'' - என்று தெரிவித்துள்ளனர்.

**வேலைக்கு ஆள் தேவை**

கணினி தட்டெழுத்தில் அனுபவமுள்ள/ பழக விரும்பும் பெண் பிள்ளைகள் வேலைக்குத் தேவை.


நேரில் வரவும்: இன்று முற்பகல் 10-1.30
நாளை காலை 9-1.30

**அபிஷேக் டீலரி ஸ்ரோர்**
இராமநாதன் கல்லூரி முன்பாக,
கே.கே.எஸ் வீதி, மருதனார்மடம்.
தொடர்பு: 0779005856,
0773063161,0718565540

(34630)(6.7.11)

## மரண அறிவித்தல்

### கந்தையா பாஸ்கரமூர்த்தி



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாஸ்கரமூர்த்தி (13.03.2013) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மங்களேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தவச்செல்வம், வைத்தியதாகலிங்கம், முத்தையா, திருச்செல்வம் மற்றும் கணேசமூர்த்தி, சுந்தரமூர்த்தி, மூத்தீஸ்வரி, சிவஞான மூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வர்களான நாகராசா, தாமோதர லிங்கம் மற்றும் சிவபாக் கியம், அம்பிகைநாயகி, தெய்வராணி, தர்மதாசன் ஆகியோரின் மைத்துனரும், யதுகுலன் (லண்டன்), யுகநேசன் (லண்டன்), டாயினி,மோகனராம், ராதாலஷ்சுமி, வரலஷ்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், அனித்தா, ஜெயக்குமரேஸ், குகராஜ், விஜிதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வைஸ்ணவி, சங்கவி, டிலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'தாமோதர வாசா'
சுழிபுரம் கிழக்கு,சுழிபுரம்.
(34552)(5-6-7)

தகவல்:
கணேசமூர்த்தி

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும்

**பாலசுந்தரம் விஜயகுமார்**

அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி பாலசுந்தரம் மாதரசி**



அவர்கள் கடந்த 13.03.2013 அன்று இறைபதமடைந்தமையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
பளை.
(C/9230)(5-6-7)

தலைவர்,செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவயோகநாதன் தையல்நாயகி



கொக்குவில் மேற்கு ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகநாதன் தையல்நாயகி நேற்று (14.03.2013).வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் சிவயோகநாதனின் அன்பு மனைவியும், சந்திரிக்கா, மதுஷன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அணைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
சு.சிவயோகநாதன்
(கணவர்)

### சங்கரப்பிள்ளை சிவப்பிரகாசம்

ஓய்வு பெற்ற ஆசிரியர் மட்டக்களப்பு தமிழ் மகா வித்தியாலயம்,
யா/ யூனியன் கல்லூரி -தெல்லிப்பழை)



பொற்கலந்தம்பை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் 28/5, மதவடி லேன், சுதுமலை வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவப்பிரகாசம் நேற்று(14.03.2013) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்ளான கதிரவேலு(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், திருகோணமலை), பண்டிதர் நடேசன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), அபிமன்னன்(இயந்திர இயக்குனர், நானாட்டான்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான செல்வம், தேவரத்தினம் மற்றும் ஈஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், யோகேந்திரன் (பொறியியலாளர்), நகுலேஸ்வரன் (ஓய்வு பெற்ற ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்), சிவலிங்கம் (காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத் தாபனம்), நந்தினி, உதயகுமார் ஆகியோரின் மாமனும், கோணேஸ்வரி(ஆசிரியர், புத்தளம் சாகிராக் கல்லூரி), குமுதவதி, கேமாவதி(ஆசிரியர், ஆனைக்கோட்டை அ.மி.த.கா பாடசாலை), குலேந்திரன்(Engneer Informatics) ரதிச்செல்வி, பங்கயச்செல்வன்(vesta vision) ஆகியோரின் சிறிய தந்தையும், காயத்திரி, விக்னரதன், பிரியங்கா, குகன், சுடர்விழி, மதுரங்கா, தசாங்கன் ஆகியோரின் பாட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.03.2013) வெள்ளிக்கிழமை மு.ப.11.00மணிக்கு அவரது சுதுமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வித்தகபுரம் (பொற்கலந்தம்பை) கொப்பிலாவடை இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சுஞ்சடி வைரவர் கோயிலடி,
சுதுமலை வடக்கு, சுதுமலை.
தொ.பே. 021 3214050
072 6868039 , 071 4570294

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்
26*07*1941

விண்ணில்
14*02*2013

அமரர் **சதாசிவம் பாலகிருஷ்ணன்**

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம்

கடந்த (14.02.2013) இறைபதமெய்திய எமது குலதெய்வத்தின் பிரிவுத் துயரத்தை நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமாகவும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்ததன் மூலமாகவும் பகிர்ந்து கொண்டதுடன் இறுதிவரை இணைந்து நின்றவர்கள், இன்று வரை பக்க துணையாகி இருந்தவர்கள் அனைவருக்கும் இருகரம் கூப்பியே எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளாத்தியடி,
உரும்பிராய் மேற்கு.

குடும்பத்தினர்.

## கைதான இந்திய மீனவரை மனிதாபிமானமாக நடத்துக

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மனிதாபிமானத்துடன் இலங்கை அரசு நடத்த வேண்டும் என்று இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவரை அழைத்துப் பேசியுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சு இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விரைவில் விடுதலை செய்ய இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு, இலங்கைத் தூதுவரிடம் கோரியுள்ளது என அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (த)

**CHEMISTRY S.VASU**

அவத்தைச்சமநிலை

ஆரம்பம் -16.03.2013
சனி மாலை 5.00 Pm

**NEC**

(Sat Sun-5.00-6.00Pm)

பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

**COLLEGE OF PHYSICS**

| பழம் வீதி | கந்தர்மடம் |
|---|---|
| A/L 2015 பொறியியல் | A/L 2014 ஒளியியல் |
| Sat Sun Fri 04.30-6.00 | Sat Sun Wed 06.30-7.45 |

N.Kapilan B.Sc

## ஹலால் சான்றிதழை வழங்க உலமாவுக்கு அதிகாரமில்லை

### அமைச்சரவை உபகுழு தீர்மானமாம்

கொழும்பு,மார்ச் 15

ஹலால் சான்றிதழ் வழங்குவதற்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் 'உலமாவுக்கு எந்த வித அதிகாரமுமில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஹலால் சர்ச்சை தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவினாலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

சிரேஷ்ட அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயக்க தலைமையிலான இந்த உப குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இது இந்த உப குழுவின் இறுதி அமர்வாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உப குழுவில் முஸ்லிம் அமைச்சர்களான பௌசி, ரவூப் ஹக்கீம், ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் ரிசாத் பதியுதீன் உட்பட அரசில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

எனினும் கூட்டத்தில் முஸ்லிம் அமைச்சர்களில் ரிசாத் பதியுதீன் மாத்திரம் கலந்துகொண்டுள்ளார். ஜனாதிபதியுடன் சிரேஷ்ட அமைச்சர் பௌசி ஜப்பான் சென்றுள்ளமையினாலும், அமைச்சர் ஹக்கீம் மற்றும் அதாவுல்லா ஆகியோர் அம்பாறை மாவட்டத்துக்கு பயணம் செய்துள்ளமையினால் இந்தக் கூட்டத்தில் அவ்விருவரும் கலந்துகொள்ளவில்லை.

இந்தக் கூட்டத்திலேயே ஹலால் சான்றிதழ் வழங்குவதற்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவுக்கு எந்த வித அதிகாரமுமில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. (த)

**பொருளியியல்**
**Personal Class**
TP:0773340873

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை ஆற்றும் திருமதி விமலேஸ்வரி சிறிகாந்தன் அவர்களின் அன்புத்தாய்
திருமதி **இராசையா இராசு** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம்.

## 1st ANNIVERSARY OF LATE MR.CHELLAPPAH RAJASOUNDRAM

"Precious in the sight of the lord, is the death of his faithful ones."
Psalm 116:15



We think of you in silence. It is not very easy to live without you. You were our guilding light. You were our strong campanion. Without you everything seems heavy. You were our gem. You are always in our hearts. No one can replace your place. We thank you for being a wonderful affectionate husband, brother, father, father-in-law & grandfather. We are proud to be your children.

May your soul rest in peace.

Family members.

## மரண அறிவித்தல்

### பொன்னையா பரமேஸ்வரன்



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலைப் புகுந்த இடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பரமேஸ்வரன் கடந்த (11.03.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் பொன்னையா-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், லுகாசினி(பிரான்ஸ்), மதுராங்கினி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரகுமாரின் (பிரான்ஸ்)அன்பு மாமனும்,காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பஞ்சலிங்கம்(பிரான்ஸ்), மகாலிங்கசிவம்(பாப்பா, சுவிஸ்), மேகைராணி(பிரான்ஸ்), சரஸ்வதி(கொழும்பு), மகேந்திரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் பாலசுந்தரம்(பிரான்ஸ்), ரஞ்சினி(பிரான்ஸ்), நகுலேஸ்வரி(சுவிஸ்), காலஞ்சென்ற மகேஸ்வரன்(ஸ்ரீலங்கா ரெலிக்கொம் இன்ஸ்பெக்ரர்) மற்றும் மல்லிகாதேவி(ஆசிரியை, யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்), சிவகடாச்சம், இராசரெத்தினம் , இராசலட்சுமி, மகாதேவா, நவரத்தினம், அமிர்தா தேவி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சண்டிகா, சாகனா, சஜினி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(16.03.2013) சனிக்கிழமை மு.ப. 10.00மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. மகேந்திரன்
(தம்பி)

7/2, பொன்னப்பா லேன்,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

**தடை தாண்டல் பரீட்சை வகுப்புக்கள்**

★மாகாண நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்.
★ மத்திய அரசு தொழில்நுட்ப உத்தியோகத்தர்.

சனி, ஞாயிறு
9.00 மணி.
T.P. 075 4164564

யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டப்படிப்புகள்பிரிவு

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில்
விளம்பரப் பிரிவில்
கடமையாற்றும் *மதுரநாயகம்*
*சதீஸ்* அவர்களின் தந்தை

*மாணிக்கம்*
*மதுரநாயகம்*

அவர்களுடைய மறைவுச்
செய்திகேட்டு நாம் ஆழ்ந்த
துயர் அடைவதோடு
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உதயன் நிர்வாகத்தினர்.

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
Excellent Teachers' Panel & Individual Attention

**Diploma in English** *(2 Months)*
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத் தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**Spoken English With Grammar-Quick Learning Course** *(1½ Months)*
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகின்றது.
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல் சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாகவும்
(Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகின்றது.

**Advanced Diploma in English** *(4 Months)*
- ஆங்கில மொழியையும் ஆங்கில இலக்கிய அறிவையும் பெற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்கும் மேலும் மொழியைச் சிறப்பாகக் கற்று அதற்கு வேண்டிய தகமையை ஏற்படுத்த உதவி செய்யும்.
- இந்த நெறி ஆங்கிலத்தில் சரிவர விளங்கிக்கொள்ளவும் அதோடு ஆங்கில அறிவையும், இலக்கியத்தினையும் விருத்தி செய்ய உதவும்.

**IELTS** Academic / General — Duration : (2½ Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**A1 Exam-Sponsor/Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
* U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது.
* நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
* சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
* ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது.

**B1 Exam-Student Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிப்பட்டதுடன்
Duration : 2 Months

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்.
* British Council உடன் பரீட்சைக்கான பதிவுகள் March 15ஆம் திகதிக்கு முன் பதியவும்.
* பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் May 8ஆம் திகதிகளில் நடைபெறும்.

Batch I - 16.03.2013 Batch II - 18.03.2013 Batch III - 23.03.2013 Batch IV - 25.03.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074

Thars Fashion
Online shopping
அனைத்திற்கும்
20% DISCOUNT
புதிய ஆடை பேசும் மொழி
இனி நீங்கள்காத்திருந்தாலும்
ஆடைகள் காத்திருக்காது
காத்திருக்காமல் இன்றே உள்நுழையுங்கள்



www.tharsfashion.com
Playground road, Kalvijankadu, Jaffna 0771516013

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சர்வதேச விசாரணையை அமெ.ஆதரிக்க வேண்டும்

## இலங்கை விடயத்தில் ஏஞ்சல் எம்.பி.வலியுறுத்தல்

நியூயோர்க், மார்ச் 15

''இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மீதான முறையீடுகள் தொடர்பாக சுயாதீனமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென எழுந்துள்ள கோரிக்கைக்கு அமெரிக்கா ஆதரவளிக்க வேண்டிய தருணம் இதுவாகும்.''

- இவ்வாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெரிக்கு அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் எலியட் ஏஞ்சல் எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இலங்கையில் ஜனநாயகம் சீர்குலைந்து வருகின்றது. நல்லிணக்கப்பாட்டைத் தோற்றுவிப்பதற்கும், பொறுப்புக்கூறல் கடப்பாடுகளை மேற்கொள்வதற்கும் இலங்கை போதிய அக்கறை செலுத்தவில்லை என்றும் அவர் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

எலியட் ஏஞ்சல் அமெரிக்க வெளிவிவகாரங்களுக்கான குழுவில் ஓர் உறுப்பினராவார். ''இலங்கையின் வடபகுதிகளில் மீளக்குடியேற்றத்துக்கும், மீள் கூட்டமைப்புக்கும் இலங்கை அரசு சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதற்காக அந்த அரசைப் பாராட்ட வேண்டும். எனினும், சண்டையின் விளைவால் உருக்கொண்டுள்ள விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதில் சிறிதளவு அக்கறையே செலுத்தப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எலியட் ஏஞ்சல் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் ஜனநாயகம் தொடர்ந்து நலிவடைந்து வருகின்றது. அதேவேளை, இறுதிக்கட்ட போரின் போது இலங்கை அரசாலும், தீவிரவாதக் குழுவாலும் இழைக்கப்பட்ட குற்றங்கள் சம்பந்தமான முறையீடுகள் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணைக்கு அறைகூவல் விடுக்குமாறு தங்களை நான் வலியுறுத்துகின்றேன்.

2009ஆம் ஆண்டு இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தது. அநேகர், ''இந்த வெற்றிவாகை இலங்கையில் இனங்களுக்கிடையே நல்லிணக்கப்பாட்டைக் கட்டியெழுப்ப மாத்திரம் வழிசமைக்காது. அது ஜனநாயக முறைமையை வலுப்படுத்துவதற்கும், பாரிய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் வழிசமைக்கும்'' என்றும் நம்பினர்.

அதேவேளை, இலங்கை அரசு பிரிவினைகளையும், விரிசல்களையும் நீக்க முற்படவில்லை. மாறாக தனது அதிகாரத்தை வலுப்படுத்துவதிலேயே குறியாகவுள்ளது. உண்மையான ஜனநாயக மரபு சார்ந்த அம்சங்களை நீக்க முற்பட்டுள்ளது.

நான்கு வருட காலத்துக்குப் பின்னர் சட்டநடைமுறை ஆபத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஊடகச் சுதந்திரமும், கருத்து வெளியீட்டுச் சுதந்திரமும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. நீண்டகால போர் நீடித்ததைப்போன்று நல்லிணக்கப்பாட்டை எட்டுவதற்கும் நீண்டகாலம் செல்லக்கூடும் என்ற நிலைப்பாடே நிலவுகின்றது.

போருக்குப் பின்னர் இலங்கை அரசு, சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தாலேயே ஒருசில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2010ஆம் வருட மே மாதத்தில் கற்றுக்கொண்ட பாடங்களுக்கும், நல்லிணக்கப்பாட்டுக்குமான ஆணைக்குழுவை இலங்கை அரசு நிறுவியமை இதற்கு ஓர் உதாரணமாகும். போர் முடிவில் 40 ஆயிரம் சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்குப் பதிலளிக்கப்பட வேண்டும் என்ற சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே இந்த ஆணைக்குழு நிறுவப்படலாயிற்று.

இலங்கை அரசு தனது ஈடுபாட்டுக்கும், பொறுப்புக்கூறல் கடப்பாடுகளுக்கும் சான்றாக நல்லிணக்கப்பாட்டுக்கான ஆணைக்குழுவை முன்னிறுத்தியுள்ளது. சர்வதேச மட்டத் தரத்துக்கு இந்த ஆணைக்குழு முன்னெடுப்புகளை முன்மொழிந்துள்ளது என்றும் அது வாதிட்டுள்ளது.

எது எப்படியிருப்பினும், இந்த ஆணைக்குழு மட்டுப்படுத்தப்பட்ட ஆணையை மட்டுமே கொண்டது. தெளிவற்ற விசாரணை அதிகாரங்களை மேற்கொண்டு 2002 - 2009 வரைக்குமான காலப்பகுதி சம்பவங்களை மாத்திரமே அது ஆய்வுசெய்துள்ளது. அது ஒரு நேர்மையான - பாரபட்சமற்ற விசாரணை ஆகாது என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இலங்கையில் பல தசாப்தங்களாக அரசியல் வன்முறைகளும், சிவில் போரும் துயரச்சம்பவங்களைத் தோற்றுவித்துள்ளன. இவை கருத்திற்கொள்ளப்படவில்லை. பல தொடர் விவகாரங்கள் சம்பந்தமாக மேற்படி ஆணைக் குழு காத்திரமான பரிந்துரைகளை முன்வைத்துள்ளமையை மறுப்பதற்கில்லை.

நீதிக்குப் புறம்பான படுகொலைகள், காணாமல் போகச் செய்தல் ஆகியவை சம்பந்தமான குற்றச்சாட்டுகள் மீது நம்பகத்தன்மையான விசாரணை நடத்தப்படவேண்டும். வட பகுதி இராணுவமயப்படுத்தலிலிருந்து விடுபடவேண்டும். சிறுபான்மையினருக்கான அரசியல் தீர்வு, அர்த்தபுஷ்டியான அதிகாரப்பகிர்வு, கருத்துச் சுதந்திர பாதுகாப்பு ஆகியவையும் இப்பரிந்துரைகளில் அடங்கும்.

நல்லிணக்கப்பாட்டுப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்தி கடந்த மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்போது அமெரிக்க வெளிவிவகார அமைச்சு முக்கிய பங்கை வகித்தது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஓராண்டு கடந்துவிட்டது. எனினும், அவற்றைக் கைக்கொள்ள இலங்கை அரசு தவறிவிட்டது.

- இவ்வாறு எலியட் ஏஞ்சல் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ப)

## தமிழக மீனவர்கள் 34 பேர் நெடுந்தீவுக் கடலில் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 15

நெடுந்தீவுக் கடற் பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 34 பேர், கடற்படையினரால் நேற்றுக் காலை வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பாகத் தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்த தமிழக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். நெடுந்தீவுக் கடற் பிரதேசத்துக்கு அண்மையாக இவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது, இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் மடக்கிப் பிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

5 படகுகளில் வந்த 34 மீனவர்கள் நெடுந்தீவில் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இந்தியத் துணைத் தூதுவர் மகாலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, மன்னார் கடற்பரப்பில் வைத்து 19 மீனவர்கள் கைது செய்யப்பட்டு தலை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-5-13-400)

## ஒரு கோடி ரூபா மோசடி; பாடசாலை அதிபர் கைது

யாழ்ப்பாணம்,மார்ச்15

தனியார் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாகக் கூறிப் பலரிடம் இருந்து சுமார் ஒருகோடி ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் தனியார் பாடசாலை அதிபர் ஒருவரை யாழ். விசேட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்.நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேக நபர் கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட தனியார் பாடசாலையின் அதிபரான சந்தேக நபர் தொடர்ந்து மோசடியில் ஈடுபட்டு வருவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

ஆசிரியர்கள், உதவியாளர்கள் உள்ளிட்ட 96 உத்தியோகத்தர்களையும் சுமார் 450 இற்கும் மேற்பட்ட மாணவர்களையும் கொண்டதாக இந்தப் பாடசாலைக்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

எத்தனை பேரிடம் சந்தேக நபர் இவ்வாறு பணம் பெற்றுள்ளார் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் கொக்குவிலைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் யாழ்.நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு ஆரம்ப விசாரணைகளின் பின்னர் கடுமையான நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிரான வழக்கு மீள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.(த-5)

## செய்தியாளர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த செய்தியாளர் ஒருவர் நேற்றுமுன்தினமிரவு இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

'அச்சுவேலி தம்பனைச் சந்தியில் வைத்தே மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்துவந்த இனந் தெரியாத நபர்களால் இவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

பொலிகண்டியைச் சேர்ந்த கே.விசிந்தன் (வயது-25) என்பவரே தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலிஸ் பாதுகாப்புடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஈ.பி.டி.பி. கட்சியின் பத்திரிகையான தினமுரசில் பணியாற்றி வருகிறார்.

(த-8-400)

## புத்தளத்தில் இரு இளைஞர்கள் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டனர்

கொழும்பு,மார்ச் 15

புத்தளம் நகரில் இரு இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் புத்தளம் நூர் பள்ளிவாசல் சந்தியில் வைத்தே இனந்தெரியாத குழுவினரால் நேற்று முன்தினம் புதன்கிழமை தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் கடத்தல் நடவடிக்கைக்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் வாகனத்தைப் பயன்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் இவர்கள் இருவரும் கடத்தப்பட்ட இடத்திலேயே பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது இவர்கள் இருவரும் புத்தளம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களிள் ஒருவர் ஆபத்தான நிலையிலுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காதல் விவகாரமே இந்தக் கடத்தலுக்கு காரணம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(த)

## பொன்சேகாவின் மருமகனை பாதுகாத்தார் மாமியார்

கொழும்பு,மார்ச் 15

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் மருமகனான தனுக்க திலகரனவுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அவருடைய மாமி அவருக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளார் என்று தகவல்கள் கிடைத்துள்ளதாகக் குற்றப் புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அவரது மாமியான எலன் விமலா திலகரத்ன (வயது-80) 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி அவருக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளார் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரி நிஹால் பிலபிட்டிய கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் சாட்சியமளித்தார்.

அவருக்குப், பிலியந்தலையிலுள்ள வீட்டில் வைத்தே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வழக்கில் விமலா திலகரத்ன மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு பாதுகாப்பு வழங்கியுள்ளார் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரவின் அதிகாரி சாட்சியமளித்துள்ளார்.

இராணுவத்துக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்து விநியோகத்ததில் ஊழல் மோசடி இடம்பெற்றதாகக் கூறப்படும் ஹைகோப் வழக்கில் பொன்சேகாவின் மருமகனான தனுக்க திலகரத்ன முதலாவது சந்தேக நபராவார்.

தனுக்க இதுவரையிலும் கைது செய்யப்படவில்லை என்றும் அவருடைய மாமி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார். (த)

## கட்டுநாயக்கா விமான நிலையம் விரைவில் மூடப்படும் அபாயம்

### ஐ.தே.க.குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 15

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மூடப்படக்கூடிய அபாயம் நிலவுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மத்தள சர்வதேச விமான நிலையத்தால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பணிபுரியும் சிலர் தற்போது மத்தள விமான நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள உபகரணங்கள் சில மத்தள விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதென ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

(த)

## பேரறிவாளனுக்குத் தங்கம்

வேலூர்,மார்ச் 15

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் டி.டி.பி டிப்ளோமாவில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பத்தகம் பெற்றுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர் பேரறிவாளன்.

அவர் சிறையில் இருந்து கொண்டே மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகம் ஆதரவுடன் சிறைத்துறை நடத்தி வரும் டி.டி.பி டிப்ளோமா படித்து வந்தார்.

அவர் டி.டி.பி டிப்ளோமாவில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கம் வென்றுள்ளார் என்று சிறைத்துறை அறிவித்துள்ளது.

## தவறிவிட்டது

பரமேஸ்வரா இராமநாதன் வீதியில் இருந்து சிவன் அம்மன் கோவில் வீதியூடாக கல்வியங்காடு சென்று திருநெல்வேலியூடாக (பலாலி வீதி) உரும்பிராய் வரும் வழியில் கூட்டுக்காப்பு ஒன்று தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தந்துதவும்.
(சன்மானம் வழங்கப்படும்.)

**தொடர்புகளுக்கு-0776184602**

## கண்ணீர் அஞ்சலி

### மாணிக்கம் மதுரநாயகம்



கண்ணீரில் நாம் தவிக்க
காலன் உன்னை அழைத்ததேனோ
தோள் மீது வளர்த்தும்
தொட்டில் கட்டி ஆட்டியதும் இனி அந்த
ஒரு நாளை
நினைக்க மனம் வெம்புதையா
எம்மோடு இருப்பீர் என நினைத்த வேளை
எம்மை தவிக்க விட்டு சென்றதேனோ

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
பேரப்பிள்ளைகள்
நிமால், அன்பு, அரவிந், சிந்து,கிர்த்தனா, ஜீவிதா.

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய
வின்சேந்திரராஜன்
(Rajan-Rajan Umayal
எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்)
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி சின்னத்தங்கம் சதாசிவம்**
அவர்களின் பிரிவால் துயருறும்
உறவினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

இல.01 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்
சிறி நதியா நகைமாடம்
N.S.R Ruban Complex

## இடமாற்றங்கள் வலுவிழந்தன

உள்ளூராட்சி ஆணையாளரின் இடமாற்றங்கள் செயலுருப் பெற முடியாமல் வலுவிழந்துள்ளன.

விண்ணப்பங்கள் முறையாகப் பரிசீலிக்கப்படாமலும், இடமாற்றத்துக்கான பதிலீடுகள் சரியாக இடம்பெறாமையுமே இடமாற்றங்கள் வலுவிழந்துள்ளனமைக்க காரணம் என்று கூறப்படுகின்றது.குறிப்பிட்ட உள்ளூராட்சி திணைக்களத்துக்கான இடமாற்றங்கள் விண்ணப்பங்களின் அடிப்படையில் இடம்பெறாமல் அரசியல் தலையீடுகள், செல்வாக்குகள் மந்தியிலேயே இடமாற்றங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன எனவும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

வலிகாமத்தில் உள்ள முகாமைத்துவ உதவியாளர்கள், நிகழ்ச்சி திட்ட உதவியாளர்கள் ஆகியோரின் விண்ணப்பங்கள் பரீசீலிக்கப்படாமல் வன்னி மாவட்டத்துக்கு எழுந்தமானமாக இடமாற்றங்கள் வழங்கப்பட்டன.

இதற்கு மாற்றீடாக உத்தியோஸ்தர்கள் மீள் பதிலீடு இன்றி உள்ளது. இதனால் உள்ளூராட்சி ஆணையாளரின் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படாத நிலைண்யிலும், உத்தியோகஸ்தர்கள் விடுவிக்கப்பட முடியாத நிலையிலும் உள்ளனர். (ம)

## காணவில்லை



மந்துவில் வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த மயில்வாகனம் தாமோதரம்பிள்ளை என்பவர் நேற்று(14.03.2013) வியாழக்கிழமை யாழ் நாவலர் வீதி சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்துக்கு வந்த இடத்தில் காணவில்லை இவர் 76 வயதான முதியவர் இயலாத நிலையில் உள்ளவர். வெள்ளை வேட்டியும், மஞ்சள் நிறசேட்டும் அணிந்துள்ளார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தகவல் தந்துதவவும், (தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப் படும்)

தொடர்புகளுக்கு:- **077 8683330**
**0777117315**

## மரண அறிவித்தல்

### ஜெகரா் சகன் ஜோகேஸ்வரி



அளவெட்டி அலுக்கையைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா -இரத்தினம்மா தம்பதியரின் மகள் ஜோகேஸ்வரி அவர்கள் நேற்று(14.03.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயரடசகனின் அன்பு மனைவியும் ஜெயசீலன், ஜெயந்தி, ஜெயசிறீ, ஜெயராணி, ஜெயரவினி, ஜெயந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் குணபாலன் (குணா போட்டோ), ஜேம்ஸ்புஸ்பராஜா, சிவரஞ்சன், சுரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இளங்கீரன், சாம்பவி ,அனுரன், கவிசன், மதுசன், இன்பமாறன், சதுர்சன், மிதுசன், பிரிந்தினி, நிஷாந்தினி, விதுசன், கோமகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை பி.ப.01.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

210 சேர் பொன் ராமநாதன் வீதி,
திருநெல்வேலி 0779050349

தகவல்: குணபாலன்
(குணா போட்டோ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### யாக்கோப்பு ஜெலஸ்ரின் ஜீவா

அன்னை மடியில்
26 * 08 * 1963



ஆண்டவன் அடியில்
15 * 03 * 2012

*ஓர் ஆண்டு ஆனதுவோ*
*உம் முகம் கண்டு*
*ஆறவில்லை எம் மனம்*
*அன்பும் பாசமும் நிறைந்த*
*பொக்கிசம் நீங்கள்*
*தினம் தினம் புலம்புகின்றோம் உம்*
*திருமுகம் காணாமல்*
*எங்கள் துயர் நீங்கவில்லை அப்பா...*

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் தர்மராஜேஸ்வரன்

(ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், மக்கள் வங்கி )



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை, சிவலிங்கப்புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தர்மராஜேஸ்வரன் நேற்று(14.03.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்(ஓய்வு பெற்ற உ.அ.அதிபர் மட்டக்களப்பு)-கண்மலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரட்ணசபாபதி-நாகேஸ்வரி(ஓய்வு பெற்ற அதிபர்) தம்பதியரின் அன்பு மருமகனும், நாகராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தார்மீகனின்(SOFT WARE ENGNEER, KUWAIT)அன்புத் தந்தையும், பரமேஸ்வரன்(சட்டத்தரணி), கனகராஜேஸ்வரன்(இளைப்பாறிய மருந்தாளர்), காலஞ்சென்றவர்களான ஜெயந்திரன், ஜெகதீஸ்வரி(இளைப்பாறிய ஆசிரியை கிறிஸ்தவக் கல்லூரி), மற்றும் விமலேஸ்வரி, மகேஸ்வரன்(மாரியம்மன் மோட்டோர்ஸ்), குலராஜராஜேஸ்வரி, தயாளன்டேஸ்வரன்(அப்பன், மாரியம்மன் மோட்டோர்ஸ்), ஜெயமங்கலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராஜஇராஜேஸ்வரி மற்றும் இராஜஇராஜேஸ்வரன்(இளைப்பாறிய விரிவுரையாளர்), நாகராஜேஸ்வரன் (இளைப்பாறிய பொறியியலாளர்), தியாகராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரன் (STORE KEEPER , கைதடி), இரத்தினேஸ்வரி (இளைப்பாறிய ஆயுள் வேத வைத்தியர்), திலகவதி(ஆசிரியை), பராசக்தி(ஆசிரியை), காலஞ்சென்ற சிவலோகநாதன்(ஓய்வு பெற்ற விரிவுரையாளர்), மற்றும் மணிமேகலை , காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.03.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 03.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.தார்மீகன்(மகன்)

சக்கடத்தார்வளவு,கோப்பாய்.

## மரண அறிவித்தல்

### *மாணிக்கம் மதுரநாயகம்*
### *(சின்னராசா)*



இணுவிலைப் பிறப்பிடமாகவும், மூத்தவிநாயகர் வீதி அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் மதுரநாயகம் (சின்னராசா) நேற்று (14.03.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் -சின்னத்தங்கம் தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை -சொர்ணம்மா தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும், நிர்மலா, குலேந்திரன், தர்மினி, காலஞ்சென்ற சுதர்சினி மற்றும் சதீஸ், நிறஞ்சனா, மைதிலி, ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அருணராஜ் மற்றும் குருபரன், சஞ்சீவறீக ன், மித்திரகுமார், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், நிமல்ராஜ், அன்புராஜ், அரவிந்தன், அமல்ராஜ், கீர்த்தனா, ஜீவிதா, சிறிராஜ், கோபிகா, கரிஸ்ரதன், சஞ்ஜித், துர்க்கா ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெனிபர், தூரி, மிலானி, றூபினி, டனோஜன், அருணஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2013) வெள்ளிக்கிழமை பி.ப 03.30 மணிக்கு இல-223, மூத்தவிநாயகர்வீதி, நல்லூர் கிழக்கில் அமைந்திருக்கும் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

223, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர் கிழக்கு, அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.